# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 228 | ஆனி 28ஆம் நாள் | வியாழக்கிழமை 12 ஜூலை 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


### புலிகளின் வரிச்சீருடை முல்லைத்தீவில் மீட்பு



முல்லைத்தீவு, ஜூலை 12
முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் உள்ள பொது நோக்கு >> 25

### கல்லுண்டாயில் வாள்களுடன் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 12
கல்லுண்டாய் வெளிப் பகுதியில் வாள்களுடன் நான்கு இளைஞர்கள் >> 06

### வடக்கு உறவுகளுக்காக கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 12
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 500 நாள்களுக்கு மேலாகப் போராடி >> 06

# தனிக்கட்சி ஆரம்பிக்கும் நடவடிக்கை எதுவுமில்லை

## கனேடியத் தூதுவருக்கு விக்கி எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதிய கட்சி ஆரம்பிக்கவுள்ளாரா என்பது தொடர்பில் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் மக்கினன், முதலமைச்சர் விக்னேஸ்வரனிடமே நேற்று நேரடியாகக் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கான நடவடிக்கை எதுவுமில்லை என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளித்துள்ளார். 'எனது அரசியல் எதிர்காலத்தைப் பற்றிக் கேட்டார். புதிய கட்சி உருவாக்கப் போகின்றீர்கள் என்று பத்திரிகைகளில் செய்தி >> 23

## விலை அதிகரிப்பை பொறுத்தருள்க

தமிழ் மக்களின் குரலாக மூன்று தசாப்த காலமாக தாயக மண்ணிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'உதயன்', எட்டு ஆண்டுகளின் பின்னர் விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளான்.

பன்னாட்டுச் சந்தையில் பத்திரிகை அச்சுத்தாளுக்கு என்றுமில்லாதளவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சந்தையிலுள்ள பத்திரிகை அச்சுத்தாளின் விலையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதற்கு மேலாக, பத்திரிகை அச்சிடலுக்குரிய ஏனைய பொருள்களின் விலையும் பெருமளவு அதிகரித்துள்ளது. எரிபொருளின் விலையும் கூட்டப்பட்டுள்ளது.

பத்திரிகை அச்சிடுவதற்கான செலவுகள் கட்டுக்கடங்காமல் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்தபோதும், அந்தச் சுமையை 'உதயன்' தன் வாசகர்கள் மீது சுமத்தவில்லை. மலை போன்ற அந்தப் பெருஞ் சுமையை 'உதயன்' தானே தாங்கிக் கொண்டான். அந்த நிலமை கைமீறிப் போய் விட்டது. பெருஞ் சுமையில் ஒரு நூல் அளவை வாசகர்களிடம் கையளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் 'உதயனுக்கு' ஏற்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வருகின்றது. உதயன் தினசரியின் புதிய விலை 30 ரூபாவாகவும், ஞாயிறு 'உதயனின்' விலை 40 ரூபாவாகவும் இருக்கும்.

'உதயனுக்கு' உரமூட்டிய, இடர் வந்தபோது தோளோடு தோள் கொடுத்து தொடர்ந்தும் 'உதயனைத்' தாங்கிப் பிடித்திருக்கின்ற எங்கள் வாசகர்கள் இந்த விலை அதிகரிப்பை பொறுத்துக் கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

உங்கள் தேடலுக்கும், ஆர்வத்துக்கும் தீனி போடும் வகையிலும், பக்கம் சாராது, துணிச்சலாக, உள்ளதை உள்ளபடி 'உதயன்' தொடர்ந்தும் உரத்துச் சொல்லுவான்.

அன்புரிமையுடன் நிர்வாகம்

## வவுனியாவில் கோர விபத்து 2பேர் சாவு: 3பேர் படுகாயம்

### மகளை அழைத்துவரச் சென்றபோது பரிதாபம்



வவுனியா, ஜூலை 12
வவுனியா, புளியங்குளம் இராமனூர் பகுதியில் நேற்று அதிகாலை 5மணிக்கு இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மூவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். >> 06

### இந்திய அயலுறவுத்துறை செயலர் இலங்கை வருகை

கூட்டமைப்புடனும் பேச்சு

கொழும்பு, ஜூலை 12
இந்திய அயலுறவுத்துறைச் செயலர் விஜய் கோகலே இலங்கைக்கு நாளை வெள்ளிக்கிழமை வருகை தரவுள்ளார். >> 25

### மகேஸுக்கு பதவி நீடிப்பு

கொழும்பு, ஜூலை 12
இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் >> 23

### வடக்கு - கிழக்கு அபிவிருத்திச் செயலணியில் பங்கேற்கப்போவதில்லை

அரசியல் தீர்வின் பின்னரே அபிவிருத்தி என்கிறார் விக்கி >> 23

### போதைப் பொருளைக் கட்டுப்படுத்தத்தான் வடக்கில் இராணுவமாம்

இப்படி சொல்கிறார் குரே

யாழ்ப்பாணம், ஜூலை 12
வடக்கு மாகாணத்தில் அதிக >> 06

### கோட்டைக்குள் இராணுவம் தற்காலிக முகாம் அமைக்கலாம்

நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்கிறார் வடக்கு முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 12
வடக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தினர் நிரந்தரமாக வெளியேறுவார்களாயின், கோட்டைக்குள் அவர்கள் தற்காலிக முகாம் அமைக்கலாம். ஒருபோதும் நிரந்தர முகாம் அமைத்துத் தங்குவதற்கு அனுமதிக்க முடியாது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் >> 25

### வேறு வழியில்லை!

## தூக்குத் தண்டனைக்கு கையொப்பமிடுவேன்

மைத்திரி அதிரடி அறிவிப்பு

**குடுமாபியாக்கள் 19பேர் தூக்கிலிடப்படுவர்?**

கொழும்பு, ஜூலை 12
போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நிலையிலும் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்பு >> 06

### றெஜினா கொலை: முக்கிய சந்தேகநபர்கள் இன்னமும் கைதாகவில்லை

மன்றில் சட்டத்தரணி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 12
சுழிபுரம் சிறுமி கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிலர் இன்னமும் கைது செய்யப்படாமையால் சுதந்திரமாக நடமாடுவதாக, சிறுமியின் உறவினர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரி >> 06

## கட்சிக் குழப்பங்களுக்கு பொறுப்பேற்க முடியாது

அமைச்சரவை விவகாரத்தில் குரேயின் பதில்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வடக்கு மாகாண முதலமைச்சர் தனது கட்சிக்குள் இருக்கின்ற முரண்பாடுகளுக்காக, அவர் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் குழப்பங்களுக்கு எல்லாம் நான் பொறுப்பேற்க முடியாது. இவ்வாறு வடக்கு மாகாண >> 23




Member of
0114 700 100 / 0767 447 084
எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
இல. 120-120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்: info@assetline.lk
எசட்லைன்

# 19 பேருக்கு தூக்கு

## நிறைவேற்றுவதற்கான ஆவணத்தில் விரைவில் மைத்திரி கையொப்பம்

கொழும்பு, ஜூலை 12
போதைப்பொருள் தொடர்பான பெரும் குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 19 பேருக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

தொடர்ச்சியாகப் போதைப்பொருள் தொடர்பான பெரும் குற்றங்களில் ஈடுபட்ட 19 பேருக்கே தூக்குத் தண்டனையை நிறைவேற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.
19 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பான ஆவணத்தில் அரச தலைவர் கைச்சாத்திடவுள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
தெரிவுசெய்யப்பட்ட சில குற்றவாளிகளிற்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்காக இலங்கையை பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் கண்டிக்கப்போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது என்று நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதிகரித்துச் செல்லும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனை தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்குப் பெரும்பாலான அமைச்சர்கள் தமது கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்துள்ளனர்.
போதைப் பொருள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் தகவல்களைத் தருமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரலவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அரச தலைவர் போதைப் பொருள் வியாபாரத்திலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காக வெறுப்புடனாவது இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.
நாட்டின் வரலாற்றில் ஒருவரை நிலையாக நிற்க வைத்துக் கொலை செய்தல், தலையைத் துண்டித்து கொலை செய்தல், தண்ணீரில் அமிழ்த்தி கொலை செய்தல் உட்பட மரண தண்டனை முறைமைகள் காணப்பட்டன. முதல் முறையாக ஒருவரைத் தூக்கில் தொங்க வைத்துத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டமை 1812 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியே ஆகும்.
இலங்கையில் கடைசியாக ஒருவர் தூக்கில் போடப்பட்டமை 1976 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி ஆகும். அன்று தொடக்கம் கடந்த 42 வருடங்களாக தூக்குத் தண்டனை நாட்டில் நடைமுறையில் இல்லை.
நாட்டுச் சட்டத்தின் படி, அரசுக்கு எதிராக சதி செய்தல், இராணுவக் கிளர்ச்சி செய்தல், போதைப் பொருள் வியாபாரம், கொலை செய்தல் போன்ற குற்றச் செயல்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றது. (ரி4)

## சீரற்ற காலநிலையால் போக்குவரத்துப் பாதிப்பு

நுவரெலியா,ஜூலை 12
மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் ஹற்றன் டயமக வீதியின் போக்குவரத்துத் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மண் சரிவு அபாயத்தை அடுத்தே போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது. மலையகத்தில் சீரற்ற காலநிலை நிலவுவதால் சாரதிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி4)



## மாணவர்களுக்கான செயலமர்வு



யாழ்ப்பாணம்,ஜூலை 12
புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை தரம் 5 மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று நடைபெற்றது.
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி. புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில்பாடசாலையின் அபிவிருத்திக் குழுவின் அனுசரணையுடன் செயலமர்வு இடம்பெற்றது. (ரி4,159)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய நபர் கைது

கிளிநொச்சி, ஜூலை 12
அனுமதிப்பத்திரம் இன்றி வயல் நிலத்தில் மணல் வெட்டி ஏற்றிய குற்றச்சாட்டில் உழவியந்திரமும் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார் என்று கிளிநொச்சி மாவட்டப் போதைப் பொருள் மற்றும் முறைதவறல் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் மருதநகர் 4 ஆம் வாய்கால் பகுதியில் உள்ள வயல் நிலத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி வயல் நிலத்தில் மண் வெட்டி ஏற்றிய உழவியந்திரமும் அதன் சாரதியுமே கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்ற நடவடிக்கை மற்றும் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.
கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் சந்தேகநபர் நேற்று முன்படுத்தப்பட்டார்.
சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ரி4,6)

## பரிசில் நாள் நிகழ்வு

சாவகச்சேரி,ஜூலை 12
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பரிசில் நாள்நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதிபர் சே.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்திராக யாழ்ப்பாணம் இந்தியத் தூதரக கொன்சியூலர் ஜெனரல் பாலச்சந்திரன் கலந்து கொண்டார்.
சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி வலயக்கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாசனும் மதிப்புறு விருந்தி னராகக் கல்லூரியின் பழைய மாணவியும்ஆசிரியையுமானஇவாஞ்ஜெலின் யோகமணி அழகரட்ணமும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் ஆசிரிய சங்கத்தினால் கடந்த வருடம் ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியாக 1 லட்சம் ரூபாவும் பயிற்றுவித்த ஆசிரியைக்கு 20 ஆயிரம் ரூபாவும் முதன்மை விருந்தினரால் வழங்கப்பட்டன. (ரி4,9,159)



## போதையூட்டும் பொருள்களுடன் யாழ். போதனாவுக்கு வரமுடியாது

### நிர்வாகத்தினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் மதுபானம், போதையூட்டும் பொருள்கள் கொண்டுவருவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.
போதையூட்டும் பொருள்களுடன் வருவோர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
வெற்றிலை மென்று வருவோரும் வெற்றிலை, பாக்கு மற்றும் புகையிலை கொண்டு வருவோரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோரை பார்வையிட வருவோர் கொண்டு வரும் உணவு, உடை முதலான உடைமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பரிசோதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தினமும் 4 ஆயிரத்து 500க்கும் அதிகமானோர் சிகிச்சை பெறும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைச் சுத்தமாகப் பேணுவதற்கும் நோயாளர்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ரி4)

## டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகரிப்பு


### திருமலையில் 184 பேர் பாதிப்பு

திருகோணமலை,ஜூலை 12
திருகோணமலை நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 184 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். டெங்குத் தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது;
இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையான காலப்பகுதியில் 184 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். உவர்மலை, சிவபுரி, ஜின்னாநகர், சோனகர் தெரு, கல்லூரி வீதி ஆகிய இடங்களில் டெங்குத் தொற்று அதிகமாகவுள்ளது.
டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரத் திணைக்களம், நகராட்சி மன்றம், கிராம சமூக மட்ட அமைப்புக்கள் என்பன வீடு வீடாகச் சென்று டெங்குப் பரிசோதனைகளை நடத்துகின்றனர். டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை இனங்கண்டு அழிக்கின்றனர்.
சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழையால் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி4)

STUDY IN CANADA
உங்கள் உயர் கல்வியினை கனடா நாட்டில் தொடர விரும்பும் மாணவரா நீங்கள்.
இன்றே 5 வருடகாலம் மக்களின் நம்பிக்கையினை பெற்று இயங்கி வரும் WINSTAR இனை நாடுங்கள்.
- நீங்கள் விரும்பும் பாடநெறி தேர்வு
- 100% விசா உத்தரவாதம்
- இலங்கையின் எப்பகுதியிலும் இல்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்
- வங்கி நிலுவை ஏற்பாடுகள்

JAN 2019 INTAKE செல்ல விரும்பும் மாணவர்கள் 31.07.2018 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
மேலதிக விபரங்களுக்கு முன்பதிவு செய்து நேரில் வரவும்
அலுவலக நேரம் : 11 am - 4 p.m
WINSTAR CONSULTANTS PVT LTD
45, VEMBADI STREET, JAFFNA.
021 300 4641

## கரையொதுங்கியது இராட்சத டொல்பின்



மன்னார், ஜூலை 12
தனுஸ்கோடி அருகே மன்னார் வளைகுடா கடற் பகுதியில் இறந்த நிலையில் இராட்சத டொல்பின் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியதாகப் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.
தனுஷ்கோடி அருகே முகுந்தராயர் சத்திரம் கடற் பகுதியில் அரியவகை இனத்தைச் சேர்ந்த டொல்பின் மீன் இனமே கண் பகுதியில் காயம் அடைந்த நிலையில் கரைஒதுங்கியுள்ளது.
கரை ஒதுங்கிய மீனை அவதானித்த அந்தப் பகுதி மீனவர்கள் வனத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தனர்.சம்பவ இடத்துக்கு வந்த அதிகாரிகள் கரை ஒதுங்கிய டொல்பினை கால் நடை மருத்துவர் மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை செய்த பின் மணலில் புதைத்தனர். இந்த டொல்பின் சுமார் 50 கிலோகிராம் எடையும் 5 அடி நீளம் கொண்ட 9 வயதுடையது என்று துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்த வகை மீன் இனங்கள் ஆழ் கடலில் வசிப்பவை. விசைப்படகுகள் மற்றும் பெரிய கப்பல்களில் அடிப்பட்டு இறந்திருக்கலாம் அல்லது கடலில் வீசி எறியப்படும், பிளாஸ்டிக் வலைகளை சாப்பிட்டு சாவடைந்து இருக்கலாம் என்று மீனவர்கள் தெரிவித்தனர். இவற்றை வேட்டையாடினால் 3 தொடக்கம் 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று துறைசார்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-56)

# புதிய அரசமைப்பு உருவாவதில் அரசின் தலைவர்களுக்கு ஆர்வமில்லை

### இப்படிச் சொல்லுகிறார் அமைச்சர் மனோ



யாழ்ப்பாணம், ஜூலை 12
புதிய அரசமைப்பு கொண்டுவரப்படாது என்று தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல், அரச கரும மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோ கனேசன் தெரிவித்தார்.
ஐ. டப்ளியூ.பி.ஆர். எனப்படும் போர் மற்றும் சமாதானம் தொடர்பிலான அறிக்கையிடல் கற்கை நிலையம் சார்பாக, அமைச்சர் மனோ கணேசனை அமைச்சில் நேற்றுச் சந்தித்த புலனாய்வு ஊடகவியலாளர்களிடமே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதில் தலைமை அமைச்சருக்கும், அரச தலைவருக்கும் எந்த ஆர்வமும் இல்லை. புதிய அரசமைப்பு என்பது சாத்தியமற்றது.
எனது அமைச்சூடாகப் புதிய அரசியல் அமைப்பில், சிங்களம், தமிழ் ஆகிய இரு அரச கரும மொழிகளுக்கும் சமனான நிலையை உறுதி செய்யும் விதமாகக் கொண்டுவர இருந்தத் திருத்ததை 21ஆம் அரசமைப்புத் திருத்தம் ஊடாகக் கொண்டுவர உத்தேசித்துள்ளேன். அதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து நட வடிக்கையை மேற்கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.
எமது அரசமைப்பில் அரச மொழி குறித்த அத்தியாயத்தில், முதலில் சிங்கள மொழி அரச மொழியாக எழுதப்பட்டுள்ளது. அடுத்த வரியில் தனியாகவே தமிழ் மொழியும் அரச கரும மொழி என கூறப்பட்டுள்ளது. தமிழ் மொழியும் அரச கரும மொழி என கூறப்பட்டிருப்பதன் ஊடாக தமிழ் மொழிக்குரிய சம தகுதி தொடர்பில் சிறு சிக்கல் உள்ளதாக தோன்றுகின்றது.
புதிய அரசமைப்பு ஊடாக இதனை திருத்தி சிங்கள, தமிழ் மொழிகள் அரச கரும மொழி என எழுத உத்தேசித்திருந்தோம். எனினும் தற்போதைய சூழலில் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படமாட்டாது. ஆட்சியாளர்கள் அரசியல் யாப்பை கொண்டு வருவதில் எந்த அக்கறையையும் காட்டவில்லை.நாம் உத்தேசித்த அரசமைப்பு திருத்தத்தை, 21 ஆம் அரசியல் திருத்தம் ஊடாக கொண்டு வந்து சிங்கள, தமிழ் மொழியின் சமத்துவத்தை உறுதி செய்ய உத்தேசித்துள்ளோம்.
தற்போது சிங்கள, தமிழ் மொழிகளில் அரச நிர்வாகங்களில் சேவையை வழங்க போதிய ஆளணி இல்லாத நிலையில், மொழி ஒருங்கிணைப்பாளர்களை மிக விரைவில் அது தொடர்பில் நியமிப்போம். அதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் தற்போ்தும் இடம்பெற்று வருகிறது .ஒரு குறிப்பிட்ட பிரிவுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன - என்றார். (7-71)

## விஜயகலாவுக்கு சாபமிட்ட மகிந்த அணியினர்

யாழ்ப்பாணம், ஜூலை 12
விடுதலைப் புலிகள் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அண்மையில் தெரிவித்த கருத்துக்கு எதிராக அரசு இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டு எதிரணியினர் சீனிகம தேவாலயத்தில் நேற்றுத் தேங்காய் உடைத்துச் சாபமிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
விடுதலைப் புலிகள் மீள் உருவாகவேண்டும் என்று விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தெற்கில் உள்ளவர்கள் மத்தியில் சூடு பிடித்துள்ள நிலையில், அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் குரல் கொடுத்து வருகின்றனர். இந்த விடயத்துக்கு அரசு இன்னமும் நடவடிக்கை எடுக்காத நிலையில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை, மாகாண சபை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு ஆலயத்தில் தேங்காய் உடைத்தனர். பின்னர் குறித்த இடத்தில் சுமார் அரை மணிநேரம் அமைதிப் போராட்டம் ஒன்றையும் நடத்தினர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (7)

## அசிட் அருந்திய சிறுவன் மருத்துவ மனையில் சேர்ப்பு

சாவகச்சேரி, ஜூலை 12
தண்ணீர் என்று நினைத்து அசிட் அருந்திய சிறுவன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மட்டுவில் கிழக்கு சந்திரபுரத்தில் இடம் பெற்றுள்ளது.
நகை உற்பத்திக்கென கொள்வனவு செய்யப்பட்ட அசிட்டை விளையாடிய களைப்பில் ஓடிவந்த சிறுவன் தண்ணீர் என்று நினைத்து அருந்தியுள்ளார்.
இந்தச் சம்பவத்தையடுத்து சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட் டார் என்று தெரிவிக்கப்பட்டது. (7-9)

## அரசியலை விட்டு விலகமாட்டேன் விஜயகலா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
அமைச்சர் பதவியை இழந்தாலும், தான் அரசியலை விட்டு விலகப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் புத்துயிர் பெறவேண்டும் என்று ஏன் கூறினீர்கள் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் முடிவடையும் போது இதற்கான பதில் கிடைத்து விடும். எனினும், இன வெறுப்பைத் தூண்டும் நோக்கில் நான் விடுதலைப் புலிகள் பற்றிக் கருத்து வெளியிடவில்லை.நான் அமைச்சர் பதவியை இழந்திருக்கலாம் , ஆனாலும், அரசியலை விட்டு விலகமாட்டேன். தொடர்ந்து மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவேன் - என்றார். (7)

### யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின்

## விபத்துச் சிகிச்சைப் பிரிவுக் கட்டடப் பணி தொடர்வதற்கு அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் விபத்துச் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டப்பணிகளைத் தொடர்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் இரண்டாம் கட்ட கட்டட அமைப்புப் பணிகளை முன்னெடுக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் ஆயிரத்து 224.6 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.
மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு 5ஆம் மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு முதலாம் கட்ட அமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளது. இரண்டாம் கட்டமாக அதன் 2ஆம் மாடியில் இருந்து 5ஆம் மாடி வரையில் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
இதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்வனவுக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் இரண்டாம் கட்ட அமைப்புப் பணிகள் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.கட்டுமான வேலைகள் தொடர்பாக சுகாதாரம் போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது - என்றார். (7)

## வடக்கு மக்களுக்காக இருக்கின்ற காலத்தைப் பயன்படுத்துங்கள்

### என்கிறார் அமைச்சர் நிமால்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வடக்கு மக்களுக்குச் சேவை வழங்குவதில் மக்களின் பிரதிநிதிகள் தவறிழைத்துவிடக் கூடாது. இன்னமும் உள்ள குறுகிய காலப் பகுதிக்குள் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்கவேண்டும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்தார்.
விவசாயத்துறை பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அங்கஜன் இராமநாதனின் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு அரசு ஆட்சி பொறுப்பேற்றதன் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வடக்கு மக்களின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளார். தற்போது மீதமுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே அங்கஜன் இராமநாதனுக்குப் பிரதி அமைச்சு பதவியை வழங்கியுள்ளார். மக்கள் நலன்களுக்கான நியமனங்கள் மூலம் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளார்.
கடந்த கால ஆட்சியிலும் வடக்கு மக்கள் சிறிலங்கா சுதந்திர கட்சியை ஆதரித்திருந்தனர். தற்போதும் ஆதரவளித்து வருகின்றனர். இதனைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின் அந்த மக்களுக்கான சேவையை முறையாக வழங்க வேண்டும். வடக்கில் வாழும் பெருந்தொகையான மக்கள் விவசாயத்தை அடிப்படையாக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே அவர்களின் பொருளாதார மட்டத்தை அதிகரிக்க வருமானத்தை அதிகரிக்கவேண்டும். அவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (7-31)

## கொடியேற்றம்

வடமராட்சி, ஜூலை 12

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பெருந்திரு விழா நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணி யளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகின்றது.

16 தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவில் முக் கிய உற்சவங்களான வசந்தோற்சவம் எதிர் வரும் 16ஆம் திகதி செவ் வாய்க்கிழமையும், தேர்த் திருவிழா 26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா மறு நாள் 27ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 6 மணிக்கும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பட்டுத்தீர்த்த உற்சவமும் இடம்பெற்று மாலை 4 மணிக்கு கொடி இறக்கத்துடன் பெருந்திரு விழா நிறைவுபெறும்.

மகோற்சவ நாள்களில் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 7 மணிவரை பாடசாலைச்சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். தினமும் உற்சவங் கள் காலை 10 மணிக்கு இரவு 9 மணிக்கு நிறைவு பெறும்.

மகோற்சவத்தைக் கிரியா ரத்தினம் பிரம்மஸ்ரீ சதா சிவகுமாரக் குருக்கள், சிவாகம கிரியா நிதி பிரம்ம ஸ்ரீ சதா சிவ சுரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் இணைந்து நடத்துவார் கள். (எ173)

## யந்திர பூசை நாளை

கொடிகாமம், ஜூலை 12

யாழ்ப்பாணம், மீசாலை வடக்கு இராமாவில் கந்த சுவாமி ஆலயத்தின் குட முழுக்குக்கான யந்திர பூசை நாளை வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின் றது. எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை குடமுழுக்கு நடைபெற வுள்ளது.

அதனை முன்னிட்டு யந் திர பூசை இடம்பெறவுள் ளது. குடமுழுக்கு நிகழ்வு கள் தொடர்ந்து 45 நாள் கள் நடைபெறும். தின மும் காலை 7 மணிக்கு பூசைஆரம்பமாகும்என்று ஆலய முதன்மைக் குருக் கள் தெரிவித்தார். (எ159)

# வீதி செப்பனிட்டும் குறியீடுகள் இன்னமும் பொறிக்கப்படவில்லை

## நிதி இன்மையே காரணம் என்கிறது வீதி அபிவிருத்தி அதிகார சபை



யாழ்ப்பாணம், ஜூலை 12

வீதி செப்பனிடப்பட்டுத் திருத்தப்பட்ட போதும் அதற்கான குறியீடுகள் நிதி இல்லாமை யாலேயே பொறிக்கப்படவில்லை என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொடிகாமம் சந் தியில் இருந்து கச்சாய் வரை யான முதன்மை வீதி செப்ப னிட்டுத் திருத்தப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அதற்குரிய குறியீடுகள் இது வரை பொறிக்கப்படவில்லை.

இந்த வீதியில் கொடிகாமம் திரு நாவுக்கரசு மத்திய கல்லூரி மற்றும் அதனுடைய ஆரம்பக் கல்விக்கான பாடசாலை இரண் டும் வீதிக்கு இரு மருங்கிலும் எதிரெதிரே காணப்படுகின்றது.

பாடசாலைகளில் தரம் 1 முதல் உயர்தரம் வரை மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த வீதியில் பாடசாலை நேரங் களில் அதிகரித்த வாகனப் போக்கு வரத்து காணப்படுகின்றது.

இரண்டு திசையிலும் வருகின்ற மாணவர்கள் வீதிக்குக் குறுக் காகக் கடந்து செல்கின்ற னர். இது மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செயற்பா டாகும். இந்தப்பகுதியில் பாதசா ரிக் கடவை மற்றும் குறியீடுகள் இன்மையால் சாரதிகள் சிலர் வாகனங்களை விரைவாகச் செலுத்துகின்றமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

மாணவர்களதும் பாதசாரிக ளதும் நலன் கருதிப் பாடசா லைக்கு அருகில் பாதசாரிக்கட வையை விரைவாக அமைத் துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம், வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் பொறியியற் பிரிவுடன் 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்டபோது:

இந்த வீதியின் செப்பனிடும் பணி கடந்த இரு மாதத்துக்கு முன்னர் முடிவடைந்துள்ளது. ஒரு வீதியைச் செப்பனிடும்போது அதற்கான நிதியைக் கொழும்பு அமைச்சே வழங்கும். நிதி ஒதுக் கீடு எவ்வளவு என்று அறிந்த பின்னரே வேலைகளை ஆரம் பிப்போம்.

வேலைகள் நிறைவடையும் தருவாயில் அதற்கான நிதி எமக்கு வந்து சேரும். ஆனால் இந்த வீதிக்குரிய நிதி இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே ஒப்பந்தக்காரர்களுக்கு நிதி வழங்க முடியவில்லை. இத னால் வீதி சீரமைப்புடன் கோடு கள் போட முடியவில்லை. கொழும்பு அமைச்சிடம் இருந்து நிதி கிடைத்ததும் குறியீடு போடும் வேலைகள் நடை பெறும் - என்றனர். (7-72)



நடுவண் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் அலகால் 8 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் வதிவிடக் கட்டட வேலைகள் முழுமையடைந்ததை யடுத்து நேற்று இந்துசமய முறைப்படி பால் காய்ச்சிப் படங்கள் வைக்கப்பட்டன.

## 'கறுப்பு ஜூலையை ஒளிமயமாக்குவோம்' யாழில் நிகழ்வு

"இருண்ட 'கறுப்பு ஜூலை' யை மனிதாபிமான தீபச்சுட ரேற்றத்தால் ஒளிமயமாக்குவோம்" எனும் தொனிப்பொரு ளில் யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் (கிட்டு) மைதா னத்தில் தீபச்சுடரேற்றல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சோசலிச இளைஞர்சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், தேசிய பிக்கு முன்னணி, சோசலிச கலை சங்கம், தேசிய புத்திஜீவிகள் ஒன்றியம் போன்ற சங்கங்கள் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுக்கின்றன. (எ)





யாழ்ப்பாணம், சாவகச்சேரி சங்கத்தானை முருக மூர்த்தி கோவில் பெருந் திருவிழாவின் தேர்த் திரு விழா நேற்று நடைபெற்றது.

## சுற்றுலாத் தளமாக கொழும்புத்துறை கடற்கரை

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் கொழும்புத்துறைகடற்கரைப்பிரதேசத்தை சுற்றுலாத் தளமாக மாற்றி மைப்பதற் கான நடவடிக்கைகளை மாநகர முதல்வர் மேற்கொண்டுள்ளார் என மாநக ரப் பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய 67ஆவது ஆண்டு நிகழ்வில் முதன்மை விருந்தி னராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைப் பிரதேசம் போன்று கொழும்புத்துறை கடற்கரையும் மக்களின் பொழுதுபோக்கு இடமாகவும் சுற்றுலாப் பயணிகளைக் கவ ரும் வகையில் மாற்றியமைக்கப்படும்.

தற்போது துறைமுகச் சந்தியில் இருந்து மணியந்தோட்டம் சந்தி வரைக்குமான கடற்கரையை அண்டிய பகுதியில் நடை பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாதைக் கான மின் விளக்குகளும் விரை வில் பொருத்தப்படும் - என்றார். நிகழ்வில் ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம் பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்க் ளுக்கு முதன்மை விருந்தினரால் பரிசில் கள் வழங்கி வைக்கப்பட்டன. (17)

## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம், ஆறுகால்மடம், அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் வண். ஸ்ரீ வைத்தி லிங்கம் வித்தியாலய மைதானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெ றவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ் மின், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் எம்.நிபாகிர், பன் னாட்டு மருத்துவர்களுக்கான வலைய மைப்பு ஒருங்கிணைப்பாளர் க.கபிலன், யாழ்ப் பாண கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ச. ஜெகதாரணி, கரம்பொண் சண்முகநாத மகா வித்தியாலய ஆசிரியர் சி.சசிரேகா மற்றும் கிராம சேவையாளர்களான ர.சல்பீர், றஜனி காந்த் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## 'முகிலெனக்கு துகிலாகும்' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் கவி ஞர் வடிவழகை யனின் 'முகிலெனக்குத் துகிலாகும்' என்ற கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கி ழமை பிற்பகல் 3.05 மணிக்கு யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற் கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும்.

"ஞாலச் சுழலுக்குள் நாங்கள் அகப் பட் டோமா?, காலச் சுழிக்குள்ளே காலைவிட்டுக் கொண்டோமா?" என்ற தலைப்புக்களில் பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## "அதீத வயிற்றுப் பருமனை குறைக்க சரியான வழி"+

### சுகாதாரம், போசாக்கு தொடர்பான ஆக்கப் பொருள்கள் கண்காட்சி

சாவகச்சேரி, ஜூலை 12

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களக் குடும்ப நல சேவையாளர்களின் வழிகாட்டலில் பிரதேச அன்னையர் கழகத்தினரால் ஆக்கப்பட்ட "அதீத வயிற்றுப் பருமனைக் குறைக்க சரியான வழி" என்னும் தொனிப் பொருளிலான சுகாதாரம் மற்றும் போசாக்குத் தொடர்பான ஆக்கப் பொருள்கள் காட்சிப் படுத்தல் நிகழ்வு சாவகச்சேரி, இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரி, சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பிராந்தியத் தாய் சேய் நல மருத்துவ அதிகாரி மருத்துவர் ஜீ.ரஜீவ், கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு, ஆக்கப் பொருள்களின் காட்சிக்கூடங் களைத் திறந்து வைத்தனர். ஆக்கப் பொருள் களைப் பெருமளவான மாணவர்களும் பெற்றோர்களும் பார்வையிட்டனர். (எ 9)



# நுண்நிதிக் கடனிலிருந்து மீட்க பிரதேசசபைப் பணத்தில் கடன்

## நல்லூர் பிரதேச சபைச் செயலர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 12

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட மக்களை நுண்நிதிக் கடன் நிறுவனங்களில் இருந்து காப்பாற்றப் பிரதேச சபைக்குச் சொந்தமான நிதியில் இருந்து கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நல்லூர்ப் பிரதேச சபைச் செயலர் சுதர்ஜனன் சபை உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

யாழ்ப்பாணம், நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உறுப்பினர் மதுசுதன் இது தொடர்பாகப் பிரேரணை கொண்டு வந்தார்.

நுண்நிதி நிறுவனங்கள் சபைக்குட்பட்ட பகுதிகளில் கடன் வழங்குவதாக இருந்தால் சபையின் அனுமதி பெற வேண்டும். கடனை வசூலிப்பதாக இருந்தால் மாலை 5 மணிக்கு முன்னர் வசூலிக்க வேண்டும். அதன் பின்னர் வீடுகளுக்குச் செல்லக் கூடாது என்ற பிரேரணையை அவர் முன்மொழிந்தார்.

அதன்போதே பிரதேச சபைச் செயலர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

நுண்நிதி நிறுவனங்கள் கடன் வழங்கக் கூடாது என்று கட்டளையிடும் அளவுக்கு எமக்கு அதிகாரம் உள்ளதா தெரியவில்லை. பெரும்பாலும் அந்த அதிகாரம்இல்லைஎன்றேஎண்ணுகின்றேன். பொதுமக்களை நாம் அந்த நிறுவனங்களில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால் சபை நிதியில் இருந்து இலகுக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். அதற்கு உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் வடக்கு முதலமைச்சரிடம் அனுமதி பெற வேண்டும். அனுமதிபெற்றால் நாம் அதை நடைமுறைப்படுத்தலாம் - என்றார். (எற8)

### சூரிய மின்கலம் அமைத்து மின்சாரம் உற்பத்திசெய்து விநியோகிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட அதிக வெப்பம் கிடைக்கக் கூடிய இனங்காணப்பட்ட இடங்களில் சூரிய மின்கலம் அமைத்து அதில் இருந்துவரும் மின்சார உற்பத்தியைப் பயன்படுத்தி மிகுதியை மின்சாரத்திணைக்களத்துக்கு விற்பனை செய்வதற்காக ஆவன செய்தல் வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு சபை மண்டபத்தில் சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தப் பிரேரணையை சபையின் உப தவிசாளர் ஜெயன் முன்மொழிந்தார்.

அவர் தனது பிரேரணையில்:

அதிகரித்து வரும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுக் காரணத்தால் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணம் என்பனவும் உயர்வடைந்துள்ளன.

மக்களுக்கு விழிப்புணர்வு செய்யவும், பிரதேச சபையினுடைய தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட அதிக வெப்பம் கிடைக்கக்கூடிய இனங்காணப்பட்ட இடங்களில் சூரிய மின்கலம் அமைத்து அதில் இருந்து வரும் மின்சார உற்பத்தியைப் பயன்படுத்தி மிகுதியை மின்சாரத் திணைக் களத்துக்கு விற்பனை செய்வதற்காக ஆவன செய் தல் வேண்டும் - என்றார்.

இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (எ8)



### கூகுல் கோம் கருவி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து வருகை தந்த சூரியகுமாரால் யாழ்ப்பாண விழிப்புலன் அற்றோர் சங்கத் துக்குக் கூகுல் கோம் கருவிப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் வைத்து சங்கத்தின் தலைவர் எ.எஸ் அற்புதராஜாவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (23)

### பிரேரணை கொண்டுவந்தவருக்கு புலனாய்வுப் பிரிவால் அச்சுறுத்தல்

நல்லூர் பிரதேச சபை அமர்வில் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பாற்பண்ணைப் பகுதியில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணியை மீட்க வேண்டும் என்று பிரேரணை கொண்டுவந்த பிரதேச சபை உறுப்பினர் சிவலோகநாதனுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுத்தமைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு சபை மண்டபத்தில் சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் சபை உறுப்பினர் மதுசுதன் இந்த விடயத்தைச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சபையின் கடந்த அமர்வில் சபை உறுப்பினர் சிவலோகநாதனை இராணுவத்திடமுள்ள காணியை மீளப் பெற்று அங்கு அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள் செய்யப்பட வேண்டும் என்று பிரேரணை முன்மொழிந்திருந்தார். சபை நடவடிக்கை முடிந்து வீடு சென்ற அவரை அலைபேசியில் தொடர்பு கொண்ட சிலர் தம்மைப் புலனாய்வுப் பிரிவினர் என்று அறிமுகப்படுத்தி, 'இந்த விடயத்தை எதற்காக சபையில் கொண்டு வந்தாய்? உன்னை யார் இதை செய்ய சொன்னது?' என அவரை அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கையைச் சபை மிகவும் கண்டிக்கின்றது. இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடந்தால் உடனடியாக சபைக்கு அறிவுறுத்தி நாம் தீர்வு காணவேண்டும். இது சாதாரண விடயமல்ல எனவே இது தொடர்பில் உறுப்பினர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருநெல்வேலி ஆலயம் ஒன்றில் தமிழீழ வரைபடத்துடன் அம்மன் வீதி உலா வந்தமை தொடர்பாக அந்த ஆலயத்தின் செயலராக இருந்த சிவலோகநாதனைப் புலனாய்வுப் பிரிவினர் நேரடியாகவும், அலைபேசி ஊடாகவும் விசாரணை செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எற8)

### வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை கடந்த மாதத்தை விடத் தற்போது சடுதியாக அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் இதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

தற்போதைய காலநிலை மற்றும் காற்றின் கடுமையான தாக்கத்தால் அனேகமான வாழைகள் ஒருவித நோய்க்கு இலக்காகியும் உள்ளன.

அதனைவிட ஆலயங்களில் மகோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகவும் வாழைப்பழத்தின் பயன்பாடும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில்தான் வாழைப்பழத்தின் விலையும் சடுதியாக அதிகரித்துக் காணப்படுவதாக வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக வாழைக்குலை விற்பனைக்குப் பெயர் போன இடமான நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தையில்கூடப் போதியளவு வாழைக்குலைகள் வந்து சேராததால் அவற்றின் விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தச் சந்தையில் கடந்த திங்கட்கிழமை ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 50 ரூபா தொடக்கம் 60 ரூபாவரைக்கும் விற்கப்பட்டன. (17)

முல்லைத்தீவில் இருந்து மாடுகடத்தல்

## வாகனத்துக்கு துப்பாக்கிச் சூடு பொலிஸ் உத்தியோகத்தரும் கைது!

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கள்ளமாடுகளை வெலிஓயா ஊடாகத் திருகோணமலைக்குக் கொண்டு செல்லும் முயற்சிக்கு உதவிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும், மாடுகளை ஏற்றிய வாகனத்தையும் துப்பாக்கிசூடு நடத்தி முள்ளிவளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இரண்டு குற்றவாளிகள் தப்பி ஓடியுள்ளாதாக முள்ளிவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து முள்ளியவளைப்பொலிஸார்மேலும் தெரிவிக்கையில் "நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவளை மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து கள்ளமாடுகள் ஏற்றப்பட்டு கடத்தப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய 5 மாடுகள் கப் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு அதில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் ஒத்துளைப்புடன், இரண்டு நபர்கள் முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியில் நாயாற்று பாலத்துக்கு அண்மித்த கோம்பாய் சந்தி பகுதியில் கொக்கிளாய் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த, கப் வாகனத்தை இரவு 11 மணியளவில் மறித்துள்ளார்கள். இதன்போது குறித்த வாகனம் நிற்கா மல் சென்றுள்ளது, வாகனத்தில் சில்லுக்கு துப்பாக்கி சூடு நடத்தி வாகனத்தை நிறுத்தியுள்ளனர் , அதில் இருந்த இரண்டு நபர்கள் தப்பி சென்றுள்ளார்கள்.

இந்த மாடு கடத்தலுக்கு துணைபுரிந்த யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாக கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை முள்ளிவளை பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

குறித்த வாகனமும், 5 மாடுகளும் கைதான பொலிஸ் அதிகாரியும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து விசாரணை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் முள்ளியவளை பொலிஸார்தெரிவித்தனர். (ரி3,26)

## பாடத்திட்டத்துக்குள் தற்காப்புக் கலையை உள்வாங்க வேண்டும்

நல்லூர் அமர்வில் தீர்மானம்:
அறிக்கை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பு

இளைய சமுதாயம் பாதுகாப்பாக நடமாடுதல் மற்றும் பாடசாலைகளுக்குச் சென்று பாதுகாப்பாக வீடு திரும்புவதற்காகப் பாடசாலைக் கல்வியில் தற்காப்புக் கலையைப் பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்க வேண்டும் என நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபையின் நான்காவது அமர்வு சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த அமர்வில் சபை உறுப்பினர் சி.கௌசலா குறித்த பிரேரணையை முன்மொழிந்தார்.

அவர் தனது பிரேரணையில் தெரிவித்ததாவது:

எமது இளைய சமூதாயம் நாளாந்தம் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் சவால்களை எதிர்கொண்டே கல்வியைப் பயில்கின்றனர். அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. ஆகவே மாணவர்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தற்காப்புக் கலைகள் புகட்டப்பட வேண்டும். எனவே பாடசாலைகளில் மாணவர்களின் பாடத்திட்டத்துக்குள் இந்தக் கலையை இணைக்க வேண்டும். இதற்குக் கொழும்பு கல்வி அமைச்சு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தனது பிரேரணையை முன்மொழிந்தார். இந்தப் பிரேரணையை சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் பிரதி கொழும்பு கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (எ-8)

## நவீல்ட் பாடசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம், கைதடி நவீல்ட் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் 51ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தலைவர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக கைதடி நவீல்ட் பாடசாலையின் அதிபர் கலந்துகொண்டார். மேலும் நிகழ்வில் விருந்தினர்களோடு, பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ)





## ஆளுநர் பணியகம் முன்பாகத் தனிமனித போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வடக்கு மாகாண ஆளுநர் பணியகத்துக்கு முன்பாகப் பெண் ஒருவர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார்.
வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்ததாகவும், அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் ஆளுநர் பணியக வாசலில் அமர்ந்து போராட்டம் நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.
பாடசாலையில் தற்காலிகமாக ஆசியராகக் கடமையாற்றியதாகவும், தனக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவையைப் பெற்றுத் தருமாறு கோரியுமே, ஆளுநரைச் சந்திக்க முற்பட்டதாக அவர் தெரிவித்தார். (5,8)

## போலி நாணயத்தாளுடன் யாழில் சிறுவன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 12
5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் மூன்றை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சிறுவன் ஒருவனை யாழ்ப்பாண நகரில் வைத்துக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்தாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.
'பொம்மைவெளிப் பகுதியில் நின்றிருந்தபோது அந்த வழியே வந்த வ்யோதிபர் மயங்கி வீழ்ந்ததாகவும், அவரை மயக்கம் தெளிவித்தபோது இந்தப் பணத்தை தன்னிடம் தந்தாகவும் சிறுவன் விசாரணையில் தெரிவித்தான்' என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (5,8)

## சம்பந்தனின் கோரிக்கையை நிறைவேற்றப் பாடுபடுவோம்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12
மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அரசு முடிந்தளவு முயற்சிக்கும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன நேற்றுத் தெரிவித்தார்.
'நாடு சுதந்திரமாக முன்னேறிச் செல்வதற்குப் புதிய அரசமைப்பு அவசியமாகும். புதிய அரசமைப்பு இல்லாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. மாகாண சபைகளுக்கான தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது அவசியமானது. இருந்தபோதும் இந்தத் தேர்தலுக்கு முன்னர் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு மாகாண சபைகளின் ஆட்சியதிகாரங்கள் அர்த்தமுள்ளதாக்கப்படவேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.
இந்தக் கருத்தை மேற்கோள்காட்டி அது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.
'இது சம்பந்தனால் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்றாகும். அதை நிறைவேற்றுவதற்கு எம்மால் முடிந்தளவு முயற்சிப்போம்' என்று ராஜித கூறினார்.
நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனை பதவியிலிருந்து நீக்கமுடியாது என்று முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா கருத்து வெளியிட்டுள்ளாரே என்று எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு, அவரது உரை தொடர்பில் சபாநாயகர், சட்டமா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளார். அந்த அறிக்கை கிடைத்ததும் சட்டமா அதிபரின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (5,31)

## யாழ்ப்பாணம் வந்தார் நாமல்

யாழ்ப்பாணம், ஜூலை 12
நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அரச தலைவரின் புதல்வருமாகிய நாமல் ராஜபக்ச, நான்கு ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தார். அவரது நண்பனின் திருமண நிகழ்வில் பங்கேற்பதற்கே அவர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)



### எரிபொருள் விலையேற்றத்தால்

## பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதா? இல்லையா?

### சங்கங்களுக்கிடையே முரண்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 12
எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் மத்தியில் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பேருந்துக் கட்டணங்களை எரிபொருள் விலையேற்றத்துக்கமைய மீண்டும் அதிகரிக்கவேண்டும் என்று அகில இலங்கை தனியார் பேருந்து சம்மேளனத்தின் பொதுச்செயலர் அஞ்சன பியஞ்சன் வலியுறுத்தியுள்ள நிலையில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்த விடயத்துக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த மாதம் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பேருந்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன. எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட விடயத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்படவில்லை. கட்டண அதிகரிப்புக்கு பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
எரிபொருள்களின் விலைகள் தொடர்பில் அரசு நிலையான விலைச் சூத்திரத்தை வகுக்கவேண்டும். விலையில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான பிரதான காரணிகளையும். அதற்கான நிரந்தரத் தீர்வு தொடர்பிலும் கவனஞ் செலுத்தவேண்டும்.
பன்னாட்டுச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதை காரணம் காட்டி பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்குமாறு அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. ஏனெனில் கடந்த மாதம் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து பொதுப் போக்குவரத்துச் சேவைகளை குறிப்பாக பேருந்தைப் பயன்படுத்துவோரின் வீதம் குறைவடைந்துள்ளது. அத்துடன் பயணிகளுக்கும் நடத்துநர்களுக்குமிடையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன.
கட்டணங்களை இரண்டு வருடத்துக்கு அதிகரிக்குமாறு எந்தவித அழுத்தங்களையும் அரசுக்குப் பிரயோகிக்க முடியாது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலே புதிய கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.
இந்த நிபந்தனைகளையும் தனியார் பேருந்துச் சங்கத்தினர் ஏற்றுக் கொண்டனர். ஆகவே இந்த விடயம் தொடர்பில் குறுகிய வட்டத்துக்குள் இருந்து தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. அரசு எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் மேற்கொள்கின்ற முடிவுகளுக்கு இணங்கவே அடுத்த கட்டத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் - என்றார். (7-61)

### வடக்கு...

வரும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் தாமரைத் தடாக கலையரங்குக்கு முன் இன்று மாலை 4 மணியிலிருந்து இரவு 11.30 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் போராட்டம் 510 நாள்களையும், வவுனியாப் போராட்டம் 503 நாள்களையும், முல்லைத்தீவுப் போராட்டம் 492 நாள்களையும், யாழ்ப்பாணப் போராட்டம் 483 நாள்களையும், திருகோணமலைப் போராட்டம் 498 நாள்களையும் எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5.114)

### கல்லுண்டாயில்...

மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
கல்லுண்டாய் வெளியிலுள்ள கோவிலில் உரையாடிக் கொண்டிருந்தபோது இவர்களைக் கைது செய்ததாகவும், அவர்களிடமிருந்து வாள் மற்றும் இரண்டு உந்துருளிகள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
நவாலியைச் சேர்ந்த 28 வயது இளைஞன், கோப்பாயைச் சேர்ந்த 29 வயது இளைஞன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 20 வயது இளைஞன், கல்வியன்காட்டைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஆகியோரே நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். மல்லாகம் நீதிமன்றில் இவர்கள் நேற்று முற்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்க மன்று உத்தரவிட்டது. (5,26)

### முக்கிய...

வித்தார். சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் கடந்த மாதம் 25ஆம் திகதி நடைபெற்றிருந்தது.
சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸார் சந்தேகத்தில் மூவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.
சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணையின் போது சிறுமியின் உறவினர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்ததாவது, படுகொலை செய்யப்பட்ட சிறுமி பாடசாலைக்கு தேங்காய் கொண்டு வந்ததாகவும், அந்தத் தேங்காயை சிறுமி படுகொலை செய்யப்பட்ட இடத்துக்கு அருகில் வைத்து சில இளைஞர்கள் உடைத்து உண்டு கொண்டு இருந்ததை கண்டதாகவும், சிறுமியின் சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் சில இளைஞர்கள் நின்றதை கண்டதாகவும் சிறுவன் ஒருவன் கூறினான்.
இந்தக் கொலை தொடர்பில் உரிய விசாரணைகளை துரிதகதியில் மேற்கொண்டு வெளியில் சுதந்திரமாக நடமாடி திரியும் குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்ய வேண்டும் என்று சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.
வழக்குத் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவுறுத்தியதுடன் வழக்கினை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (5,37)

### வவுனியாவில்...

இராணுவத்தினருக்கு பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்த கெண்டெய்னரும், பரந்தனிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த சிறிய ரக பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதிலேயே விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
பேருந்தில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெயராச் சறோயினிதேவி (வயது-58), கெண்டெய்னர் சாரதியான கொழும்பைச் சேர்ந்த உதித் பிரியசாந்த (வயது-44) இருவருமே உயிரிழந்துள்ளனர்.
சிறியரகப் பேருந்தின் சாரதியான வவுனியாவைச் சேர்ந்த மகேஸ்வரன் பிரதீஸ் (வயது-22), அதில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெயராச் (வயது-60) இருவரும் விபத்தில் காயமடைந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். வவுனியாவைச் சேர்ந்த தர்சன் (வயது-35) விபத்துச் சிகிர்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் தெரிவித்ததாவது,
வெளிநாட்டில் இருந்து வந்த மகளை அழைத்து வருவதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தனிலிருந்து சிறிய ரக பேருந்தில் குடும்பத்தினர் பயணித்துள்ளனர். இராணுவத்தினருக்குரிய பொருள்களை ஏற்றிக்கொண்டு கெண்டெய்னர் கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்தது. இரண்டும் இராமனூர் பகுதியில் நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இரண்டு வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந்தன. அதில் பயணித்தோர் கடும் காயங்களுடன் மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பலனின்றி இருவர் உயிரிழந்தார்கள் என்றனர். (5,9,110.222)

### தூக்குத்...

பட்டுள்ள சிறைக் கைதிகளுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்ற அரச தலைவர் என்றவகையில் நான் கைச்சாத்திடவுள்ளேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பௌத்த சமூகம் என்றவகையில் சாவுத் தண்டனை குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றபோதும் உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத வகையில் உபதேசங்களை நிகழ்த்தியும், உபதேசங்களை செவிமடுத்தும் வருகின்ற ஒரு சமூகம் இந்தளவுக்குப் பிழையான வழிகளில் செல்லுமாக இருந்தால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய தீர்மானங்களை உரியநேரத்தில் எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.
கண்டி கெட்டம்பே விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற 'போதைப்பொருளுக்கு எதிரான பாடசாலையின் பலம்' என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
(தொடர்புடைய செய்தி : 2ஆம் பக்கம்)

### போதைப்...

ரித்துக் காணப்படும் போதைப் பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தவே இலங்கை இராணுவத்தினர் இங்கு நிலைகொண்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.
வடக்கு மாகாண ஆளுநர் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
வடக்கில் போதைப் பொருள் கடத்தல்களின் பின்னணியில் பாதுகாப்புத் தரப்பினரே இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே ஆளுநர் இப்படித் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் இங்குள்ள பிரதேசங்களில் பொலிஸார் மட்டுமே இருந்தார்கள். இராணுவம் எப்படி இங்கு வந்தது? அதற்கு யார் காரணம். முப்பது ஆண்டு காலமாக இங்கு நிலவிய போர்ச் சூழல் காரணமாகவே இராணுவம் வடக்குக்கு வந்தது.
வடக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம்கள் இருந்தது. அதனை மக்கள் அறிவார்கள். அப்படியானால் அவர்களுடன் சண்டை பிடிக்கவே இந்தப் பிரதேசங்களுக்கு இராணுவம் வந்தது. இப்போது நாட்டில் போர் முடிவடைந்து விட்டது. படிப்படியாக இராணுவத்தினர் குறைக்கப்பட்டு வருகின்றனர். இங்குள்ளவர்கள் கூறுவது போல உடனடியாக முழு இராணுவத்தையும் வெளியேற்ற முடியாது.
அவர்களை வெளியேற்றினால் இங்குள்ள பாதுகாப்புக்கு யார் பொறுப்புக் கூறுவது. இப்போது இராணுவத்தை சிவில் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதைக் குறைத்து வருகின்றோம். இராணுவத்தினரின் எண்ணிக்கையும் குறைக்கப்படும். வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள்களின் பாவனை, கடத்துதல் மிக அதிகமாக உள்ளது. கடல் வழியாக வரும் கடத்தல் பொருள்களை யார் கண்காணிப்பது, தடுப்பது என்பதையும் சிந்திக்க வேண்டும்.
இந்தியாவின் இராமேஸ்வரத்தில் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. அவ்வாறான பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலமைகள் உள்ளன. அவற்றினையும் கவனத்தில் எடுக்க வேண்டும் - என்றார். (5,8)

# பாதாள நடவடிக்கைகளுக்கு அரச இயலாமையே காரணம்

## கோத்தபாய கூறுகிறார்



கொழும்பு, ஜூலை12
மகிந்த ராஜபக்சவின் காலத்தில் பயங்கரவாதத்தையும், பாதாள உலக நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்ததாகவும், தற்பொழுது இவை மீண்டும் தலைதூக்கி வருவதாகவும், அரசின் இயலாமையையே இவை காட்டுகிறது என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் சமய நிகழ்வொன்றில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது காலத்தில் இவ்வாறான ஒருநிலைமை காணப்படவில்லை.

இன்று இந்த நிலைக்கு முதன்மைக் காரணம் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடக் கூடியவர்கள் அனைவரையும் இந்த அரசுசிறையில்போட்டுள்ளமையே.

சிறைச்சாலைஅதிகாரிகள், பொலிஸ் முக்கிய உறுப்பினர்கள், புலனாய்வு அதிகாரிகள், இராணுவத்தினர் என்று போதைப்பொருள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடக் கூடியவர்கள் இன்று சிறையில் உள்ளனர். இதனால், போதைப்பொருள்வியாபாரம்தடையின்றி இடம்பெறுகிறது - என்றார். (4)

---

# விஜயகலா மகேஸ்வரனுக்கு பங்கம் ஏற்படுத்தவில்லை

## பிரதி அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை12
தன்னுடனான அலைபேசி உரையாடலை ஊடகங்களுக்கு வெளியிடுமாறு விஜயகலா மகேஸ்வரன் அந்த உரையாடலில்குறிப்பிட்டதாகப்பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய விஜயகலா மகேஸ்வரன், விடுதலைப் புலிகளின் மீள்வருகை குறித்துக் கருத்து வெளியிட்டிருந்தார். இதுதென்னிலங்கையில்பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்தநிலையில், சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, செய்தியாளார்கள் முன்னிலையிலேயே விஜயகலாவுக்கு அலைபேசி அழைப்பு ஏற்படுத்திப்பேசியிருந்தார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் இந்தச் செயற்பாட்டுக்கு விஜயகலா மகேஸ்வரன் கவலை வெளியிட்டிருந்தார்.

"ஒரு பெண்ணுக்கு ரஞ்சன் துரோகம் செய்திருக்கின்றார். அதுவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எப்படி துரோகம் செய்திருக்கின்றார் என்பதையே இந்த உலகம் அறிந்திருக்கின்றது" என்றுவிஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார். இந்தநிலையில், குறித்த விடயம் தொடர்பில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வியெழுப்பியுள்ளது. இதற்குப்பதிலளித்துப்பேசிய அவர்,

"தன்னுடனான தொலைபேசி உரையாடலை ஊடகங்களுக்குவெளியிடுமாறுவிஜயகலாமகேஸ்வரன் அந்த உரையாடலில் கூறியுள்ளார். அவருடனான அந்த உரையாடலை தர்மத்துக்கு முரணானது என்று ஒருபோதும் கூறமாட்டேன்.

அந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு ஊடகவியலாளராகவே செயற்பட்டிருந்தேன். நான் மக்கள் முன்னிலையிலேயே அவரிடம் கேள்வி கேட்டிருந்தேன். சுமுகமாகவே அவருடன் பேசியிருந்தேன்.

ஒருபோதும் அவருக்கு அவதூறு கூறவோ அல்லது அவரது மதிப்புக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் நான் செயற்படவில்லை" - என்றார். (4)

---

மூன்றரை வருடங்களில்

# ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கைது

## போதைப்பொருளுடன் தொடர்புடையோரென

கொழும்பு, ஜூலை12
2 ஆயிரத்து 500 கிலோகிராம் எடையுடைய போதைப்பொருள்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரையில் இவ்வாறு பெரியளவிலான போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் எட்டுப் பேருக்குத் தூக்குத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

25 ஆயிரம் பேருக்குக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. புலனாய்வுப்பிரிவு, சிறப்பு அதிரடிப்படை உள்ளிட்ட பல்வேறுதரப்பினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்மூலமாகபோதைப் பொருள்களும், போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

---

# ஆள்கடத்தலைத் தடுப்பதில் இலங்கை முன்னிலையில்

கொழும்பு, ஜூலை12
சட்டவிரோத ஆள்கடத்தலுக்கு எதிராகச் செயற்படும்நாடுகள்வரிசையில்இலங்கை முன்னிலையில் காணப்படுகிறது. வெளிநாட்டு சேவைகள்பணியகத்தில் ஆள்கடத்தல் நடவடிக்கையைத் தடுப்பதற்கெனச் சிறப்புப் பிரிவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

ஆள்கடத்தலைத்தடுப்பதில்இலங்கைமுன்னிலையில் உள்ளமையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் பாராட்டியுள்ளது. அமெரிக்கஇராஜாங்கத்திணைக்களம் வெளியிட்டுள்ள ஆள்கடத்தல் தொடர்பான நடவடிக்கையின் புதிய அறிக்கைக்கு அமைய இலங்கை இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றது.

ஆள்கடத்தலுக்கு எதிராக வெளிநாட்டுச் சேவைகள் பணியகம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அந்த அறிக்கையில் பாராட்டப்பட்டுள்ளது. இது பன்னாட்டு ரீதியில்இலங்கைக்குஉதவியைப்பெற்றுக் கொள்வதற்குப் பயனுள்ள நிலைமையே.

இலங்கை ஆள்கடத்தலுக்கு எதிராக முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் செயற்பாட்டுப் படையணியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டுசேவைகள்பணியகத்தில்ஆள்கடத்தல் நடவடிக்கையைத் தடுப்பதற்கான பிரிவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காகக் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திடம்அவைசமர்ப்பிக்கப்படும்.

இது குறித்துப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டு வருகிறது என்று மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (4)

---

# மகிந்தவும், அவரது அணியினரும் சீன நிதி விடயத்தில் மௌனிகள்

## ரைம்ஸ் செய்தியை மறுக்கமுடியவில்லை என்கிறார் ஐ.தே.க. செயலர் காரியவசம்

கொழும்பு, ஜூலை12
சீன நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றதான நியூயோர்க் ரைம்ஸ் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று உறுதிப்படுத்த முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு முடியாதுள்ளது.

அவர் உட்பட அவரது அணியினர் அனைவரும் மௌனிகள்ளாகஇருக்கின்றமைஅதனால்தான்என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

சிலநாள்களாகப்பல்வேறுப்பட்ட விடயங்களுக்காகக் குரல் எழுப்பிய எதிர்க்கட்சியினர் இன்று வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.

சீனநிறுவனத்திடமிருந்து முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச 7.6 மில்லியன் டொலர்களைப்பெற்றுக்கொண்டார் என்று நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தி தனக்கெதிரான பொய்ப்பரப்புரை என்றும் அந்தப்பத்திரிகைக்கு எதிராகச்சட்டநடவடிக்கை எடுப்பதற்கானஏற்பாடுகளைத்தனது சட்டத்தரணியிடம் ஒப்படைத்திருப்பதாகவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

எனினும்தற்போதைய அரசியல்சூழலில்வேறுவிடயங்களைப் புகுத்துவதன் மூலம் இந்த விவகாரம் மழுங்கடிக்கப்படும்சாத்தியக்கூறுகள்காணப்படுகின்றன - என்றார். (4)

---

# அரசதலைவர் சட்டத்தரணி வர்ணகுலசூரிய உயிரிழந்தார்

கொழும்பு, ஜூலை12
அரசதலைவர் சட்டத்தரணி ஹெமான்த்த வர்ணகுலசூரிய(வயது-74)உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தனியார் மருத்துவமனைஒன்றில்சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். இவர் மூத்த குற்றவியல் வழக்கறிஞர், இத்தாலி, கிரீஸ் மற்றும் அல்பானியா ஆகியவற்றுக்கான இலங்கைத் தூதராகவும், மால்டாமற்றும் சைப்பிரஸிக்கான உயர் ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார் என்று தெரிவிக்கபபட்டது. (4)

---

# திருமணத்துக்கு வந்த மணமகள் மகிழூர்ந்தில் ஓட்டம்பிடித்தார்

## வெளிநாடு செல்லவேண்டுமென ஆசையாம்

கொழும்பு, ஜூலை12
திருமண ஏற்பாடுகள் செய்து, பதிவுத் திருமணத்துக்காகப்பதிவாளர்பணியகத்தில் மணமகன் உட்படச் சகலரும் காத்திருக்க, அங்கு வந்த மணமகள் திடீரென்று தப்பியோடிவிட்டார். அதனால் இருவீட்டாருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தென்பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

ஆடைத்தொழிற்சாலையொன்றில்பல காலமாகத் தொழில்புரிந்து வந்த அந்தப் பெண்ணின் கனவு, வெளிநாட்டுக்குத் தொழில்புரியச் செல்லவேண்டும் என்பதே. இதற்கிடையில்பெண்ணின் நெருங்கிய உறவினர் ஒருவர் நல்ல மாப்பிள்ளைஇருக்கிறார்என்றுபெண்ணிடம்கூறி வற்புறுத்தித் திருமணத்துக்குச் சம்மதிக்க வைத்துள்ளார்.

அந்தப்பெண் வருங்காலக் கணவரிடம் வெளிநாட்டுப்பயண ஆசையைக் கூறியுள்ளார். பதிவுத் திருமணம் செய்தபின்னர் அந்தப் பெண் வெளிநாட்டுக்குச் செல்லுமாறு கூறியுள்ளார்.

பதிவுத்திருமணத்துக்கான நாள் குறிக்கப்பட்டது. இரண்டு வீட்டாரின் குடும்பங்களும் திருமணப் பதிவாளர் பணியகத்தில் திருமண பதிவுக்கான நல்ல நேரம்வரும்வரைகாத்திருந்தனர். நல்ல நேரமும் வந்தது. மணமகன் தயார். ஆனால் மணப் பெண்ணைக் காணவில்லை. விசாரித்தபோது அங்கு நின்றிருந்த மகிழூர்ந்தில்ஏறிமாயமாகிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறிது நேரத்தில் அலைபேசியில் தொடர்புகொண்ட அந்தப் பெண், இந்தத்திருமணத்தில்இணைந்துவிட்டால் தன் வெளிநாட்டுக் கனவு நிறைவேறாது என்றும், அதனால்தான் அந்த இடத்தை விட்டுத்தான் வெளியேறியதாகக் கூறியுள்ளார்.

அதனால்அங்குஇரண்டுகுடும்பஉறவினர்களுக்கிடையிலும்தர்க்கம்ஏற்பட்டு விவாகப்பதிவாளர்தலையிட்டுசமாதானமாக்கி அவர்களை அனுப்பிவைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# சிறப்பு அதிகாரங்களுடன் முப்படையினர் போதைப் பொருளைத் தடுக்கக் களமிறக்கம்

## மைத்திரியின் கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 12

**போதைப்பொருளைக்கட்டுப்படுத்துவதற்காகமுப்படைகளின்பங்களிப்பைப்பெற அரசு தீர்மானித்துள்ளது. அதற்கெனக் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முப்படையினருக்குச்சட்டமா அதிபரால்சிபார்சு செய்யப்பட்ட சில அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

நாட்டில் அதிகரித்துவரும் போதைப்பொருள். அவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் உள்ளிட்ட இலங்கைப் பொலிஸார் மூலமாகப் பெரும் பணி நிறைவேற்றப்படுகிறது.

தேவையான சந்தர்ப்பங்களில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படைமற்றும்இராணுவத்தினரின்ஒத்துழைப்பும்பெறப்படுகின்றது. போதைப்பொருள் நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாக முறியடிப்ப தற்கு முப்படையினரின் பங்களிப்பை ஆகக்கூடுதலாகப் பெற்றுக்கொள்வதன் தேவை அடையாளம்காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக போதைப்பொருள் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் பணியை மிகவும்வெற்றிகரமாக மேற்கொள்வதற்காகக்குறிப்பிட்டகாலப்பகுதிக்குமுப்படையினருக்குச் சட்டமா அதிபரால் சிபார்சு செய்யப்பட்ட சில அதிகாரங்களை வழங்கும் வகையில் போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகச்சிறப்பு ஒழுங்குவிதிகள் தொடர்பான திருத்தச் சட்ட வரைபு தயாரிக்கப்படவுள்ளது. அதற்கென அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அரச நிர்வாக, முகாமைத்துவ, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவும் இணைந்து நேற்று முன்தினம் பத்திரத்தைச் சமர்ப்பித்தனர். அந்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (4)

# விக்கி ஏற்பாடு செய்தால் வடக்குக்கு வரத் தயாராம்

## கூறுகிறார் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு, ஜூலை 12

வடக்குக்குவந்துமக்களின்பிரச்சினைகளைக்கண்டறியுமாறுவடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்கினேஸ்வரன் விடுத்த அழைப்பை ஏற்கின்றேன் என்று சமூக நலன்புரி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விடுத்த அழைப்புக்குப்பதிலளிக்கும்முகமாகஅவர்நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குமக்களின்பிரச்சினைகளைக்கண்டறியவடக்குக்கு வருமாறு விக்கினேஸ்வரன் ஊடகங்கள்வாயிலாகஅறிவித்திருந்தார். ஆகவே வடக்கு முதல்வரின் அழைப்பை நான் ஏற்கின்றேன்.

எனவேவிக்கினேஸ்வரனுடன்இணைந்துவடக்கில் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொள்ள நான் தயாராக உள்ளேன். அதற்கு திகதி நிர்ணயம் உட்படஅனைத்துஏற்பாடுகளையும்வசதிகளையும் முதல்வர் செய்ய வேண்டும் -என்றார். (4)

# தெற்காசிய சபாநாயகர்களின் மாநாடு கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 12

தெற்காசிய சபாநாயகர்களின் மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இது இன்றும் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நிலையான அபிவிருத்தி நோக்கை நிறைவேற்றுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நாடாளுமன்றின் முன்பாக நேற்றுமுறுபகல்9.30க்கு ஆரம்பமானது.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் வரவேற்புரையோடு மாநாட்டு அமர்வு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்று வருகின்றது.

பங்களாதேஷிலும் இந்தியாவிலும் இடம்பெற்ற முதலாம் இரண்டாம் மாநாடுகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, மியன்மார், நேபாளம், பாகிஸ்தான் இலங்கை ஆகிய நாடுகளின் சபாநாயகர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். அனைத்து நாடாளுமன்ற சங்கத்தின் ஆதரவுடன் இலங்கை நாடாளுமன்றம் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளது. (4)

# நுவரெலியாவிலுள்ள உலக முடிவிடத்தைக்காண பழைய வீதி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 12

நுவரெலியாவிலுள்ள உலக முடிவைக் காண முன்னர் இருந்து மறைந்து போயிருந்த வீதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பலங்கொடையில் இருந்து நம்பெரியல் தோட்டம் ஊடாக உலக முடிவிடத்துக்குச் செல்லும் முகமாகஇந்தச்சிறியவீதிகண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர்களால் இலங்கையின் பெருந்தோட்டப் பகுதி ஆட்சி செய்யப்பட்ட காலப்பகுதியில் இந்த வீதி அமைக்கப்பட்டுள்ளது.

பலங்கொடையில் இருந்து நம்பெரியல் தோட்டம் ஊடாக உலக முடிவிடம்வரை செல்லும் இந்த வீதி இன்றும் பயன்படுத்தக் கூடிய வகையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தவீதி ஊடாகஉலகமுடிவிடத்தைப்பார்க்கச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் மாத்திரமே நடந்து செல்ல வேண்டும்.

இந்த வீதியை அபிவிருத்தி செய்து சுற்றுலாத் துறையை மேம்படுத்துமாறு அந்தப்பகுதி மக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போதையசூழ்நிலையில்உலகமுடிவிடத்தைப் பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## கேலிச்சித்திரம்




நன்றி - சிலோன்ருடே

# தேர்தலில் வென்ற 23 உறுப்பினர்களின் பதவிகளை நீக்குமாறு நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 12

மகரகம நகர சபைக்கு ஈருருளி சின்னத்தில் போட்டியிட்டுத் தெரிவான சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் 23 பேரின் நியமனங்களை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடக்கோரிமனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது. அதுவிசாரணைக்குஎடுக்கப்படவுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்று எதிர்வரும் 30ஆம்திகதி இதைவிசாரணைக்குஎடுப்பதாக அறிவித்துள்ளது.

மகரகம நகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு கொழும்புமேல்நீதிமன்றநீதிபதிகிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்குவந்தது. மகரகமநகரசபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு தெரிவான சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் 23 பேரும் அந்த நகர சபை பிரிவுக்கு உட்பட்டவர்கள் அல்ல என்று மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திவுலபிட்டிய, படல்கமமற்றும்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்த அவர்களுக்கு உள்ளூராட்சிமன்றச் சட்டத்தின்படி மகரகமநகரசபையின்உறுப்பினர்பதவியை வகிப்பதற்குத்தகுதிஇல்லைஎன்றுஅந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவர்களின் உறுப்பினர்பதவியை இரத்துசெய்து உத்தரவிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மனுவை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிபதி அன்று எதிர்ப்புக்களைத் தெரிவிக்கலாம் என்றும் உத்தரவிட்டுள்ளார். (4)

# பொலிஸ் உத்தியோகத்தர் பிக்குவால் கொலை

கொழும்பு, ஜூலை 12

புத்த பிக்கு ஒருவர் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை கழுத்து நெரித்துக் கொன்றுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவரைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மீது பிக்கு கைக்குண்டு வீச முற்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பிக்கு கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சம்பவம் இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இரத்தினபுரி பொலிஸ் பகுதியைச்சேர்ந்த சார்ஜண்ட்சமர விக்கிரம (வயது-55) என்பவரேகொல்லப்பட்டார். குறித்தபிக்குஏற்கனவே விரோதசெயல்களில்ஈடுபடுபவர்என்றும்அவர்மீது இரண்டு பெருங்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அதுபற்றிய விசாரணைக்குஅறிவித்தல் கொடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரையே பிக்கு கொலை செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்தபொலிஸ்உத்தியோகத்தர்மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் இடைவழியில் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# மகிந்தவின் கூட்டு அணியுடன் சிறிலங்கா பெரமுன இணைவு

## மாகாணசபைத்தேர்தல் இலக்கு

கொழும்பு, ஜூலை 12

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து சிறிலங்கா பொதுஜன கூட்டணியை உருவாக்கவுள்ளனர். அதன் மூலமாக அடுத்துவரும் மாகாணசபைத் தேர்தலில்போட்டியிடத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் கட்சித் தலைவர்கள் கூட்டம் முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சவின்கொழும்புவாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பொதுஜனகூட்டணிஅமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக்கூட்டணிமகிந்தராஜபக்சதலைமையில் அமையும் என்றும் அடுத்த மாகாணசபைத் தேர்தலில் இந்தக் கூட்டணிசார்பிலேயே வேட்பாளர்கள் களமிறக்கப்படுவார்கள்என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (4)

# ஞானசாரரின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 12

நீதிமன்றைஅவமதித்தசம்பவம்தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர்ஞானசாரதேரருக்கு எதிராகச் சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தலைமை நீதிபதி ப்ரீதி பத்மன் சூரசேன மற்றும் நீதிபதி அர்ஜுன ஒபேசேகர ஆகியோரின் முன்பாக நேற்றுவிசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் எழுத்து மூல விரிவுரைகள்தாக்கல்செய்யப்படவிருந்தது. ஆனால் எழுத்து மூல விரிவுரைகள் இன்னும் தயாராகவில்லை என்பதால் வேறொருதினத்தைப்பெற்றுத்தருமாறு சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

அதன்படி, பிரதிவாதிகள் எழுத்து மூல விரிவுரையை நாளை தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (4)

## விஜயகலாவின் கருத்து விவகாரம் பெருமைப்படும் ஞானசார தேரர்

கொழும்பு, ஜூலை 12
'விடுதலைப்புலிகள்அமைப்புமீண்டும்கட்டியெழுப்பப்பட வேண்டும்' என்ற சர்ச்சைக்குரிய கருத்து வெளியிட்ட விஜயகலா மகேஸ்வரன் தொடர்பில் நான் பெருமை அடைகிறேன். என்று குறிப்பிட்ட பொதுபல சேன அமைப்பின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர்முன்னாள்ராஜாங்க அமைச்சர்விஜயகலா மகேஸ்வரனுக்குப்பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
கன்தெகட்டிய, ஸ்ரீ தர்மாராம விகாரையில் இடம் பெற்றநிகழ்வில்கலந்து கொண்டுகருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
தனது இனத்துக்காகத் துணிச்சலாகச் சர்ச்சைக்குரிய கருத்தை விஜயகலா வெளியிட்டுள்ளார்.
கடந்த 70 வருடங்களாக நாட்டில் உருவான அனைத்துத் தலைவர்களும் தம்மை பலவீனப்படுத்தினர். இலங்கைக்குப்பொருத்தமானதலைவர் ஒருவர் உருவாகவில்லை.
"விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்" என்ற சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட விஜயகலா தொடர்பில் நான் பெருமை அடைகிறேன். விஜயகலா தனது இனத்துக்காக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெண் தனது இனத்துக்காக முன்நிற்கின்றார்.
இலங்கையைஆட்சிசெய்தஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள்எங்களைப்பலவீனப்படுத்தினார்கள். எங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தினார்கள். எனினும் விஜயகலா மகேஸ்வரன் குறித்து நான் பெருமைப்படுகிறேன்.
தங்கள் இனத்தை எண்ணியே பிரபாகரன் ஆயுதத்தைக் கையில் எடுத்தார். இந்த நாட்டில் உள்ள தலைவர்களின்செயல்பாடுகாரணமாகவிஜயகலாபோன்ற பெண்கள்எங்கள்தலைவர்களின்தோள்பட்டையிலும் ஏறுவார்கள். நாம்தியாகம்செய்ய வேண்டும். எங்கள் பிள்ளைகளுக்காகஎங்கள்கடமைகளைநிறைவேற்ற வேண்டும்என்றார். (ரி2)

# இலங்கையில் ரின்மீன் விவகாரம் சீனக் குழுவை அழைக்கத் திட்டம்

### அமைச்சர் பதியுதீன் எடுத்துரைப்பு



**கொழும்பு, ஜூலை 12**
**ரின்களில் அடைக்கப்பட்ட மீன் விவகாரம் தொடர்பில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளது. இதனால் சீனாவிலிருந்து மீன்கள் விநியோகம் செய்யும் பிரதிநிதிக் குழுவை அண்மையில் இலங்கைக்கு வரவழைத்து நாங்கள் சந்திக்க விரும்புகின்றோம். இவ்வாறு கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

கைத்தொழில் அமைச்சில் ரின்களில் அடைக்கப்பட்ட மீன்களின் இறக்குமதி தொடர்பானபிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் நோக்கில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,
ரின்களில்அடைக்கப்பட்டமீன்கள்உள்ளூர்நுகர்வோரால்பெருமளவில்பயன்படுத்தப்படுகின்றது. 60 இலங்கை நிறுவனங்கள்வருடத்துக்கு40மில்லியன் கிலோவை உள்ளூர்ச்சந்தைக்கு இறக்குமதி செய்கின்றன.
சீனாவிலிருந்து ரின்களில் அடைக்கப்பட்ட மீன் விநியோகத்தை 2018 ஆம் ஆண்டுமேமாதத்திலிருந்துஇலங்கை பெற்றுக் கொள்ளவில்லை. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்கள் பாவனைக்குதவாதது என்பதை இலங்கை அதிகாரிகள் கண்டுபிடித்ததோடு, சுங்கத்திணைக்களத்தினால்இறக்குமதிகள்தடுத்துவைக்கப்பட்டதாகச் செய்தி ஊடகங்களில் வெளிவந்தது.
பெப்ரவரிமாதம்முதல்உள்ளூர்த்துறைமுகங்களில் உள்ளூர்ச்சந்தைகளுக்கு என இறக்கப்பட்ட ரின் மீன்களில் சில சிதைந்த மற்றும் தகுதியற்றது என்று கண்டுபிடிக்கப்பட்டது.
சீனவிநியோகஸ்தர்களிடமிருந்துஇறக்குமதி செய்யப்பட்ட 31 சரக்குகளில் 3 பாவனைக்குதவாததையடுத்து உள்ளூர்ச் சந்தைகளுக்கு இவை விடுவிப்பது தகுதியற்றது. என்று இலங்கை நியமங்கள் நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களமும் இணைந்து தீர்மானித்தன.
எங்கள் அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரியாக செய்துள்ளனர் இருப்பினும், ரின்களில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதியின் முழுமையான நிறுத்தம் எங்கள் நுகர்வோரைப் பாதிக்கும் அதேவேளைசந்தையில்பற்றாக்குறையும்ஏற்படலாம். சீனஅரசின்ஆதரவை நாங்கள் கோர விரும்புகிறோம்.
சிநேகபூர்வமானகலந்துரையாடல்கள் மூலம்இந்தசூழ்நிலையைத்தீர்ப்பதற்கு சீன அதிகாரிகள் எங்களை ஆதரிப்பார்கள் என்பதில் உறுதியாக உள்ளோம்.
இந்தப் பிரச்சினையை எதிர்கொண்ட தங்களுடைய சொந்த ஏற்றுமதியாளர்கள் எமது சுகாதாரத் தரங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும். இந்த சூழ்நிலையை இணக்கமான பேச்சு மூலம் தீர்க்க சீன அரசின் ஆதரவை நாங்கள் அழைக்க விரும்புகிறோம்.
இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள எங்களது சுகாதாரத் தரத்தை முழுமைப்படுத்த சீன சுகாதார அதிகாரிகள் எங்களுக்கு உதவுவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம்.
இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் தரத்திற்கு இணங்க எங்கள் இறக்குமதியாளர்களுக்கு அரச அதிகாரிகளாகிய நாங்கள் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்குச் சீனாவிலிருந்து இலங்கைக்கு ரின்களில் அடைக்கப்பட்டமீன்விநியோகம்செய்யும்சீனப் பிரதிநிதிகளைநாங்கள்அழைக்கிறோம்.
அதன் பின்னர் இறுதி முடிவுக்கான சந்திப்புக்கு இலங்கை இறக்குமதி பிரதிநிதிகளைப்பீஜிங்கிற்குஅனுப்புவோம்-என்றார். (ரி2)



## பிரதி அமைச்சர் அங்கஜன் கடமையைப்பொறுப்பேற்றார்

கொழும்பு, ஜூலை 12
விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், இராஜகிரியவிலுள்ள விவசாய அமைச்சில் நேற்றுக் காலை உத்தியோக பூர்வமாகத்தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பிரதி அமைச்சர் காதர்மஸ்தான், பிரதி அமைச்சர்ஹிஸ்புல்லா, அமைச்சின் செயலர்கள், விவசாய அமைச்சின்திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் விவசாயப் பிரதி அமைச்சரின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2)

## முஸ்லிம்களின் பிரச்சினைகள் எமது ஆட்சியில் முற்றுப் பெறும்

### சூளுரைக்கிறார் மகிந்த

கொழும்பு, ஜூலை 12
முஸ்லிம்களுக்கு எதிராக வெளிச்சக்திகளின் ஊடாகத் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுவரும்பிரச்சினைகள்முழுஇலங்கைக்குமே உரித்தான பிரச்சினை. இதற்குப் பின்னால் ஒரு சில முகவர்கள் இருக்கின்றார்கள்.
நாங்கள் ஆட்சிக்கு வரும்போது இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்போம். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கண்டியிலிருந்து வந்த ஐ. ஐனூடீன் தலைமையிலான முழுவினர்நேற்றுமுன்தினம் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இதன்போதே மகிந்த ராஜபக்ச இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
அந்நியநாட்டுசூழ்ச்சிகள்என்பதுஎமதுநாட்டுக்குப் புதியதல்ல. மக்கள் விடுதலை முன்னணியினர் போராட்டத்தில் ஈடுபட்டு ஆயிரக் கணக்கான உயிர்களை இழந்தனர். பயங்கரவாதப் பிரச்சினைகளினால் இன்னும் ஆயிரக் கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டது. வெளிநாட்டுச் சக்திகளுடையசூழ்ச்சிகள்தொடர்ச்சியாகவேஇருந்து வருகின்றன. இன்று முஸ்லிம்களுடைய வியாபாரநிலையங்களையும், பொருளாதாரத்தையும் முடக்குவ தற்குச் சதி செய்து வருகின்றனர். இது எமது நாட்டுக்குரிய பிரச்சினை. நாங்கள் ஆட்சிக்கு வரும் போது இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வு பெற்றுத் தருவோம். என்றார். இதில், முன்னாள் கிழக்கு மாகாணசபைஉறுப்பினர்ஷவாஹீர்சாலி, நசார்ஹாஜியார். அக்குறணைகலீல். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் முஸ்லிம் விவகாரத்துக்கான இணைப்பதிகாரி சிராஷ் யூனுஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ரி2)

## போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, ஜூலை 12
மாத்தளை, செம்புவத்த பிரதேசத்திற்குவருகைதரும்உல்லாசப் பிரயாணிகளை இலக்கு வைத்துப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர், கண்டி பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.
கைதானவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, 10கிராம் கஞ்சா மற்றும் 120 மில்லி கிராம் ஐஸ் எனும் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.
ராகமபகுதியைச்சேர்ந்தசந்தேகநபர் நீண்டகாலமாக முச்சக்கர வண்டிச் சாரதி போன்று வேடமிட்டு இப்பிரதேத்தில் இரகசியமான முறையில் போதைப்பொருள் வியா பாரத்தில் ஈடுபட்டுள்ளார்.
இந்த விடயம் பொலிஸ் விசாரணை களின்போது தெரியவந்துள்ளது.
இவ்வாறானவர்கள் குறித்து அவதானமாகஇருக்குமாறும், அவ்வாறு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நபர்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குத் தகவல்களை வழங்கும்படியும் பொலிஸார் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (ரி2)

# நுகர்வோரைப்பாதுகாக்கப் புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூலை 12
பொருள்கள்மற்றும்சேவை வழங்குவதில்வர்த்தகர்கள்சிலர்அதிகஇலாபத்தைப்பெற்றுக்கொள்ளும்நோக்குடன்செயல்படுகின்றனர். இதனால், ஏற்பட்டுள்ள பாதகமான நிலையிலிருந்து நுகர்வோரைப்பாதுகாக்க முறையான வேலைத்திட்டத்தை உருவாக்குவதில் தேசிய பொருளாதார சபை கவனம் செலுத்தியுள்ளது.
அரச தலைவர் செயலகத்தில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் ஒன்று கூடியபோதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
இவ்வாறு ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.
நாட்டின் அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்காக ஏற்றுமதிகளை அதிகரித்தல் மற்றும் இறக்குமதிகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக வரிக் கொள்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. ஏற்றுமதியை அதிகரிக்க சலுகைகளைப் பெற்றுக்கொடுக்கவும்வர்த்தகர்களுக்கு ஊக்கமளிக்கும் வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் பேசப்பட்டது.
இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் அந்நியசெலாவணி குறிப்பிடத்தக்கபங்களிப்பை வழங்குகின்றது. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குப் பணம் அனுப்பும்போது வரி மற்றும் கட்டணங்கள்இன்றிபணத்தைப்பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கவும்அரசதலைவர் ஆலோசனை வழங்கினார். நாட்டுக்குக் கொண்டுவரப்படும் எரிபொருளை கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை வரை கொண்டு செல்வதற்காகஅமைக்கப்படும்12அங்குலவிட்டமுடைய புதியகுழாய்மார்க்கத்தின்நிர்மாணப்பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கும் அரச தலைவர் பணிப்புரை விடுத்தார். மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்கசக்திவளங்கள் அமைச்சினால்ஜப்பானியநிதியுதவியின்கீழ்திட்டமிடப்பட்டுள்ள2030 ஆண்டு வரையான மின்வலுத்திட் டம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமாவினால் அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது. ஜயிக்கா நிறுவனத்தின் சிறப்புப் பிரதிநிதி புசாட்டோ டனக்காவும் (Fusato Tan aka) இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டார். (ரி2)



## தீப் பற்றி எரிந்த பனைகளால் தெல்லிப்பழையில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜீலை12
தெல்லிப்பழையில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் நேற்றுத் தீப் பற்றியதில் அங்கிருந்த 50க்கும் மேற்பட்ட பனை மரங்கள் எரிந்து நாசமாகின. அதனால் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
தெல்லிபழை 8ஆம் வட்டாரம் துர்க்காபுரத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. காணியில் பரவிய தீ அங்கிருந்த வடலிகள், பனைகளில் பற்றிக் கொழுந்துவிட்டெரிந்தது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவினருக்கும், பிரதேச சபையினருக்கும் அறிவிக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் படையினர் தீயை ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.
அருகில் உள்ள வீட்டில் குப்பைக்கு வைத்த தீயாலேயே இந்த இடர் ஏற்பட்டது என்று மக்களால் கூறப்பட்டது. (ற-29)

## ஒரே இரவில் மூன்று கடைகள் உடைத்து திருட்டு


வவுனியா, ஜீலை12
வவுனியா குருமன்காடு சந்தியிலுள்ள மூன்று வர்த்தக நிலையங்களை உடைத்துப் பணம் திருடப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.
மூன்று வர்த்தகநிலையங்களில் இருந்தும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பணம் திருடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
கடையை நேற்றுத் திறந்தபோதே கடையின் கூரைப்பகுதி உடைக்கப்பட்டு திருட்டு போயுள்ளதை வியாபார நிலைய உரிமையாளர்கள் அறிந்துள்ளார்கள்.
இதுதொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கபட்டது.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ரி4,110)

## வவுனியாவில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

வவுனியா, ஜீலை11
வவுனியாகாத்தான்கோட்டத்தில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் இருந்து 980 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும், இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ரி4,110)

# வடக்கின் அதிகாரத்தை குறைக்கப் பிரயத்தனம்

குற்றஞ்சாட்டுகின்றார் வடக்கு அமைச்சர் குணசீலன்




**மன்னார், ஜூலை 12**
**மாகாணசபையின் அதிகாரங்களைக் குறைப்பதிலேயே பல தரப்புகள் முனைப்புடன் இருக்கின்றன. என்றுகுற்றஞ்சாட்டியுள்ளார் வடக்குசுகாதார அமைச்சர்ஜீ.குணசீலன். மன்னாரில் அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டசெய்தியாளர்சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் தெரிவித்ததாவது:
வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துள்ளன கொலை, கொள்ளை, பாலியல்வன்முறைகள் எனப் பல குற்றங்கள் தொடர்ந்து நடக்கின்றன. இந்தக் குற்றச் செயல்கள்தொடர்பில் பலத்தவிமர்சனங்கள் எழுந்துள்ளன.
அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது, கட்டுபாட்டுக்குள் கொண்டு வர முடியாதுள்ள நிலையில் அரசும், பொலிஸாரும் அமைதியாக இருப்பது சந்தேகத்தை எழுப்புகின்றது. ஒரு நிகழ்ச்சி நிரலில் இந்தக் குற்றங்கள் நடக்கின்றனவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.
அண்மையில் சிறுமி ஒருவர்பாலியல்துன்புறுத்தல்களின்பின்னர்கொலைசெய்யப்பட்டுள்ளார். வயது முதிர்ந்த பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவங்கள் மக்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளன. முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூட விடுதலைப் புலிகளின் உருவாக்கம் தொடர்பாகக் கூறியிருந்த கருத்து சர்ச்சையை உருவாக்கியுள்ளது.
விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் இருந்த சட்டம் ஒழுங்கு விடுதலைப்புலிகளால் தான் இவற்றை ஒரு கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வர முடியும்' என்ற தனிப்பட்ட ஒருஅரசியல்வாதியின் கூற்று சர்ச்சைக்கூறியதாக இருந்தாலும், மக்கள் கூட அவ்வாறு சிந்திக்கக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை அரசு மிகக் கவனமாக உற்று நோக்க வேண்டும்.
அண்மையில் வடக்கு முதலமைச்சர் எங்களுக்கு அதிகாரத்தையும், பொலிஸ் அதிகாரத்தையும் தாருங்கள் நாங்கள் வன்முறைகளை கட்டுப்படுத்துகின்றோம் என்றுதெரிவித்திருந்தார். அது ஒரு நியாயமான கருத்து. ஆனால் எமது அரசியல் வாதிகள் உற்பட பல்வேறு விதமானவர்கள் வடமாகாணசபையை அல்லது மாகாண சபையினுடைய அதிகாரங்களைக் குறைப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.
நாங்கள் ஏற்கனவே அதிகாரப் பற்றாக்குறை, அதிகாரம் போதாது என்று போரிட்டுக்கொண்டிருக்கும் போது இருக்கின்ற அதிகாரங்களைக்கூட கொடுக்கக்கூடாது என்கின்றநிலமைதற்போது காணப்படுகின்றமையை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அது எமது தமிழ்சமூகத்துக்கு ஆரோக்கியமானதாக இருக்கும் என்றுநான் கருதவில்லை. என்றார். (ரி4,56)



## வவுனியாவில் வெடிக்காத நிலையில் குண்டு நேற்று மீட்பு

வவுனியா, ஜீலை12
வவுனியா இரட்டைப் பெரியகுளத்தில் தனியார் காணியை அதன் உரிமையாளர் துப்புரவாக்கி நிலத்தை பண்படுத்தியுள்ளார். வெடிக்காத நிலையில் உள்ள குண்டை அவதானித்துள்ளார். இரட்டைப்பெரியகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். சம்பவஇடத்துக்குவிரைந்தபொலிஸார் கைக்குண்டை மீட்டனர். மீட்கப்பட்ட குண்டுதமிழீழவிடுதலைப்புலிகளின்தயாரிப்பாகஇருக்கலாம்என்றுபொலிஸார்சந்தேகம் வெளியிட்டனர். (5,110)

## கொலை செய்த குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை

கொழும்பு,ஜீலை12
இருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது கால் மேல் நீதிமன்றம். ஒருவரைக் கொலைசெய்தகுற்றச்சாட்டுநிரூபிக்கப்பட்டதை அடுத்தே தூக்குத் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.
2006ஆம்ஆண்டுநவம்பர்மாதம் 4 ஆம் திகதி அக்மீமனவில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவரைக் கொலைசெய்தனர்என்றுசந்தேகநபர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. நடந்த நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு நேற்று முன்தினம் இருவருக்கும் தூக்குத் தண்டனைவிதிக்கப்பட்டது. அமலகம, ஹியாரே பிரதே சத்தைச் சேர்ந்த 48மற்றும்50வயதுடைய இருவருக்கே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ரி4)

## ஐ.தே. கட்சி அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு

பிரதி அமைச்சர் அபேயசிங்க நேரில் வந்து திறந்தார்



கிளிநொச்சி, ஜீலை12
கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் சென்ற போக்குவரத்துமற்றும்சிவில்விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க அங்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலக்தைத் திறந்தார். கிளிநொச்சி உதயநகரில் அமைக்கப்பட்ட அலுவலகமே திறக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட ஐ.தே கட்சியின் அமைப்பாளர் டொக்டர் விஜய ராஜன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. முதன்மைவிருந்தினராகப் பிரதிஅமைச்சர்கலந்துகொண்டுகட்சிஅலுவலகப் பெயர் பலகையைத் திறந்தார். நிகழ்வில் 200 தென்னங்கன்றுகள் மக்களுக்குவழங்கப்பட்டன.
அமைச்சர் கிளிநொச்சியில் உள்ள விகாரைக்குச் சென்று வழிபாட்டை மேற்கொண்டார். பின்னர் கிளிநொச்சி அரசபேருந்துநிலையத்துக்குச்சென்று அங்கே நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் அரசபேருந்துநிலையத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார். தொடர்ந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தையும் பார்வையிட்டார். (ரி4,6)

## கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டோருக்கு பிணை

வடமராட்சி, ஜீலை12
வடமராட்சிக் கிழக்கில் அரச நிலத்தில் அனுமதியின்றி வாடி அமைத்துக் கடலட்டைத் தொழிலில் ஈடுபட்ட 8 வாடி உரிமையாளர்களைத் தலா 3 ஆள் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பிணையிலும் செல்ல கிளிநொச்சி நீதிமன்றம் அனுமதித்தது.
வடமராட்சிக்கிழக்குப்பகுதியில் கடலட்டை பிடிக்கும் வேறு மாவட்ட மீனவர்கள் அரச நிலத்தில் அனுமதியின்றி வாடி அமைத்துத் தொழில் ஈடுபட்ட 8 வாடி உரிமையாளர்களுக்கும் எதிராக 1987ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணியின் ஆட்சியை மீளப்பெறுவதற்கான சட்டத்தின் கீழ் மருதங்கேணிபிரதேசசெயலாளரால் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. அவ்வாறுதாக்கல் செய்யப்பட்ட வழக்கே நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
8 வாடி உரிமையாளர்களில் 7 வாடி உரிமையாளர்கள் மன்றில் முன்னிலை யாகினர். ஒருவர் தரப்பில் சட்டத்தரணி மன்றில் தோன்றினார்.
வழக்கை ஆராய்ந்த கிளிநொச்சி மாவட்டப் பதில் நீதிவான் கிறேசியன் 7 வாடி உரிமையாளர்களையும் 3 ஆள் பிணை மற்றும் ஒரு லட்சம் ரூபா பிணையிலும் செல்ல அனுமதித்தார்.
8 ஆவது வாடி உரிமையாளரும் நேரில் மன்றுக்குச்சமூகமளிக்கவேண்டும் எனக் கட்டளையிட்டார். வழக்கை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ரி4,105)

## தங்கம் கடத்த முயன்ற இந்திய நாட்டவர் கைது

கொழும்பு, ஜீலை12
தங்கம்கடத்த முயற்சித்தகுற்றச்சாட்டில் இந்திய நாட்டைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். மூன்று கிலோ 13 கிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்களுடன் ஒரு தொகை நகைகளும் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.
கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் ஆயப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தே கநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## சபையில் அமரவோ வாக்களிக்கவோ முடியாது

குகேந்திரனுக்கு மன்று இடைக்கால உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை12

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இரட்டைக் குடியுரிமை கொண்டதான வேலும்மயிலும் குகேந்திரன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி வரைசபை அமர்வுகளில்அமரவோ வாக்களிக்கவோ முடியாது என மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்போது அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில்ஈ.பி.டி.பி சார்பில் அங்கம் வகிக்கும் வேலும்மயிலும் குகேந்திரன் இரட்டைக்குடியுரிமைகொண்டவர்என்றதன்அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க முடியாது என்ற காரணத்தால் குகேந்திரனின்உறுப்புரிமைசெல்லுபடியற்றது எனத் தேர்தல் ஆணையகத்துக்கு உத்தரவிடக்கோரி கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு மேன். முறையீட்டு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குகேந்திரன் யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வுகளில் அமரவோ அல்லது வாக்களிக்கவோ இடைக்காலத் தடை விதித்ததோடு குறித்த வழக்கை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு மன்று ஒத்தி வைத்தது. (எ-105)





# மன்னார் அகழ்வுப் பணிகள் நீண்ட நாள்கள் நடக்கலாம்

### தொடர்ந்து எலும்பு எச்சங்கள் மீட்கப்படுவதால் இந்த நிலை

மன்னார், ஜூலை12

மன்னார்சதொசவளாகத்தில்தொடர்ச்சியாக மனித எலும்பு எச்சங்கள் தென்படுவதால் அகழ்வுப்பிரதேசத்தைவிரிவுபடுத்தவேண்டியநிலைஏற்பட்டுள்ளது. அதனால்அகழ்வுப் பணிகள் எப்போது நிறைவுறும் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வரும் மூத்த சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன்.

மன்னார் சதொச விற்பனை நிலையக் கட்டுமானப்பணியின்போதுமனிதஎலும்புஎச்சம் கண்டுபிடிக்கப்பட்டதைஅடுத்துகடந்தமார்ச் மாதம் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின. நேற்றுப்புதன்கிழமைவரை31ஆவதுநாளாகவும் அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. இதுவரை23மனிதஎலும்புஎச்சங்கள்அகழ்வின்போது வெளியில் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் 37 மனித எலும்பு எச்சங்கள் அடையாளமிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அகழ்வு நடத்தப்படும் குழியை அகலப்படுத்துவது தொடர்பாக ஆராயப்படுகின்றது. மேலும் பல மனித எலும்பு எச்சங்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அதனால் இந்தப்பணியை இன்னமும்தொடரவேண்டியுள்ளது-என்றார். அகழ்வுப்பணியில்சட்ட மருத்துவ அதிகாரி டபிள்யூ. ஆர். ஏ.எஸ். ராஜபக்சவும் அவரின் குழுவினரும் ஈடுபட்டுள்ளனர். களனிப் பல்கலைக்கழக பேராசிரியர்ராஜசோமதேவாவும்அவரதுகுழுவினரும் அவர்களுடன் இணைந்துள்ளனர்.

அகழ்வுப் பணியின்போது அண்ணளவாக மூன்றரை அடி அளவிலான மனித எலும்பு எச்சம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதை அடையாளமிடும் பணிகள் நேற்று நடைபெற்றன. மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த லங்கா சதோச கட்டடம் உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்றன. அந்தக் காணியில் அகழப்படும் மண் விற்பனை செய்யப்பட்டது. கொள்வனவு செய்யப்பட்டு மன்னார், எமில் நகரில் வீடொன்றில் கொட்டப்பட்ட மண்ணில்மனிதஎலும்புஎச்சங்கள்காணப்பட்டன. வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அங்கு சென்று மண்ணை ஆராய்ந்ததுடன், மன்னார்நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

மார்ச் 27ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 3 நாள்கள் மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ் ராஜா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் முன்னிலையில் மண் குவியலில் இருந்தும், வீட்டுவளாகத்துக்குள்பரப்பப்பட்ட மண்ணிலிருந்தும் சந்தேகத்துக்கிடமான எலும்புத்துண்டுகள் மீட்கப்பட்டன. அதையடுத்து லங்கா சதோச கட்டடக் கட்டுமானம் இடைநிறுத்தப்பட்டது. (எ-60)

பாலியல் முறைகேடு:

## வட்டு. ஆசிரியருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை12

தனியார் கல்வி நிலையத்துக்கு வந்த பதின்ம வயதுச் சிறுமிகள் மூவருக்குப் பாலியல் தொல்லைகொடுத்தகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட ஆசிரியரின் விளக்கமறியலை 14 நாள்களுக்குநீடித்துஉத்தரவிட்டதுமல்லாகம்நீதிவான் மன்று.

வட்டுக்கோட்டையிலுள்ளதனியார்கல்விநிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர், அவரிடம் கற்கச் செல்லும் பதின்ம வயது மாணவிகள் சிலரைப் பாலியல்வன்கொடுமைக்குஉட்படுத்தப்படுகின்றார்எனச்சங்கானைப்பிரதேசசிறுவர்பாதுகாப்பு அலுவலகருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டன. அவர் தனக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு மாணவிகளின் பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதனால் சிறுவர் அலுவலகருடன் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசாரணையில் மாணவிகள் மூவரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

அவற்றைஅடிப்படையாகவைத்துபதின்மவயது சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை வழங்கினார்என்றகுற்றச்சாட்டில்ஆசிரியர்கடந்த13ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுநேற்றுமுன்தினம்மறியலில்வைக்கப்பட்டார். இந்தநிலையில், மல்லாகம் நீதி மன்றில் மீண்டும் நேற்றுமுன்தினம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா மறியலை நீடித்தார்.

"கொலை வழக்குகளின் சந்தேக நபர்களுக்கே நீதிமன்றால் பிணை வழங்கப்படுகிறது. இத்தகைய சாதாரண சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்க நீதிமன்று மறுக்கலாமா? வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உப அதிபர் ஒருவரும் ஆசிரியை ஒருவருமே இந்த விடயத்தைச் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குத்தெரியப்படுத்திப்பூதாகரமாக்கினர்"என்றுஅவர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி நீண்டவிரிவானசமர்ப்பணத்தைமன்றில்முன்வைத்தார். சந்தேகநபர் சார்பான சட்டத்தரணியின்சமர்ப்பணத்தைஆராய்ந்தமன்றுபிணை விண்ணப்பத்தை நிராகரித்து சந்தேகநபரின் விளக்கமறியலைநீடித்தது. (எ-37)

இலங்கை மின்சாரசபை

# கட்டணம் அறவிடாது சேவை மனப்பாங்குடன் சாலை விளக்குகளைப் பொருத்த வேண்டும்

### சாவகச்சேரிப் பிரதேச சபையில் உறுப்பினர்கள் முன்மொழிவு

தென்மராட்சி, ஜூலை12

உள்ளூராட்சிச் சபைகளால் மேற்கொள்ளப்படும் சாலை விளக்குகள் பொருத்துவதற்குக்கட்டணம்அறவிடுவதைத்தவிர்த்து சேவை அடிப்படையில் அவற்றை மேற்கொள்ள இலங்கை மின்சார சபையினர் முன்வரவேண்டும்.

இவ்வாறுசாவகச்சேரிப்பிரதேசசபையின் அமர்வில்உறுப்பினர்களால்முன்மொழியப்பட்டன.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் அமர்வு கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது.

உள்ளூராட்சிச் சபைகள் அனைத்தும் அதிக வருமானம் அறவிடும் சபைகள் அல்ல.

இந்த நிலையில் நலன்விரும்பிகளால் வழங்கப்படும்சாலைவிளக்குகள்மற்றும் சபை நிதி மூலம் கொள்வனவு செய்யப்படும்சாலைவிளக்குகள்மக்களின்நலன்கருதி அவசியம் எனக் கருதும் இடங்களில் பொருத்தப்படுகின்றன. சபையின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும்முகமாக நலன் விரும்பிகள் சாலை விளக்குகளைச்சபைகளுக்குவழங்குகின்றனர்.



இந்த விளக்குகளைப் பொருத்துவதற்குப் பெருமளவுகட்டணம்மின்சாரசபையினரால் கோரப்படுகிறது. இந்தக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் சபைகள் தடுமாறுகின்றன. இதனால் வருமானம் குறைந்தசபைகள், மின்குமிழ்கள்கைவசம் இருந்தும் நிதி இல்லாததால் அவற்றைப் பொருத்த முடியாமல் வைத்துள்ளன.

மீள்குடியமர்வு இடம்பெற்ற இடங்களில் உள்ள சபைகளுக்கு, சாலை விளக்குகளைமின்சாரசபையினர் இலவசமாகப் பொருத்திக் கொடுக்கின்றனர் என்று அறியப்படுகிறது. அவ்வாறே வருமானம் குறைந்த சபைகளிடம் நிதி அறவிடாமல் சாலைவிளக்குகள்பொருத்துவதற்குஅல்லது குறைந்தகட்டணத்தில் சாலைவிளக்குகள் பொருத்துவதற்கு மின்சார சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று முன்மொழிந்தனர்.

இது தொடர்பில் அறிவதற்காக மின்சார சபையினருடன்உதயன்தொடர்புகொண்டான், "எந்தவொரு சபைகளுக்கும் நாம் இணைப்புகளை இலவசமாக வழங்குவதில்லை. தற்சமயம் மீள்குடியமர்வு பிரதேசங்களாகக் காணப்படும் பிரதேசங்களுக்குமாவட்டச்செயலகம்அல்லது மாவட்டச் செயலகம் ஒதுக்கும் நிதி மூலமே மின்குமிழ்கள் பொருத்தப்படுகின்றன.

ஒரு மின்குமிழ் பொருத்துவதற்கு ஆயிரத்து100ரூபாசெலவாகின்றது. அத்துடன் அனைத்துப் பிரதேச சபைகளிலும் கட்டணம் அறவிடப்பட்டு மின்சார சபைகள் மூலமே இந்தச் சாலை விளக்குகள் பொருத்தப்படுகின்றன" என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9,114)

## பேருந்தில் இருந்து 2 கிலோ கஞ்சா மீட்பு

வவுனியாஜூலை12

யாழ்ப்பாணத்திலிருந்துஅம்பாறைசென்றஅரச பேருந்திலிருந்துநேற்றுமுன்தினம்இரவு2கிலோ கஞ்சாமீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாறை நோக்கிச் சென்ற அரச பேருந்தை இரவு9.30மணியளவில்வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் வழிமறித்து, வவுனியாப் பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவினர்சிறப்புச்சோதனைகளைமேற்கொண்டனர். இதன்போது, இரண்டு கிலோ கேரளக் கஞ்சாமீட்கப்பட்டது.

குறித்த கஞ்சாப் பொதிக்கு யாரும் உரிமை கோராத காரணத்தால் பேருந்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லபட்டு விசாரணைகளின் பின்னர் பேருந்து விடுவிக்கப்பட்டது. (எ-110)

*3 மாத காலமாகியும்*

## முல்லைத்தீவு நில விடுவிப்புக்கு ஆக்கபூர்வ நடவடிக்கை இல்லை

*மாவட்ட மக்கள் கவலை*

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசமுள்ள நில விடுவிப்புத் தொடர்பில் மாவட்டத்தில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்என்றஅரசதலைவரின்செயலாளரின் உத்தரவுமூன்றுமாதங்களாகநடைமுறைப்படுத்தவில்லை என மாவட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில்படையினர்வசம்தற்போதும்13ஆயிரத்து14 ஏக்கர் மட்டுமே உள்ளதாக அரசதலைவர் செயலகத்தில் கடந்த ஏப்ரல்17ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் மீள்குடியமர்வு அமைச்சால் தெரிவிக்கப்பட்டது. குறித்த கணக்கீட்டில் ஆயிரத்து 150 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை தவறான கணக்கீடு எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால்முல்லைத்தீவுமாவட்டத்தில்தற்போதுபடையினர் வசமுள்ள நிலங்களின் சரியான அளவீடு மற்றும் அந்த நிலங்களில் உடனடியாக விடுவிக்கப்படக்கூடிய நிலங்கள் தொடர்பில் உடன் மாவட்டத்தில் சகல தரப்புக்களும் கூடி ஆராய்ந்து அதன் அறிக்கையை அரசதலைவர் செயலகத்துக்குச் சமர்ப்பிக்குமாறு கடந்த 2018.04.17 அன்று தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இன்றுவரை இதற்கான கூட்டத்தை மாவட்ட ரீதியில் கூட்டப்படவில்லை. இதனால் தமது நிலம் விடுவிப்பில் தாமதம் ஏற்படுவதாக மாவட்ட மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்

இது தொடர்பில் அந்தக் கூட்டத்தில்பங்குகொண்டவர்களில் ஒருவரும் மாவட்டத்தில் இடம்பெறும் ஆராய்வில் அங்கம் வகிக்குமாறு கூறப்பட்டவர்களில் ஒருவருமான வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளரான விஜயலட்சுமி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது. குறித்த ஏற்பாடு மாவட்டச் செயலர் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும் இருப்பினும் இடம்பெறவில்லை -என்றார்.

அதனையடுத்து,குறித்தகலந்துரையாடல்இடம்பெறாதமை தொடர்பில் மாவட்டச்செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டபோது, மேற்படி கலந்துரையாடல் மாவட்டத்தில்இடம்பெறவேண்டும்என்றபோதும்இதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளும் பொறுப்பு மீள்குடியமர்வு அமைச்சின் செயராளரிடமே ஒப்படைக்கப்பட்டது எனப் பதிலளித்தார். இவற்றின் அடிப்படையில் மீள்குடியமர்வு அமைச்சின்செயலாளரைத்தொடர்புகொள்ளமுயன்றபோது அவரின்உதவியாளரேபதிலளித்தார். செயலாளர்பதிலளிக்கவில்லை. (எ-105)

'கவனமாகச் சென்று வாருங்கள்'

## போக்குவரத்துப் பாதுகாப்புச் சிறப்பு நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன

*வடக்கு ஆளுநரின் செயலர் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம் ஜூலை 12**

**'கவனமாகச் சென்று வாருங்கள்' போக்குவரத்துப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது என்று ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.**

வடக்குமாகாணஆளுநர்அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியாலளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாகச் சடுதியாக அதிகரித்துள்ள வீதி விபத்துக்களைத்தவிர்க்கும்நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தச் சிறப்புத் வேலைத்திட்டம்ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில்பொலிஸ்தலைமையகம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், வட மாகாண முதலமைச்சரின் அமைச்சு ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்தவுள்ளன.

யாழ்.போதனாமருத்துவமனைதரவுகளின்அடிப்படையில்கடந்தஆறுமாத காலப்பகுதியில் (2018 ஜனவரி 01 முதல்ஜூன்30வரை)2ஆயிரத்து454 பேர் வீதி விபத்திகளால் காயமடைந்துள்ளதுடன் 42 பேர் உயிரிழந்தும் உள்ளனர். எனவே விபத்துக்களைத் தடுக்கும்விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக,

இலங்கை மின்சார சபையினர், உள்ளூராட்சிச்சபைகள் இணைந்துமுதற்கட்டமாக யாழ்.நகரப்பகுதியில் விபத்துகள் அதிகளவில்நடைபெறும்சந்திகளாக இனங்காணப்பட்ட 15 சந்திகளுக்கு வீதிமின்விளக்குகள்பொருத்தவுள்ளனர்.

வீதி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியன இணைந்து அதிகளவில்விபத்துநடைபெற்றவீதிகளாக இனங்காணப்பட்ட21சந்திகளில் வீதி வேகத் தடைகளை ஏற்படுத்தவுள்ளன.

வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களில்இரவிலும்ஒளிரத்தக்க சிறப்பு நிற விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களை விநியோகிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.மாநகரசபையின்அனுசரணையுடன்25விழிப்புணர்வுப்பதாதைகள் பாடசாலையை அண்டிய முக்கிய சந்திகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

லயன்ஸ் கழகத்தினரால் வீதி விபத்து விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வாசகங்கள் அடங்கிய பொம்மைகள் 200வீதிகளில்காட்சிப்படுத்தப்படவுள்ளன. இன்று கொழும்பிலிருந்து வருகை தரும் சிறப்பு பொலிஸ் உயர் அதிகாரிகளால், யாழ்.வீரசிங்கம்மண்டபத்தில் வீதிவிபத்து சம்பந்தமான செயலமர்வும் அதனைத் தொடர்ந்து அதன் முன்றிலில் அமைந்துள்ள முதன்மை வீதியில் விபத்துக்களைத் தடுப்பதற்கான செயல்முறை விளக்கங்களும் வழங்கப்படும்.

செயலமர்வில் யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி பயிலும்ஆயிரத்து1500மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை சேவையில்ஈடுபடும்வாகனசாரதிகள், பொதுப் போக்குவரத்துச் சாரதிகள், கலந்து கொள்ளவுள்ளனர்,

யாழ்.வேம்படிமகளிர்கல்லூரிமற்றும் யாழ் மத்திய கல்லூரி என்பனவற்றுக்குச் செல்லும் ஆளுநர் றெஜினோல் குரே உள்ளிட்ட அதிதிகள் பாடசாலை மாணவர்களின்துவிச்சக்கரவண்டிகளுக்கான ஒளிரும்ஸ்ரிக்கர்களை ஒட்டவுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அரச அலுவலர்கள் மற்றும் சாரதி பயிற்சிப்பாடசாலைசாரதிகளுக்கான செயலமர்வும் அதனைத் தொடர்ந்துஏ-9வீதியில்செயல்முறை பயிற்சியும் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படும்அத்துடன்மாவட்டசெயலகப் பணியாளர்களின் வாகனங்களுக்குஒளிரும்ஸ்ரிக்கர்கள்வழங்கப்படும்- என்றார். (எ-8)

## 500 அரசவாகனங்களைத் திருத்துவதற்கு ஒரேயொரு பொறியியலாளர் போதாது

*தேவையானோரை நியமிக்குமாறு வடக்கு மாகாண சபையிடம் கோரிக்கை*

சாவகச்சேரி, ஜூலை 12

வடக்குமாகாணத்தில்மாகாணசபை, அதன் அமைச்சுக்கள் திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளூராட்சி சபைகள் உள்ளிட்ட அலுவலகங்களில் 500க்கு மேற்பட்ட வாகனங்கள் உள்ள போதிலும்ஒரேயொரு இயந்திரவியல்பொறியியலாளர்கடமையில் உள்ளதால்பெருமளவு வாகனங்கள் அவரின் அனுமதிக்காகத் திருத்த முடியாத நிலையில் காத்திருக்கின்றன. எனவே உடனடியாக ஐந்து மாவட்டங்களில் தொழில்படக்கூடிய வகையில் இயந்திரவியல் பொறியியலாளர்களை நியமிக்க மாகாண சபையிடம் கோர வேண்டுமென சாவகச்சேரிநகரசபையில்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு நேற்றுமுன்தினம்நடைபெற்றபோது சபையின்வாகனங்களுக்குப்பொறுப்பானஅலுவலர்தெரிவித்தகருத்தையடுத்து சபையின் செயற்பாடுகளுக்கு வாகனங்களின் பயன்பாட்டு அவசியம் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வாகனத்துக்கு ரயர் மாற்றுவதாயினும் இயந்திரப் பொறியியலாளரின் அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால்சபையின்செயற்பாடுகளை உரிய காலத்தில் மேற்கொள்ள வாகனங்கள் இன்றி சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் மாவட்டத்துக்கு ஒரு இயந்திரவியல் பொறியியலாளர் வீதம் நியமிக்க மாகாண சபையிடம் கோர வேண்டும்எனத்தீர்மானிக்கப்பட்டது.

இந்தவிடயம்தொடர்பாகபொறியியல் சேவைகள் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது "வடமாகணத்துக்கு இரண்டு இயந்திரவியல் பொறியியலாளர்களே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதிலும் ஒரு பொறியிலாளர் சுகாதாரத் திணைக்களத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் மற்றையவரே உள்ளூராட்சி சபைகள் உட்பட திணைக்களங்கள் செயலகங்கள் என அனைத்தையும் கண்காணிக்கவேண்டி உள்ளது.

உள்ளூராட்சிசபைகள்பொறுப்பேற்க முன்னர் ஓரளவேனும் சமாளிக்ககூடிய நிலைமை இருந்தது எனினும் தற்சமயம் உள்ளூராட்சி சபைகளுக்கெனதனியானஒருஇயந்திரப்பொறியியலாளரை நியமிக்கவேண்டிய கட்டாயம் எமக்கு உண்டு. ஆளணிப் பற்றாக்குறை தொடர்ந்தும் நீடித்து வருவதால் இத்தகைய முறைப்பாடுகள்தொடர்ந்தவண்ணமேஉள்ளன. 5 மாவட்டங்களுக்கும்தனித்தனியாகவோ அல்லது திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் ரீதியாகவோ இயந்திர பொறியிலாளர்களை நியமித்தால் இவ்வாறான குறைபாடுகள் தீர்க்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டது. (எ-114)

## கஞ்சா கலந்த மாவாப் பாக்கை வைத்திருந்தவருக்கு 3 மாத சிறை

கஞ்சா கலந்த மாவாப் பாக்கை உடமையில் வைத்திருந்த குற்றவாளிக்கு 3 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்தது யாழ்ப்பாணம் நீதிவான் மன்று.

கடந்த 2017ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் வைத்து ஒவ்வொன்று 30 கிராம் எடையுடைய 70 பக்கற்றுக்களில் பொதியிடப்பட்ட கஞ்சா கலந்த மாவா போதைப் பொருளைப் பொலிஸார் மீட்டனர். அதனை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவருக்குஎதிராகயாழ்ப்பாணம்நீதிவான்நீதிமன்றில்பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொள்ளமறுத்ததால், அவர்பிணையில்விடுவிக்கப்பட்டார். அத்துடன், அவரிடம் மீட்கப்பட்ட மாவா பக்கற்றுக்களை அரசபகுப்பாய்வுத்திணைக்களத்துக்குஅனுப்பிபரிசோதனை அறிக்கையைப் பெறுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டது. சந்தேகநபர்மீதானவழக்குநேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அவருக்கு எதிரான குற்றப்பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

அதன்போது சந்தேகநபர் சுற்றவாளி என மன்றுரைத்தார். அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியும் வழக்கை விளக்கத்துக்கு எடுக்க மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனைதொடர்ந்துமன்று, சுற்றவாளிஎன்றால்பொலிஸாரால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட சான்றுப்பொருள் உமது உடமையிலிருந்து மீட்கப்பட வில்லையா? கேள்வி எழுப்பியது.

அதற்கு சந்தேகநபர், எனது உடமையிலிருந்துதான் மீட்கப்பட்டது என பதில் அளித்தார்.

அதையடுத்து மன்று, அப்படியானால் எப்படி சுற்றவாளி என்கிறீர்கள்? என கேள்வி எழுப்பியது, "கஞ்சா போதைப்பொருள் அதில் இருக்கவில்லை" என்று நபர் பதிலளித்தார்.

அதற்கு, அரசபகுப்பாய்வு அறிக்கையில் கஞ்சா கலந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதே? என மன்று கேள்வி எழுப்பியது. அதற்குச்சந்தேகநபர் பதில் அளிக்காது தடுமாறியதை அடுத்து சந்தேகநபரின் பதிலில் அதிருப்தியடைந்த நீதிமன்று, அவர் மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளித்தது. (எ-37)

## பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு 16ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

பட்டதாரிகளை அரச சேவையில்இணைத்துக்கொள்வதற்கான அடுத்த கட்ட நேர்முகத்தேர்வு இந்த மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று தேசிய கொள்கைகள் மற்றும்பொருளாதாரவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர்அசங்கதயாரத்னதெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பட்டம் பெற்றுத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கானநேர்முகத்தேர்வுகள் அவரவர் பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளன. நேர்முகத் தேர்வில் தெரிவாவோர் 2019ஆம் ஆண்டு அரச சேவைகளில் நிலவும் வெற்றிடங்களில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் சுமார் 65ஆயிரம் பட்டதாரிகள் வேலையில்லாது உள்ளனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் 20ஆயிரம் பேருக்கு இந்த ஆண்டுஇரு கட்டங்களாகநியமனங்கள் வழங்கப்படும் என்றுஅரசுஉறுதியளித்திருந்தது. ஆனால்இதுவரைஅவை வழங்கப்படவில்லை.(எ-173)

# தொடரும் வன்முறையால் ஆட்சிக்கும் ஆபத்து வரும்

## அமைச்சர்கள் மைத்திரிக்கு எடுத்துரைப்பு

**கொழும்பு, ஜூலை 12**

**நாட்டில் தலைதூக்கியுள்ள வன்முறைக் குற்றச் செயல்களுக்கு துரிதகதியில் முடிவு கட்டுங்கள். சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும். இல்லாவிடில் அச்சமின்றிப் பல குழுக்கள் உருவாகி ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அமைச்சர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பாதாளக்குழுக்களுக்குஎதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுப்பதுகுறித்தும், நாட்டில்இடம்பெற்றுவரும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கவேண்டிய உடனடி நடவடிக்கைகள் தொடர்பிலும் அமைச்சரவைக் கூட்டத்தில்அதிககவனம்செலுத்தப்பட்டுள்ளது.

கூட்டரசின்அமைச்சரவைக்கூட்டம்அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனதலைமையில்நேற்று முன்தினம் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதேஇந்தக்கோரிக்கைமுன் வைக்கப்பட்டது.

கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும்இடம்பெற்றுவரும் துப்பாக்கிச்சூடு, வாள்வெட்டுமற்றும் கொடூரக் கொலைச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில், அவை குறித்து அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

சட்டவிரோதப்போதைப்பொருள் விற்பனையால்தான் பாதாளக் குழுக்கள் மோதிக்கொள்கின்றன. பாதாளக்குழுக்களுடன் தொடர்புடையவர்களுக்கும், சட்டவிரோதப்போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கும்தூக்குத் தண்டனை விதிக் கப்படவேண்டும்.

இதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைநீதியமைச்சு உடனடியாகச் செய்யவேண்டும் என்று புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரமபெரேராகோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப்பெரும்பாலானஅமைச்சர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இவ்வாறான குற்றச் செயல்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடின் அச்சமின்றிப் பல குழுக்கள்உருவாகும். இதனால் ஆட்சிக்கும்பெரும்ஆபத்துஏற்படும் என்று அமைச்சர்கள் சிலர் தெரிவித்தனர். பொலிஸார்உட்பட பாதுகாப்புத் தரப்பினரை அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடி உரிய நடவுடிக்கை எடுக்கப்படும்எனஅரசதலைவர் இதன்போது உறுதியளித்தார்.

தமது ஆட்சியில் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்ட பாதாளக்குழுக்களின்செயல்பாடுகள்கூட்டாட்சியில் தலைதூக்கியுள்ளது என்றும், இதற்கு அரசியல்வாதிகளின்ஆசிஇருக்கின்றதுஎன்றும் மகிந்தஅணியினர்குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

கொழும்பில், கடந்த ஞாயிறும், மறுநாள் திங்களன்றும் இடம் பெற்றஇரண்டுதுப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில், கொழும்பு மாநகரசபைஉறுப்பினர்கே.கிருஷ்ணா உட்படமூவர்கொல்லப்பட்டுள்ளனர். (ரி2)



# கன்னங்கராவின் உருவச்சிலை அரசதலைவரால் திறந்து வைப்பு

கொழும்பு, ஜூலை12

அரச தலைவர் அலுவலக வளாகத்தில்இலவசக்கல்வியின்தந்தையும், மத்திய கல்லூரி எண்ணக்கருவின் தோற்றுவிப்பாளருமான சீ.டபிள்யு. டபிள்யு. கன்னங்கராவின் உருவச்சிலைநேற்றுமுன்தினம்அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது.

சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவுக்குமதிப்பளிக்கும்வகையில்அரச தலைவர்அலுவலகம்மற்றும்அகில இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கத்தினதும் நெறிப்படுத்தலில் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலவசக் கல்வியின் தந்தையெனப் புகழாரம்சூட்டப்பட்டுள்ளசீ. டபிள்யூ. டபிள்யு. கன்னங்கரா நாட்டின் கல்வித்துறைக்கு ஈடிணையற்ற அரும் பணியாற்றியுள்ளார்.

இலவசக் கல்விக்கொள்கையும் மத்திய கல்லூரி பற்றிய எண்ணக்கருவும் கிடைக்கப்பெற்றது. விடுதி வசதியுடன் கூடிய மத்திய கல்லூரிகளை உருவாக்கி, கிராமங்களைமையமாகக்கொண்ட பல்கலைக்கழகங்களாக அவற்றை மாற்றியமைக்க கன்னங்கராவே முன்னோடியாகச் செயற்பட்டார்.

திறமையானஆசிரியர்களைஇனங்கண்டு நியமனம் செய்தார். சிறந்த அடிப்படைக் கல்வி வசதிகளை ஏற்படுத்தித்திறமையானமாணவர்களை மத்திய கல்லூரிகளுக்கு அனுப்பி வைத்தார்.

அதனூடாகநாடுமுழுவதும்கல்வித்துறையில் பெரியளவிலான அபிவிருத்தியை ஏற்படுத்தினார். வரையறுக்கப்பட்ட வசதி வாய்ப்புகளைக் கொண்டு உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மத்திய கல்லூரி எண்ணக்கருவை விரிவுபடுத்தவும் பங்களிப்புச் செய்தார்.

நினைவுப்பலகையைத்திரைநீக்கம் செய்து, சீ.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவின் உருவச்சிலையைத் திறந்துவைத்த அரச தலைவர், உருவச்சிலைக்குமலரஞ்சலிசெலுத்தினார்.

நிகழ்வில், சியம் நிக்காயவின் கோட்டே ஸ்ரீ கல்யானி சாமக்ரி தர்ம மகாசங்க சபையின் மகாநாயக்கர், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் கலாநிதி வண. இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர், எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன்உள்ளிட்டமக்கள்பிரதிநிதிகள், சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அகில இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கத்தின்தலைவர்தர்மசேனகஹதவ, அமைச்சர்வஜிரஅபேவர்த்தன, அகில இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில்முன்னாள்அமைச்சின்செயலர்சட்டத்தரணிஏ.பி.ஏ.குணசேகர, உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ரி2)

# அதிவேக நெடுஞ்சாலையில் கனரக வாகனங்களுக்குத் தடை

கொழும்பு, ஜூலை12

அதிவேக நெடுஞ்சாலை வீதியில் கனரக வாகனங்கள் செல்வதைத் தடுப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நெடுஞ்சாலைகள் நடத்துநர் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

பாவனைக்குப் பொருத்தமில்லாத ரயருடன் பயணிக்கும் வாகனங்கள் காற்றுப் போனால் நெடுஞ்சாலை வீதியில் வாகனத்தை நிறுத்தி ரயர்மாற்றுவதுதடுக்கப்படவுள்ளது.

அவ்வாறுநடைபெறுமாயின்அதற்குச்சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கும்தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வானகத்தைச் செலுத்திச் செல்லும் போது, தூக்கக்கலக்கம் ஏற்படுமாயின் 44 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் வெலிப்பனை ஓய்வெடுக்கும்மத்தியநிலையத்தில் ஓய்வெடுக்க முடியும். இல்லா விட்டால், அருகிலுள்ள வெளியே செல்லும் வழி ஊடாகச் செல்ல வேண்டும். அதிகவேகநெடுஞ்சாலைவீதியில் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பில் தூக்கம் மற்றும் சோர்வின் காரணமாக15:20விகிதமானஅளவு விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக நெடுஞ்சாலைகள் நடத்துநர் பிரிவினர் தெரிவிக்கின்றனர். (ரி2)

# யானைகளை தங்க வைக்க நிலையம் அமைப்பு

கொழும்பு, ஜூலை12

சிங்கராஜ வனத்தில் எஞ்சியிருக்கும் இரு காட்டு யானைகளைத் தங்க வைப்பதற்கான நிலையம் ஒன்றை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு யானைகளுக்கும் பொருத்தமான சூழலுடனான கலவான, தொல்கந்த கிராம சேவகர் பிரிவுக்கு உள்பட்ட பாருகல பிரதேசத்தில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த 36 ஏக்கர் காணியை கையகப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா தாக்கல் செய்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாதுகாக்கப்பட்ட சிங்கராஜ வனத்தைச் சுற்றியுள்ள பகுதி வாழ் மக்களின் உயிரிழப்புக்கள் மற்றும் சொத்து இழப்பு உட்பட யானைகளின் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது. (ரி2)

# தண்டப்பணம் அதிகரிப்பு; சாரதிகளே அவதானம்

கொழும்பு, ஜூலை12

மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரகாரம், 33 போக்குவரத்துக்குற்றங்கள்தொடர்பில்விதிக்கப்படும்தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இம் மாதம் நடைமுறைக்குவரவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும்15ஆம் திகதி முதல் அது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றுபொலிஸ்மோட்டார்வாகனப் போக்குவரத்துப்பிரிவின்பணிப்பாளர்பொலிஸ்அத்தியட்சகர்இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார்.

இது தொடர்பில் 42 பொலிஸ் அத்தியட்சர்பிரிவுகளின்கீழ் உள்ள 489 பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார்ஒருஇலட்சத்துக்கும் அதிகமான, புதிய தண்டப்பணப் பத்திரங்களை அச்சிடும் பணியும் நிறைவு செய்யப்பட்டு, அவையும் தற்போது பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

> **பெரியளவிலான வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அதிக வேகத்துடன் வாகனங்களைச் செலுத்துவதற்கான தண்டப்பணம் 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.**

போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திப்போக்குவரத்து அமைச்சின் ஊடாகப் போக்குவரத்துக் குற்றங்களுக்காக அறவிடப்படும் ஸ்தல தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அறவிடப்பட்ட தண்டப்பணமானது 30 வீதம் முதல் 50 வீதம் வரையில் 33 குற்றங்கள் தொடர்பில்அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தண்டப்பணஅதிகரிப்புவிவரங்கள்கடந்தஜனவரி15ஆம்திகதி வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவித்தல் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது.

இதுவரையில் ஸ்தல தண்டப்பணம்அறவீடு23போக்குவரத்துக் குற்றங்கள்தொடர்பிலேயேஅறவிடப்பட்டது. இது தற்பொழுது 33 குற்றங்களைஉள்ளடக்கும்வகையில்செயல்படுகின்றது.

பெரியளவிலான வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அதிக வேகத்துடன் வாகனங்களைச் செலுத்துவதற்கான தண்டப்பணம் 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்குகளை மீறுதல், வீதிகளில் வாகனங்களை நிறுத்தும் போது உரிய ஒழுங்குகள், பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றாமை, பொலிஸாரின் உத்தரவுகளுக்குசெவிமடுக்காமல்செயல்படுதல் போன்ற குற்றங்களுக்கான ஸ்தல தண்டப்பணமாக தலா 2 ஆயிரம்ரூபாஅறவிடப்படவுள்ளது.

ஆசனப் பட்டி அணியாமல் பயணிப்பது, அதிகசத்தத்தை வெளிப்படுத்துதல், அதிக புகையைக் கக்குதல்போன்றகுற்றச்செயல்களுக்கு, தலா ஆயிரம் ரூபா ஸ்தல தண்டப்பணமும் அறவிடப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி2,21,71)

# தாய்லாந்துக் குகையில் சிறுவர்கள் சிக்கியது முதல் மீட்கப்பட்டது வரை

தாய்லாந்தில் சுமார் 10 கி.மீ. நீளமுள்ள, சிக்கலான குகை அமைப்பு ஒன்றுக்குச் சாகசப் பயணம் மேற்கொண்ட 12 பேர் கொண்ட சிறுவர் கால்பந்து அணியும் அவர்களது பயிற்சியாளரும், திடீர் மழை வெள்ளத்தால் சுமார் ஒரு கிலோமீற்றர் ஆழத்தில் சிக்கிக் கொண்டனர். 17 நாள்களின் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டனர். மீட்புப் பணியின் சாகசத் தன்மை குறித்த ஆச்சரியத்தோடு உலகம் உற்று நோக்கி வந்தது. 'காட்டுப் பன்றிகள்' என்று பெயரிடப்பட்ட இந்த சிறுவர் கால்பந்து அணி குகையில் தொலைந்து போனது முதல், மீட்கப்பட்டது வரையிலான 17 நாள் போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகள் இங்கே.



### எப்படிக் காணாமல் போனார்கள்?

தாய்லாந்தில் சுமார் 10 கி.மீ. நீளமுள்ள ஆழமான தாம் லுவாங் மலைக் குகைக்கு ஜூன் 23ஆம் திகதி சாகசப் பயணம் மேற்கொண்ட 12 பேர் கொண்ட சிறுவர் கால்பந்து அணியும் அவர்களது பயிற்சியாளரும் குகையில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கால் உள்ளேயே சிக்கிக் கொண்டனர். குகைக்கு வெளியே அவர்கள் நிறுத்தியிருந்த சைக்கிள்கள் கேட்பாரற்றுக் கிடந்ததைப் பார்த்து யாரோ குகைக்குள் சிக்கிக் கொண்டதை அறிந்துகொண்ட அதிகாரிகள், அரசை உஷார் படுத்தியதை அடுத்து அவர்களைத் தேடும் பணி அன்றிரவே தொடங்கியது.

அவர்கள் உள்ளே சென்றிருந்த நிலையில், திடீரெனப் பெய்த பெருமழையும், அதையடுத்து குகைக்குள் பாய்ந்த காட்டு வெள்ளமும் குகையின் வெளியேறும் வாயில்களை அடைத்துக் கொண்டதால், இந்த 13 பேர் அணி, ஒதுங்குவதற்கு சற்று மேடான இடத்தைத் தேடி குகைக்குள் பின்னோக்கிச் சென்றதாகத் தெரிகிறது. ஆனால், வெள்ளம் சூழ்ந்த, ஆழமான, சிக்கலான பாதைகளை உடைய அந்தக் குகையில் சிக்கிக் கொண்ட கால்பந்து அணியைக் கண்டுபிடிப்பது சவாலாக இருந்தது. இந்த விவகாரம் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தைப் பெற்றது. பிரிட்டனின் குகை மீட்பு வல்லுநர்கள் உள்பட, உலகின் பல நாடுகளைச் சேர்ந்த முக்குளிப்பு வீரர்களும், குகை மீட்பு வீரர்களும் தாய்லாந்தில் குவிந்தனர்.


9 நாள் போராட்டத்துக்குப் பிறகு, ஜூலை இரண்டாம் திகதி பிரிட்டன் குகை மீட்பு வீரர்கள் சிறுவர்களையும், அவர்களின் பயிற்சியாளரையும் குகை வாயிலில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் ஒரு பாறை இடுக்கில் உயிருடன் கண்டுபிடித்தனர். இந்த குகை அமைப்பு ஒரு மலையின் அடிப்புறத்தில் அமைந்துள்ளது. மலையின் உச்சியில் இருந்து சிறுவர்கள் சிக்கியுள்ள இடம் சுமார் ஒரு கி.மீ. ஆழத்தில் இருந்தது.

குகையில் வெள்ளம் சூழ்ந்திருப்பதால் சிறுவர்கள் முக்குளிக்கக் கற்றுக் கொண்டு வெள்ளம் சூழ்ந்த குகையை நீந்திக் கடக்க வேண்டும் அல்லது வெள்ளம் வடியும் வரை சுமார் 4 மாதம் குகையிலேயே காத்திருக்கவேண்டும் என்று தாய்லாந்து இராணுவம் அறிவித்தது. அப்போதுதான் மீட்புப் பணி அவ்வளவு எளிதாக இருக்கப்போவதில்லை என்பதை உலகம் உணர்ந்தது.

ஒருபுறம் குகையில் இருந்த தண்ணீரை மோட்டார் வைத்து இறைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மறுபுறம் குகையின் ஆழத்தில் சிக்கிக் கொண்ட சிறுவர்கள் மற்றும் பயிற்சியாளருக்கு உணவு, மருந்து, ஒக்சிசன் சிலிண்டர் ஆகியவற்றை விநியோகம் செய்யும் பணியை தேர்ச்சி பெற்ற முக்குளிக்கும் வீரர்கள் மேற்கொண்டனர். சிக்கிக்கொண்ட சிறுவர்களும், பயிற்சியாளரும் குகையில் இருந்து குடும்பத்தினருக்கு எழுதி அனுப்பிய கடிதங்கள் மனதை உருக்கின.



தாய்லாந்து கடற்படையின் தேர்ச்சி பெற்ற முக்குளிக்கும் வீரர் சமன் குனன் குகையில் சிக்கிய சிறுவர்களுக்கு ஒக்சிசன் உருளையை கொடுத்து விட்டுத் திரும்பி வரும் வழியில் அவருக்கு ஒக்சிசன் தீர்ந்துபோனதால் ஜூலை 6ஆம் திகதி உயிரிழந்தார்.




### மீட்புத் திட்டம்

இது மீட்புக் குழுவை அதிர்ச்சி அடைய வைத்ததோடு, இது எவ்வளவு ஆபத்தான பணி என்பதையும் காட்டியது. அத்துடன், முன்னரே திட்டமிட்டபடி சில மாதங்கள் காத்திருப்பதில் பெரும் சிக்கலும் ஏற்பட்டது. தாய்லாந்தில் சில நாள்களில் கடும் மழை எதிர்பார்க்கப் பட்டதால், இந்தக் குகை மேலும் வெள்ளமயமாகும் அபாயம் என்று மீட்புக் குழு அஞ்சியது. இதனால், ஆபத்தான வழி என்றாலும், சிறுவர்களை போதிய பாதுகாப்பு உடையோடு முக்குளிக்க வைத்து மீட்பது என்று முடிவெடுத்தனர். குகையின் உள் பகுதி சில இடங்களில் 33 அடி உயரம் வரை இருந்தாலும், சில இடங்கள் மிகவும் குறுகலானவை. ஒரு இடம் வெறும் 40 செ.மீ. அகலம் மட்டுமே உடையது. மீட்புப் பணியாளர்கள் தங்கள் காற்று உருளையையோடு அந்த இடங்களை நீந்திக் கடப்பது கடினம். எனவே, அவர்கள் தங்கள் உருளையை கழற்றி எடுத்துக் கொண்டுதான் அந்த இடங்களைக் கடக்க முடியும். இந்த நிலையில் ஒவ்வொரு சிறுவரோடும் இரண்டு முக்குளிக்கும் வீரர்கள் உடன் வரும்வகையில் மீட்புப்பணி திட்டமிடப்பட்டது. மீட்பு வீரர்களுக்கு வழிகாட்டுவதற்காக மீட்புப் பாதையில் மிகப்பெரியதொரு கயிறு கட்டப்பட்டது. அதன் வழியாக இரண்டு மீட்பு வீரர்களும் ஒரு சிறுவனும் நீந்திக் கடக்கும் வகையில் திட்டமிடப்பட்டது.

### முழு முகத்தையும் மூடும் கவசம்

சிறுவனின் காற்றுக் குடுவையை ஒரு மீட்பு வீரர் சுமந்து வரும் வகையிலும், ஒரு வீரரோடு, மீட்கப்படும் ஒரு சிறுவன் கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும் வகையிலும் மீட்புப் பணி திட்டமிடப்பட்டது. மீட்கப்படும் சிறுவர்களின் முழு முகத்தையும் மூடும் வகையில் மூச்சுக் கவசம் பொருத்தப்படும். இது போதிய பயிற்சி இல்லாத சிறுவர்கள் முக்குளித்து நீந்த உதவியாக இருக்கும்.

ஆனால் மீட்புப் பாதை என்பது வெறும் நீந்தும் வகையில் மட்டும் இல்லை. நடப்பது, பாறை ஏறுவது, சேற்றில் நடப்பது போன்றவற்றையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். சேம்பர் 'சி' என்ற இடத்தை அடைந்த பிறகு அவர்கள் ஓய்வெடுத்துவிட்டு நடந்தே வந்துவிடலாம். அந்த இடத்தில்தான் மீட்புப் பணியாளர்கள் முகாம் அமைத்திருந்தனர்.

குகைக்குள் சிறுவர்கள் சிக்கியுள்ள இடத்தில் காற்றில் ஒக்சிசன் விகிதம் வீழ்வது அச்சுறுத்துவதாக இருந்தது. சாதாரணமாக காற்றில் 21 சதவீத ஒக்சிசன் இருக்கவேண்டும். ஆனால், குகைக்குள் 15 சதவீதம் வரை ஒக்சிசனின் அளவு வீழ்ந்தது. எனவே, மீட்புப் பணியாளர்கள் இதுவரை நூறு ஒக்சிசன் உருளைகளை சிறுவர்கள் சிக்கியுள்ள இடத்துக்கு கடும் இடர்ப்பாடுகளுக்கு இடையில் கொண்டு சென்றுள்ளனர்.

### மீட்பு

ஞாயிற்றுக்கிழமை முதல் நாள் மீட்புப் பணியில் நான்கு சிறுவர்கள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தேவைப்படுகிறவர்களை உடனடியாக ஏற்றிச் செல்வதற்கு வசதியாகஉலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்பட்டன. நான்கு பேர் மீட்கப்பட்டவுடன், காற்றுக் குடுவைகளை நிரப்பு வதற்காகவும், அடுத்தகட்டத்தை திட்டமிடுவ தற்காகவும், இரவு நேரத்தில் மீட்புப் பணி நிறுத்தி வைக்கப் பட்டது.

திங்கட்கிழமை தொடங்கிய இரண்டாவது நாள் மீட்புப் பணியும் வெற்றிகரமாகவே தொடர்ந்தது. ஆனால், இரண்டாவது நாள் மீட்கப்பட்ட நான்கு சிறுவர்களில் சிலர் ஸ்ட்ரெச்சரில் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், அவர்களும் நலமுடனே இருப்பதாக பின்பு தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட சிறுவர்களுக்கு நோய்த்தொற்று இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகள் வரும் வரை அவர்கள் யாரும் தங்கள் குடும்பத்தினரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. எனினும், செவ்வாய்க்கிழமை சில சிறுவர்கள் கண்ணாடி வழியாகத் தங்கள் பெற்றோரை சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்.

### சீல்கள்

செவ்வாய்க்கிழமை மூன்றாம் நாள் மீட்புப் பணியை உற்சாகத்தோடு தொடங்கியது தாய்லாந்தின் கடற்படை சீல் அணி. தொடக்கம் முதல் மீட்புப் பணியை ஒருங்கிணைத்ததும், முன்னணியில் நின்றதும் இந்த அணியே. கடல், வான், நிலப் பரப்புகளில் செயல்படும் உயர் திறன் வாய்ந்த அணிகளையே சீல் அணி என்பர். மூன்றாம் நாள் மீட்புப் பணியை மேற்கொள்ள 19 தாய்லாந்து கடற்படை சீல் வீரர்கள் குகைக்குள் நுழைந்தனர்.

முதல் இரண்டு நாள்களைப் போல அல்லாமல் செவ்வாய்க்கிழமை மீட்புப்பணி நீண்ட நேரம் பிடிப்பதாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால், எதிர்பார்த்ததற்கும் மாறாகமிகவிரைவிலேயேமீட்புப்பணிவெற்றிகரமாகமுடிந்தது. கால்பந்து அணியைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர் ஆகியோர் வெளியேறிய பிறகே, அவர்களுடன் தங்கியிருந்த மருத்துவர், கடற்படை வீரர்கள் உள்ளிட்ட நான்குபேர் கடைசியாக குகையை விட்டு வெளியேறினர்.

### படிப்பினை

இயற்கையின் சிக்கலான குகை அமைப்பையும், ஆபத்தான மீட்புப் பணியையும் உலகம் வாய்பிளந்து பார்த்தது. அது மட்டுமல்ல, இடர்கால மீட்பு என்ற துறை படித்துக் கொள்வதற்கு இந்தச் சம்பவம் மிக அரிதான பாடங்களை அளித்தது. கண்டுபிடிக்கப்படும் வரை முதல் 9 நாள்கள் குகைக்கடியில் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நம்பிக்கையும், உற்சாகமும் குறையாமல் காத்திருந்த சிறுவர் அணியின் மன உறுதி குறிப்பாக கவனிக்கப்பட்டது. உறுதியோடு இந்த அணியை காத்திருக்கச் செய்ததில் பயிற்சியாளர் ஏக்போலின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் கணித்துள்ளனர்.

தேச, இன, நிற எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதும் இருந்து வந்த மீட்புப் பணியாளர்களின் உதவியும், எல்லை கடந்த மானுடத்தின் வாஞ்சையும், எதிர்பார்ப்பும் இந்த நெருக்கடிக்கு ஒரு மனிதாபிமானக் கோணத்தையும் அளித்தன.

# தென்சூடான் உள்நாட்டு போரில் இராணுவத்தால் போர்க்குற்றம்

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்



தென்சூடானில் அரச தரப்புக்கும் கிளர்சிக் குழுவுக்கும் இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது இராணுவத் தரப்பு போர்க் குற்றங்கள் பல புரிந்தது என்று ஐக்கியநாடுகள் சபைதெரிவித்தது.

தெற்கு சூடானில் அரச தரப்புக்கும் கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையே கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. கிளர்ச்சிக் குழுவிடம் உள்ள கிராமங்களைக் கைப்பற்றுவதற்காக அரச தரப்பால் உக்கிரமமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அத்துடன் பல்வேறு பட்ட போர்க் குற்றங்களையும், அட்டூளியங்களையும் பொதுமக்கள் மீது இராணுவம் கட்ட விழ்த்து விட்டது என்கிறது ஐ.நா. அறிக்கை.

அந்த அறிக்கையில், "தெற்கு சூடானில் கிளர்ச்சியாளர்கள் வசம் இருந்த கிராமங்கள் மீது அரச படைகள் மற்றும் அதன் ஆதரவுப் படைகள் தாக்குதல் நடத்தியதில் 232 பேர் கொல்லப்பட்டனர் என்றும், தாக்குதலின்போது 120 பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூனைட்டி மாநிலத்தில் கடந்த ஏப்ரல் 16ஆம் திகதி முதல் மே 24ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த அட்டூழியங்களுக்கு மூன்று இராணுவ மேலதிகாரிகள் பொறுப்பாளிகள் என ஐ.நா. விசாரணையில் தெரியவந்துள்ளது" என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்கள்

இஸ்லாமபாத், ஜூலை 12

பாகிஸ்தானின் பெசாவர் நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஆயுததரிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தானின் ஆளும் கட்சியின் ஆட்சிக்காலம் மே 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இதையடுத்து, ஜூலை 25ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. தேர்தலில் வெற்றிபெற அனைத்துக் கட்சிகளும் தீவிர பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றன.

பெஷாவர் பகுதியில் நேற்று முன்தினம் தேசிய அவாமி கட்சியின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இதில் ஆயுததாரியொருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் அவாமி கட்சியின் வேட்பாளர் உட்பட 12 பேர் உயிரிழந்தன்ர். (ம)





# 600 கிலோ எடையுள்ள முதலை பிடிபட்டுள்ளது

## ஆஸியில் சம்பவம்

சிட்னி, ஜூலை 12

ஆஸ்திரேலியாவில் சுமார் 600 கிலோ எடையுள்ள முதலையொன்று பிடிபட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் வடக்கு பகுதியில் காத்ரீன் ஆறு உள்ளது. இங்கு மிகவும் அதிக எடையுடன் கூடிய இராட்சத முதலை இருந்தது. சமீபத்தில் அந்த முதலை பொதுமக்கள் வாழும் பகுதிக்குள் நுழைய எத்தனித்தது. இதனால் முதலையைத் தீவிரமாகக் கண்காணித்து வந்த வனத்துறையினர் நேற்றுமுன்தினம் அதை உயிருடன் பிடித்தனர். (ம)

# அமெரிக்காவுடனான போர்ப் பயிற்சியை நிறுத்துவதாக தென்கொரியா அறிவிப்பு

சியோல், ஜூலை 12

அமெரிக்காவுடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தவிருந்த இராணுவப் போர்ப் பயிற்சியை நிறுத்துவதாக அறிவித்தது தென்கொரியா.

அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. எனினும், இந்த வருடத்துக்கான போர்ப் பயிற்சி நடைபெறாது என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில் தென்கொரியாவும் அந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

கொரியத் தீபகற்பத்தில் நடத்தப்படும் இந்தப் பயிற்சி வடகொரியாவைக் கோபப் படுத்துகிறது. இதனால் கொரியத் தீபகற்பம் தொடர்ந்து பதற்றத்தில் இருக்கிறது என்று காலாகாலமாக பன்னாட்டுத் தரப்புக்களும் குற்றம் சுமத்துகின்றன. அத்துடன் கொரியத் தீபகற்பத்தில் இடம்பெறும் போர்ப் பயிற்சியைத் தவிர்க்க வேண்டும் என்று அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற சந்திப்பில் வைத்து ட்ரம்பிடம் தெரிவித்தார் கிம் ஜோங் உன். இதை ட்ரம்பும் ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





பிரிட்டன் வான் படையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் அங்கு கோலாகலமாக இடம்பெற்றன. அதன் ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வடக்கு மாகாண சபை செய்திருக்கும் சாதனை

எது எதுக்கெல்லாமோ முன்னுதாரணமாகத் திகழும் என்று எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபை கடைசியில் சபையின் அமைச்சரைப் பதவி விலக்க முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்கிற சட்டக் கேள்விக்குப் பதில் தேடித் தருவதுடன் தனது ஆட்சியை நிறைவு செய்யப் போகின்றது. இதை நினைத்துத் தமிழர்கள் பெருமைப்படுவதா? அழுவதா?

இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தத்தின் மூலமே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. தொடக்கம் முதலே தமிழர் தரப்பு இதனை நிராகரித்தது. தமிழர்கள் கேட்கும் தீர்வுக்கான அடிப்படையாகக்கூட இது இருக்கமுடியாது என்று எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

மாகாண சபை தமிழர்களுக்குத் தீர்வாக முடியாத ஒன்று என்பதை உலக சமூகத்திற்கு நிரூபிப்பதற்காகத்தான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றோம் என்றுகூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தேர்தல் காலங்களில் விளக்கம் அளித்ததை மறந்துவிட முடியாது.

ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரை வடக்கு மாகாண முதலமைச்சராக்கியபோது இந்தச் சபையொரு செல்லாக்காசு என்பதை அவர் அணுவணுவாக உலகத்துக்கு எடுத்துக்காட்டுவார் என்றெல்லாம் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. நடந்ததோ அதற்கு மாறானது. அவர் ஒரு ஓய்வுபெற்ற நீதியரசராக வேறு இருந்ததனால் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை எல்லாம் அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து உதறுவார் என்றெல்லாமும்கூட எதிர்பார்ப்பு இருந்தது.

பாவம் தமிழ் மக்கள்! அவர்கள் எதிர்பார்த்தது எதுவும் அவர்களுக்கு நடப்பதில்லை என்பதே அவர்களின் வரலாறு. வடக்கு மாகாணசபையின் நிலையும் அதுதான். தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு மாகாண சபை ஒரு தீர்வாக முடியாது என்பதை உலகுக்கு நிரூபித்ததோ இல்லையோ ஆட்சி அதிகாரத்தைத் தமிழர்களின் கையில் கொடுப்பது குரங்கின் கைப் பூமாலை என்பதை நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இன்னும் இன்னும் அதிகாரங்களைக் கொழும்பிடம் இருந்து பறித்தெடுப்பார்கள், சட்ட ரீதியாக வீரப் போராட்டம் நடத்துவார்கள் என்று வடக்கு மாகாண சபையைத் தமிழ் மக்கள் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்க அவர்களோ ஒரே கட்சியின் முதலமைச்சர் அதே கட்சியைச் சேர்ந்தவர்களை அமைச்சராக நியமிக்கவும் நீக்கவும் அதிகாரம் படைத்தவரா இல்லையா என்று ஒவ்வொரு நீதிமன்றமாகச் சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.


வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் விடயத்தில்தான் இந்தச் சட்டப் போராட்டம் மும்முரமாகியிருக்கிறது. அமைச்சர் டெனீஸ்வரனை தன்னுடைய சொந்த விருப்பின் பேரில் பதவி விலக்கினார் முதலமைச்சர். அதற்கு அவருக்கு முழுமையான அதிகாரமும் வசதியும் இருந்தபோதும் நெருக்கடி கொடுத்த பின்னர், டெனீஸ்வரனை அவரது கட்சி நீக்கியது என்று தெரிவித்து பதவி விலக்கினார். மற்றொரு அமைச்சரான பா.சத்தியலிங்கம் முதலமைச்சரின் நெருக்கடியை அடுத்துத் தானாகவே பதவி விலகினார். அவர்கள் இருவர் மீதும் மீண்டும் ஒரு ஊழல், மோசடி விசாரணைக் குழு விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்த முதலமைச்சர் பின்னர் சத்தியலிங்கம் பதவி விலகியதும் டெனீஸ்வரனைப் பதவி நீக்கிவிட்டு ப்திய அமைச்சரவையை நியமித்தார். அத்துடன் ஊழல், விசாரணைக் குழு நியமனம் குறித்த கதையை அப்படியே கைவிட்டார். அண்மையில் ஒருநாள், அவர்களைப் பதவி விலக்குவதற்காகத்தான் அப்படிச் சொன்னேன் என்று மாகாண சபையில் பச்சையாக ஒப்புக்கொள்ளவும் செய்தார்.

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதை ஏற்க மறுத்த டெனீஸ்வரன் நீதிமன்றத்தை நாடினார். அவரைப் பதவி நீக்கியதில் சட்ட மீறல்கள் இருப்பதாகக்காட்டி அவரது அமைச்சுப் பதவியை மீளளிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இப்போது அதனை எதிர்த்து உயர் நீதிமன்றம் சென்றிருக்கிறார் முதலமைச்சர். விரைவில் தீர்ப்பு வந்துவிட்டால் அமைச்சரை சொந்த 'ஈகோ'வுக்காகப் பதவி நீக்க முதலமைச்சர் ஒருவருக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பது இந்த உலகத்துக்குத் தெரியவந்துவிடும்.

எப்படியிருந்தாலும் 30 ஆண்டுகளாக மற்ற எந்தவொரு மாகாண சபையினருக்கும் வந்திருக்காத இத்தகையதொரு சந்தேகத்தை உருவாக்கி அதற்குத் தீர்வும் காணும் வகையில் வடக்கு மாகாண சபை மற்றெல்லா மாகாண சபைகளுக்கும் ஒரு முன்னுதாரணம்தானே! தமிழர்கள் தம் விதியை நொந்து கொண்டாலும் இந்தச் சாதனையை ஏற்றுத்தானாகவேண்டும்.



ஆங்கில மொழி மூலம் - டெய்லி மிரர்
(கே.கே.எஸ்.பெரேரா)
தமிழில் - ஆனந்த்





தெற்கில் ஒரு தரப்பினர் இலங்கையில் ஹிட்லரின் ஆட்சி போன்ற ஆட்சிமுறை உருவாக வேண்டும் என்கிறார்கள். வடக்கிலோ தமிழீழ விடுதலைப்புலிகள் தலைதூக்க வேண்டும் என்று இன்னொரு தரப்பினர் விரும்புகிறார்கள். இந்த நிலை தொடருமானால் இந்த இரு தரப்பினரும் தாம் விரும்பும் விதத்திலான தலைவர்களை அடைந்திடக் கூடும்.

உண்மையைக் கூறுவதானால் நாட்டின் பெரும்பாலான மக்கள் குறிப்பிட்ட இந்த இரு நபர்களது மீள் வருகையை விரும்பவில்லை. உபாலி தேரர் மற்றும் அமைச்சர் விஜயகலா ஆகிய இவ் இருவருமே இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியன்று இந்த நாட்டு மக்கள் வெளிப்படுத்திய நல்லாட்சி அரசுக்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்துள்ளனர். ஒரு விடயத்தைக் கூறும்போது, வேறு ஒரு விடயத்தின் உள் அர்த்தம் வெளித்தெரியாதவாறு வெளிக்கொண்டு வரக்கூடிய பேச்சுத் திறன் அவர்களிடம் இருக்கிறது.

"கெட்ட செய்திகளை கொண்டு வரும் தூதனை எவரும் விரும்புவதில்லை" என்றொரு முதுமொழி வழக்கில் உள்ளது.

### நீங்கள் ஹிட்லராகவே இருங்கள் என கோத்தாபாயவுக்கு உபாலிதேரர் ஆலோசனை

கோத்தபாய ராஜபக்சவின் இல்லத்தில் இடம் பெற்ற கோத்தபாயவின் பிறந்தாள் வைபவத்தில் நல்லாசி வழங்கிய வெதறுவ உபாலி தேரர்" பலர் உங்களை ஹிட்லர் என வர்ணிக்கிறார்கள். நீங்கள் ஹிட்லராகவே இருங்கள். இராணுவத்தின் உதவியுடன் இந்த நாட்டின் அரச தலைவர் பதவியை பொறுப்பேற்று நாட்டை வழிநடத்துங்கள் "எனக் கூறியுள்ளார். இந்தத் தேரரின் செய்தி, பொது மக்களிடமுள்ள நல்ல பண்புகளை சீரழிப்ப தாகவே, ஒரு ராஜத் துரோகச் செயலாகவே அமைந்துள்ளது. ஸ்திரமில்லாமல் தன் எதிர்காலம் என்னவாகும் என்று தெரியாமலே செயற்படும் அரசு, எந்த வேளையிலும் பதவி கவிழ்ந்து விடக் கூடும் என்பதை மக்கள் அறிவார்கள். இந்தச் செய்தியை கூறுபவர்களும் அறிவார்கள். இப்படி ஹிட்லர் அல்லது பிரபாகரன் என கருத்துக் கூறியவர்களை குறைகூறுவது அல்லது பதவி விலக்குவது என்பது ஒரு அரசியல் தந்திரம்தான்.

வடக்குக்கும் கிழக்குக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசன்னம் கட்டாயம் தேவைப்படுகிறது என முன்னாள் ராஜாங்க அமைச்சர் விஜயகலா பொது நிகழ்வொன்றில் வைத்துக் கூறியுள்ளார். அத்துடன் அவர் இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் அமர்ந்திருந்த மேடையிலே இப்படியானதொரு கருத்தை முன் வைத்திருந்தார்.

"வடக்கில் உள்ள பல பெண்கள் பெரிய சிரமங்களுக்கு மத்தியில்தான் வாழ்ந்து வருகின்றனர். அண்மையில் யாழ்ப்பாணத்தில் 6 வயதுடைய சிறுமி கொலை செய்யப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகள் இப்போது இருந்திருந்தால், இப்படியானதொரு சம்பவம் இடம்பெற்றிருக்காது எனவும் அவர் கருத்துவெளியிட்டிருந்தார். கூட்டத்தை கவரும் வகையில் பொடி வைத்துப்பேசுவதில் கைதேர்ந்தவர் இந்த விஜயகலா.

சமீப காலங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் ஊடாக தெளிவாகும் ஒருவிடயம், வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் இதயங்களில் இருந்து இன்னமும் கூட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளது நினைவுகள் மறையவில்லை என்பதுதான்.

மறைந்த முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் மனைவிதான் இந்த விஜயகலா. வடக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடவும், பிள்ளைகள் அச்சம் எதுவுமின்றி பாடசாலைகளுக்குச் சென்றுவரவும், மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக வேண்டுமென்ற கருத்தை விஜயகலா முன்வைத்திருந்தார்.

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமல் இங்கு அவருடைய க்ட்சியை பலப்படுத்துவதில் தான் ஆர்வம் காட்டுகிறார். மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டார்" எனவும் அமைச்சர் விஜயகலா குறிப்பிட்டுள்ளார்.

### மகிந்தவின் ஊழல் விவகாரத்தை திசைதிருப்பும் முயற்சியா? என்ற சந்தேகம்

ஆயினும் அரசியல் நிலவரங்கள் சூடுபிடித்திருக்கும் ஒரு பின்னணியில், சீன நிறுவனம் ஒன்றிடம் இருந்து 7.6 மில்லியன் அமெரிக்க டொலர்ளை மகிந்த ராஜபக்ச முறைகேடாக தமது தேர்தல் பரப்புரைச் செலவுகளுக்காகப் பெற்றுக்கொண்டதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு விவகாரம், இந்த அமைச்சர் விஜகலாவின் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய கருத்துக் காரணமாக திசைதிரும்பி இப்போது எல்லோருடைய பார்வையும் அமைச்சர் விஜயகலா மேல்தான் விழுந்துள்ளது.

அதேபோலவே "அர்ஜுன் அலோசியசின் மெண்டிஸ் நிறுவனத்திடமிருந்து 118பேர் இலஞ்சமாக பணம்பெற்றுக்கொண்டமை தொடர்பான விவகாரமும் மெல்ல அடங்கிப் போய்விட்டது.

சமீப காலங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் ஊடாக தெளிவாகும் ஒருவிடயம், வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் இதயங்களில் இருந்து இன்னமும் கூட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளது நினைவுகள் மறையவில்லை என்பதுதான்.

நாட்டில் சமாதானம் உருவாகி சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில், இப்படி தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் உருவாக வேண்டும் எனக் கூறப்படும் போது அது நாட்டின் சமாதானத்தையும் ஒற்றுமையையும் சீர்குலைப்பதாக அமைந்துவிடும். கடந்த 70வருடங்களாகவே எங்களை ஆண்ட அரசியல்வாதிகள் இப்படி இனவாதத்தைத்தூண்டிவிட்டுத்தான் அரசியல் செய்துள்ளனர்.

எங்கள் அரசியல்வாதிகளுக்கு. தற்போது இந்த விஜயகலாவின் விடயம் போதும் அரசியல் செய்வதற்கு இந்த விடயத்துக்குச் சார்பாகவும் சிலர் குரல் எழுப்ப, பல அரசியல்வாதிகள், பேரினவாதிகள், மதகுருமார் எனப் பலரும் இதற்கு எதிராக கோஷம் எழுப்பும்போது, பொது மக்களின் மனதில் இது ஒரு பீதியை உருவாக்கிவிடும். ஒருவருடன் ஒருவர் ஒத்துப்போகாத இரண்டு தலைவர்களும், எல்லா விடயங்களிலும் சர்ச்சைக்குரியவர்களாகவே இருந்து கொண்டு, ஏதாவது ஒருவிடயத்தில் ஒருவர் மேல் ஒருவர் பழி போடுகின்றனர். இதில் ஒருவர் நேரடியாக வெளிப்படையாகவே தாக்குகிறார். மற்றவர் தனது உதவியாளர் ஊடாக அதனைச் செய்கிறார். இப்படியாக இரண்டு தலைவர்களும் தங்களுக்குள்ளேயே பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டதன் பயனாக அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயம் கிடப்பில்போடப்பட்டுவிட, அதுவே வடக்கில் அமைதியின்மையை உருவாக்கி இறுதியில் அமைச்சர் விஜயகலா மீண்டும் விடுதலைப்புலிகள் உருவாக வேண்டும் என்று கூறும் அளவுக்கு கடுமையான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இது ஒரு பக்கம் இருக்க, மறுபக்கத்தில் சர்வாதிகாரம், அராஜகம், இலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என எல்லாவற்றையுமே நடத்திய முன்னைய அரசின்

# நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் தலைத்தூக்க வேண்டுமா? மீண்டும் ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சி உருவாக வேண்டுமா?

ராஜபக்ச குடும்பம், இப்போது மெள்ள மெள்ள தலைத்தூக்கி தங்கள் அரசியல் வாழ்க்கையை மீண்டும் புதுப்பிக்க முயல்கின்றது.





**கோத்தபாயவுக்கு தமிழர் எவரும் வாக்களிக்க மாட்டார்கள் என தர்மலிங்கம் சித்தார்த்தன் விமர்சிப்பு**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் "தமிழ் மக்கள் பொதுவாக கோத்தபாயவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். ஆயினும் ஒரு சிலர் அவரை ஒரு செயல் வீரராக நினைக்கின்றனர். வடக்கிற்கோ தெற்கிற்கோ சொல்வீரர்கள் தேவையில்லை.செயல் வீரர்கள்தான் தேவைப்படுகிறார்கள்" எனத் தெரிவித்திருந்தார்.

வடக்கில் இளைஞர்களிடையே மீண்டும் பயங்கரவாதம் தலைத்தூக்கக் கூடிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

அத்துடன் இந்த இளைஞர்களை தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியில் வடமாகாண முதலமைச்சரும் வேறுசிலஉறுப்பினர்களும் ஈடுபட்டுள்ளனர். இந்தக்குழுவில் கடைசியாக இணைந்துக்கொண்டவர்தான் விஜயகலா. நிலமை கட்டுக்கடங்காமல் போகுமுன்னர் அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

30வருட போர் இந்த நாட்டை கிழிந்த கந்தல் துணிபோல் ஆக்கிவிட்டது. வடக்கிலுள்ள மக்களுக்குக் குறைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். அரசு வடக்கில் சட்டம் ஒழுங்கைநிலைநாட்டவும்,குற்றவாளிகளைக் கைதுசெய்து குற்றங்களை கட்டுப்படுத்தவும் தவறிவிட்டது. பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்டிருந்த மக்கள், அரசு செய்த நல்ல விடயங்களைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் இழைந்த பேரழிவுகளுடன் ஒப்பிடுகையில், மீண்டும் அவர்களுக்கு அழைப்பு விடுப்பது மக்களுக்கு கேடு விளைவிப்பதாகவே அமையும். விஜயகலாவின் மேடைப்பேச்சின் உண்மைத் தன்மை என்னவென்றால் வடக்கில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படவேண்டும் என்பதுதான். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் கற்பழிப்பு,கொலை, கொள்ளை போன்றவை கேள்விப்படாத விடயம் என்று அவர்களின் நிர்வாகத்திறமையை பாராட்டினாரே தவிர, விஜயகலா தனிநாடு கேட்கவோ, தனிநாட்டுக்காக போராட ஒரு இயக்கத்தையோ கேட்கவில்லை என்பது வெளிப்படை.

இலங்கையில் வாழும் சில தீவிரவாத கொள்கை உடையவர்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பெரும்பாலான தமிழர்களும், இலங்கையின் இராணுவத்தினருக்கு எதிராகவும், தெற்கில் வாழும் சில குழுவினருக்கு எதிராகவும், மனதில் பெரும் வெறுப்புடனேயே உள்ளனர். அவர்கள் மீண்டும் இலங்கையில் தமிழீழப் புலிகள் இயக்கம் உருவாவதைத்தான் விரும்புகிறார்கள்.

**சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளமை குறித்த பொதுமக்கள் கவலை**

வடக்கில் இன்று மக்கள் சமாதானமாகவும் அமைதியாகவும் வாழ்கின்றனர். விஜயகலாவின் பேச்சையும் உபாலி தேரரது கருத்துக்களையும் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். இன்று இலங்கை வாழ் சகல மக்களுமே நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து கொண்டு போவதையிட்டு கவலைகொண்டுள்ளனர். நாட்டில் கொலை,கொள்ளை,கற்பழிப்பு, ஆள்கடத்தல்போன்ற குற்றங்கள் பெருகிவிட்டன. இவற்றைச் சீர்ப்படுத்த வேண்டிய அரசியல்வாதிகள் நித்திரைகொள்வதுபோல் தெரிகிறது.

6வயது பெண்குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டது ஒரு பக்கமும் 59வயதான பெண் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்த தனது கணவன் கண் எதிரிலேயே கற்பழிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் வேறு எந்தப் பகுதியில் நடந்திருந்தாலும் கூட இதே போன்றதொரு தாக்கத்தையே ஏற்படுத்தியிருக்கும்.

விஜயகலா குறிப்பிட்ட இன்னொரு விடயம் "வடக்கில் இந்த அரசு எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்தது என்பது குறித்துஎதுவும் தெரியவில்லை. ஆனால் இந்த அரசு அபகரிக்கப்பட்ட எங்கள் மக்களின் காணிகளில் பலவற்றை அவர்களிடம் மீள் அளித்துள்ளது. அதற்கு அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இதைத் தவிர, இந்த அரசு வடக்குக்கு எதுவுமே செய்யவில்லை" என்றார் விஜயகலா.

சிலர் விஜயகலாவை பதவி விலகச்செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் கூறுகின்றனர். விஜயகலா நிலமையை உணர்ந்து புத்திசாலித்தனமாக பேசியிருக்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு, மன அழுத்தம் காரணமாகவேதான் அப்படியான வார்த்தைகளை வெளியிட்டதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள இயலாது. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் அவருடைய இந்த மேடைப் பேச்சு அமைந்துவிட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சிறுவர்களையும் படையில் சேர்த்து போரின்போது ஆயுதங்களைக் கையில் ஏந்தச் செய்தகொடூரம் அவருக்கு மறந்துவிட்டதா?

விஜயகலா பதவி இறக்கப்படக்கூடாது. அவர் மன்னிக்கப்பட்டு அவர் செய்த பிழையை அவர் உணரவேண்டும். அவர் பேசியவை தெற்கிலும் கூடநடக்கக் கூடும். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் ஒரு சில தொகுதி இளைஞர்களின் மனதில் இருந்து தமிமீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இன்னும் கூட மறையவில்லை. நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் யதார்த்த பூர்வமான உண்மை.

வெதருவ உபாலி தேரர் கோத்தபாவுக்கு கூறிய ஹிட்லர் கதையைத்தான், விஜயகலாவும் யாழ்ப்பாணத்தில் மேடையில் பகிரங்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றிக் கூறியுள்ளார். அப்படியானால் தவறு செய்பவர்களை ஹிட்லரைப்போல அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளைப் போல அவர்களுக்கென அவர்களாலேயே உருவாக்கப்பட்ட நஞ்சுவாயு அறையிலோ அல்லது மின்கம்பங்களிலோ தண்டனை கொடுக்கப்படுவதை இவர்கள் எதிர்பார்க்கிறார்கள் போலும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பெண் இனத்தவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்குவோம்

மிக அண்மையில், ஏறக்குறைய ஆயிரம் பேர் வரையில் கலந்து கொண்ட திருமண விழாவொன்றில் நானும் பங்கு கொள்ள நேர்ந்தது. திருமணச் சடங்குகள் முறைப்படி இடம் பெற்றன. இனிதே திருமணம் முடிந்தது. விழாவுக்கு இரு மணி நேரம் பிந்தி வந்ததால், பின் வரிசையில் இடம்பிடித்து அமர வேண்டி நேர்ந்த தரப்பினர்கள், மணமக்களுக்கு அறுகரிசி இடுவதற்காக முட்டி மோதி வரிசையில் இருந்தவர்களெல்லோரையும் முந்திச்சென்று முன்புறத்தில் நின்றார்கள். அந்த வரிசையில் வெளிநாட்டவர், இளஞ்சோடிகள், ஆண்கள் எனப் பலரும் இடம்பெற்றிருந்தனர். திருமணத்துக்கு ஆரம்பித்திலேயே வந்து முன்வரிசையில் இருந்தவர்களில் பெரும்பாலோர் பெண்கள் என்பதனால் வரிசையில், நீண்ட நேரம் நிற்க நேர்ந்ததால் முணுமுணுத்தனர். "ஆண்கள் போட்ட பின்னர்தான் பெண்கள் அறுகரிசி போடவேண்டும். அடக்கம் உள்ள பெண்கள் என்றால் ஆறுதலாக பின்வரிசையில் நின்று போடவும்" என்று தூர நோக்கில்லாத சில பெண்களும், இளைஞர்களும், ஆணாதிக்க சிந்தனை கொண்ட ஒரு சிலரும் கூறினர். தமிழர்களது பண்டைக்கால புராண இதிகாசங்களிலும் கூட அவ்விதம் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கும் வழக்கம் இடம்பெற்றதாக ஆதாரமில்லை.

இவ்வாறிருக்க, பிள்ளை பராமரிப்பு, வீட்டு நிர்வாகம், உணவு தயாரிப்பு, அலுவலகம் எனப் பல பணிகளைச் செய்யும் பெண்களும், பிந்தி வீடு சென்றால் என்ன நிலை? வாசலில் வைத்தே ஏன் வர இவ்வளவு தாமதம்? எனக் கேட்கும் ஆண்கள் கூட, திருமண வைபவத்தில் மணமக்களுக்கு அறுகரிசி போட்டு ஆசீர்வதிக்க தமது மனைவிமாருக்கு அந்த வாய்ப்பை முதலில் வழங்க மனதொப்பி முன்வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

வைபவத்துக்கு உரிய நேரம் வந்து, வரிசையில் இருப்பது எவரென்றாலும் சரி மணமக்களை ஆசீர்வதிக்க எழுந்து சென்று அறுகரிசி போடலாம். இதுதான் தர்மம். சபையில் பெண்கள் எழுந்து முன்னுக்கு அறுகரிசி போடுவது என நினைப்பவர்கள், மங்கலகரமான நிகழ்வுகளில் கலந்து கொள்வோரை மட்டந்தட்டிப் பேசுபவர்கள், பாரபட்சமான முறையில் உபசரிப்பவர்கள் சமய நூல்களின்படி, மனதில் அழுக்காறு, பொறாமை கொண்டவர்கள், அறுகரிசி போடத் தகுதியற்றவர்கள்.

ஆகவே நல்ல மணம் படைத்த மூத்தோர், சன்றோர், பெண்கள், ஆண்கள், தள்ளாத வயதினர் கூட வழங்கும் வாழ்த்தினால் மணமக்களுக்கு உச்சப் பயன் உண்டு. எல்லோரையும் மதித்து, இனிய வார்த்தை கூறி, உபசரித்து நன்றி கூறி அனுப்புவதுதான் மிகப்பெரிய திருமண விழாவுக்கான குறிகாட்டி ஆகும்.

எனவே ஆணாதிக்கச் சிந்தனையை மனங்களிலிருந்து அகற்றி, பெண் இனத்தவர்களை மதிப்பு மரியாதையுடன் நடத்த மனங்கொள்வோம்.

க.வெற்றி, *சாவகச்சேரி.*

## விளையாட்டு வீராங்கனையாக நடிக்கும் சமந்தா!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தனது கணவர் நாகசைதன்யாவுடன் இணைந்து நடிக்கிறார் சமந்தா. இந்தப் படத்தை கிரிஷ்யா இயக்க இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் படத்தில் சமந்தா விளையாட்டு வீராங்கனையாக நடிக்க உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



‘ஒரு பொண்ணு நீங்க என்ன ஜாதின்னு சொல்லுங்க பாப்போம்’’ எண்டு போட்டிருந்துச்சு…



அந்த போஸ்ட்டுல போய் ‘‘நீதான் என் பொஞ்சாதி’’ எண்டு போட்டுட்டு வந்திட்டன்

## வாழ்க்கை



- இனிமையாக இளமைக் காலம் அமைய, அதை மகிழ்ச்சியாக அசை போட நல்ல நாலு நண்பர்கள் கொண்ட எதிர்காலம் அமைதல் வேண்டும்.
- நல்ல மனிதர்கள் நாலு பேரை எமக்கும், எம்மை நாலு நல்ல மனிதர்களுக்கும் தெரிந்திருக்கும் வாழ்க்கை வேண்டும்.
- பெற்றோர்களுக்கு நோய் தாக்காத முதுமையும், பெற்ற குழந்தைகளுக்கு மனம் நோகாத இளமையும் அமைந்த வாழ்க்கை வேண்டும்.
- உதவிக்காக எம்மை புகழும் உறவுகளும், உதவி கிடைக்கவில்லையென எம்மை இகழும் உறவுகளும் இல்லாத வாழ்வு வேண்டும்.
- கணவன் முன் மண்டியிடாத சுயமரியாதையும், குழந்தைகள் முன் சண்டையிடாத சுயசிந்தனையும் உள்ள மனைவியோடு வாழ்க்கை வேண்டும்.
- குடும்பத்துக்காகக் கொஞ்சநேரம் ஒதுக்குபவனும், தன் பிறந்த குடும்பத்தை மதிப்பவனுமான கணவன் அமைந்த வாழ்க்கை வேண்டும்.
- எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்பது முக்கியமல்ல, எத்தனை பேருக்குச் சம்பளம் தருகிறோம் என்ற வகையில் தொழில் அமைந்த வாழ்வு வேண்டும்.
- நெருங்கிய உறவுகளைச் சுற்றிய கனவுகளும், அவர்கள் தந்த உற்சாக நினைவுகளும் நிறைந்த மனது கொண்ட வாழ்வு வேண்டும்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 3 | | | 5 |
| 8 | | 7 | | | 4 | | | |
| | 4 | | | | | 1 | | |
| | 9 | | 3 | | 5 | | 2 | |
| | | | 2 | 9 | 6 | | | |
| | | 6 | | 4 | | | | |
| 9 | | | | | | | 3 | |
| | | | | | | 2 | 5 | 6 |
| | 3 | | | 2 | | 4 | | 1 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 1 |

நேற்றைய விடை

## வாழ்க்கைல மேல போறதென்பது இதுதானா?



## twitter

**கோழியின் கிறுக்கல்!!**

‘நல்லா சாப்பிடுங்க’ன்னு ஆரம்பித்து ‘சாப்பாட்ட குறைங்க’ என்பதாக முடிகிறது வாழ்க்கை!!!



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுய மதிப்பைச் சோதிக்கும் விதமாக சிலர் பேசுவர். தொழில், வியாபாரத்தில் போட்டியை சரிசெய்வீர்கள் பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** கடந்த கால அனுபவம் நல்ல படிப்பினையை தரும். தொழில் சார்ந்த அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமார். பெண்களுக்கு திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**மிதுனம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம் கவனம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** நண்பர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபார இலக்கு எளிதில் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** மற்றவர் அவதூறு கருத்துக்களை பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப்பினால் தொழிலில் வருமானம் உயரும். பணியாளர் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபாரத் தொடர்பு பலம் பெறும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். இடையூறுகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு பணம் கரையும்.

**தனுசு:** குடும்பத்தேவையை நிறைவேற்ற தாமதமாகலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவை. மிதமான பணவரவு கிடைக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். இலாபம் கூடும்.

**கும்பம்:** குடும்ப பிரச்னையை பேசித் தீர்ப்பது நல்லது. பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்படும். ஓரளவு வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** மற்றவர் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

## சிந்திக்க…

நோய் வரும் வரை உண்பவன்,
உடல் நலமாகும் வரை உண்ணாதிருக்க
வேண்டி வரும்.

பணம் சம்பாதிப்பது குண்டூசியால் பள்ளம்
தோண்டுவது போல
ஆனால் செலவழிப்பது குண்டூசியால்
பலூனை உடைப்பது போல…

பணத்தின் மதிப்பு தெரியவேண்டுமா?
செலவு செய்யுங்க.
உங்களின் மதிப்புத் தெரியவேண்டுமா?
கடன் கேளுங்க…

பிச்சை போடுவது கூட சுயநலமே…
புண்ணியம் கிடைக்கும் என்று நினைத்தால்…

அனுபவத்தால் உணரவேண்டிய ஒன்றை
ஆயிரம் தத்துவ ஞானிகளாலும்
உணரவைக்க முடியாது.

வாழ்க்கையில் கற்றுக்கொள்வதில் குழந்தை
போல் இரு அதற்கு அவமானம் தெரியாது
விழுந்தவுடன் அழுது முடித்து திரும்பவும்
எழுந்து நடக்கும்.

வெட்டாதீர்கள் மழை தருவேன்
என்கிறது “மரம்”.
வெட்டுங்கள் மழை நீரைசேமிப்பேன்
என்கிறது “குளம்”

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 இல் பிறந்த, பூரம் நட்சத்திரம், முதலாம் பாதம். பாவக் கிரகம் அற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

**076 182 0403**

## இந்தியன் அம்பாசிடர் கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் குளிரூட்டியுள்ள (A/C) மேற்படி வாகனம் விற்பனைக்குண்டு.
இல.HY XXXX. அத்துடன் வாகனத் துக்குரிய புதிய உதிரிப்பாகங்களும் உண்டு. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 085 6058, 076 359 9739**

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை, பாதுகாப்பு சேவை என்பவற்றுக்கான கேள்விகோரல் 2018/2019

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இல | கேள்விகள் | உத்தரவாத வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01 | NP/DGH /KOC/2018/Scc /01 | பாதுகாப்பு சேவை | 50,000.00 |
| 02 | NP/DGH /KOC/2018/Lun /01 | சலவை சேவை | 50,000.00 |

01. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருக்க வேண்டும்.
02. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 த்தினை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 12.07.2018 தொடக்கம் 31.07.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 03.00 மணிரை பெற்றுக்கொள்ளலாம்.
03. பாதுகாப்பு சேவைக்கான மீளளிக்கப்படும் வைப்புத்தொகை 50000/= ரூபாவும், சலவை சேவைக்கான மீளளிக்கப்படும் வைப்புத்தொகை 50000/= செலுத்தப்பட வேண்டும். மீளளிக்கப்படும் வைப்புத்தொகை செலுத்தப்படாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
04. விலைக்கேள்விகள் 31.07.2018ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக இம் மாவட்ட வைத்தியசாலையின் கணக்கு கிளையில் பேணப்படும் /பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படவேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலை யில் உடனடியாக திறக்கப் படும்.
05. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329, 0212284111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
06. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள் வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்**
**பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

(in.7257) (13.17)

## மரண அறிவித்தல்

## ஆறுமுகம் குலசிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தியடியை வசிப்பிட மாகவும் கொண்ட ஆறுமுகம்குலசிங்கம் (07.06.2018) சவூதி அரேபியா வில் அகால மரண மானார்.

அன்னார் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் ஆறுமுகம் ஆனைப்பந்தியைச் சேர்ந்த பாக்கிய லட்சுமி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்கள்ான பத்மநாதன் (மலேசியா), சண்முகநாதன் (கொழும்பு) மற்றும் பாலசிங்கம் (கனடா), குண சிங்கம் (லண்டன்), குமாரசிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற சரோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான தமயந்தி, பரமேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, புஸ்பா, ஜெகதீஸ்வரி, ஜெயலிங்கம் ஆகி யோரின் அன்புமைத்துனரும் றஞ்சினி (கிளி), காலஞ்சென்ற அமரசிங்கம் மற்றும் பத்மினி, சாந்தினி, சந்திரசேகரம், ஆறுமுகம், ஷியாமா, Dr.சுரேஸ் சண்முக நாதன், ரமேஸ், சாயிஸ்கந்தன், கிருஸ்ணி, அனுசாந் ஆகியோரின் அன்புசிறியதந்தையும் செந்தூரனின் பெரியப்பாவும் அமிர்தராஜின் மாமனும் இராஜதேவன், ஜெயதேவன், தர்மதேவன், கௌரி ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2018 )இல. 57, அம்மன் வீதி என்னும் முகவரியில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**57, அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**ஆ. குணசிங்கம், ஆ.குமாரசிங்கம் (சகோதரர்கள்),**
**என். இராஜதேவன்**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## வெளிவாரிப் பரீட்சைகள்

**கலை முதற்தேர்வு - முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2014 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 04.08.2018 (சனிக்கிழமை) தொடக்கம் 21.08.2018 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர் மதிப்பீட்டு புள்ளியினை அடிப்படையாக கொண்ட பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியினை. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் 12.07.2018 (வியாழக்கிழமை) தொடக்கம் 17.07.2018 (செவ்வாய்க்கிழமை) வரை (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும்) பார்வையிட்டு அனுமதி அட்டை மற்றும் மாணவர் பதிவேட்டு புத்தகத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**11.07.2018**

(in 7258) (13.17)

உ

## மரண அறிவித்தல்



## செல்லையா சொக்கலிங்கம்

*(அத்தான் வெற்றிலைக்கடை)*

வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் சோயா லேன், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சொக்கலிங்கம் (மலையான்) கடந்த (10.07.2018) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னையா - இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் செந்தில் நாதன், அருள்நாதன், கேதாரகௌரி ஆகியோரின் அன்புத் தந்தை யும் யோகலட்சுமி, பாமினி, சிவராஜ் (கண்ணன்) ஆகியோரின் மாமனாரும் சோபிதா, தனுசிகன், கர்சயன், சங்கவி, சாரபி, சப்தகி, கேசிகா, அனுஷ்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2018) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோயா லேன், யாழ். வீதி,**
**தாண்டிக்குளம், வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 605 2608**

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

## மரண அறிவித்தல்

## தம்பு தணிகாசலம் (ஆச்சாரி)

*(நீர்வேலி வடக்கு)*



நீர்வேலி வடக்கு, மோதர்கேணி ஒழுங்கையைச் சேர்ந்த தம்பு தணிகாசலம் கடந்த (10.07.2018) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சிவபாக்கியம் தம்பதி களின் புத்திரனும் காலஞ் சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காரை நகர் சொக்கலிங்கம் முத் தம்மா தம்பதிகளின் மரு மகனும் காலஞ்சென்ற சற்குணம் மற்றும் நடராசா (கனடா), பத்மநாதன் (சின்னையா - ஓய்வுநிலை போதனாசிரியர்), காலஞ்சென்ற காங்கேசன் (பொறியியலாளர் - கனடா) மற்றும் சுசீலாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற மகாதேவன் (கனடா) மற்றும் தர்மராணி (மாவிட்டபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயராகினி (கனடா), உதயசங்கர், உஷந்தினி, மைதிலி (ஆசிரியை - ஒட்டு சுட்டான் மகா வித்தியாலயம்), மயூரன் ஆகியோரின் தந்தையும் கிரிதரன் (கனடா), மேகலா (கனடா), பிரசாத் (வலி.தெற்கு, பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் மாமனாரும் ஆதிசனின் (கனடா) அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு, சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஒட்டுவளவு, மோதர்கேணி ஒழுங்கை,**
**நீர்வேலி வடக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 223 0127**

விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111
advt@uthayan.com
உதயன்

## பெயர் மாற்றம்

**செல்வரத்தினம் மயூரன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **செல்வரத்தினம் அயூறன்** என மாற்றம் செய்வதோடு தொடர்ந்து இனிவரும் எல்லா ஆவணங்களிலும் **அயூறன்** என கையொப்பம் இடுவேன் என, இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்

(497) (13.17)


DLB CAR PLUS



சீட்டிழுப்பு 66

சீட்டிழுப்பு திகதி 11.07.2018

வெற்றி இலக்கங்கள் 04 32 37 J புதன்

01 13

41, 05, 240/=

தொ.பே: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk


## கேள்வி அறிவித்தல்

**"யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் 09.07.2018 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் கேள்வி அறிவித்தலுக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்என்பதை அறியத்தருகின்றோம்"**

**செயலாளர்,**
**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.**
**637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(497) (13.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**கமலேஸ்வரி இராசநாயகம்**

பிறப்பு 19.11.1939 இறப்பு 12.06.2018

கடந்த 12.06.2018 அன்று எம் எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் சடங்கின் போது எம்முடன் இருந்த அனைத்து உறவுகளுக்கும் எமது உளப் பூர்வமான நன்றிகள் மேலும் துயரினைக் கேள்வியுற்று நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் மற்றும் சமூக வலைத் தளங்களினூடாகவும் எமது துயரில் பங்கு கொண்ட நல்லுள்ளங்களுக்கும் மலர் வளையங்கள் ஊடாக அஞ்சலி செலுத்திய நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கும் எமது மனமுவந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, எமக்கு சகல வழிகளிலும் உதவிகளும், ஒத்தாசைகளும் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 10.07.2018 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (12.07.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் தாவடி இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்

'இரஞ்சஸ்தான்'
தாவடி, கொக்குவில். (CS 18145) (13.17) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரகலா சிவசண்முகநாதன்



தோற்றம் 06.03.1964 மறைவு 10.07.2018

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, நெட்டிலைப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரகலா சிவசண்முகநாதன் கடந்த (10.07.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொற்கொடி தம்பதிகளின் மருமகளும் சிவசண்முகநாதனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (10.07.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1.30 மணியளவில் காரைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**16, நெட்டிலைப்பாய், (திருநெல்வேலி)**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.** (CS 18175/15/17)

**தகவல்: கணவர்**
**சு.சிவசண்முகநாதன்**
**(சிவா படமாடம்)**


ராசி அதிர்ஷ்டம்

திகதி 11.07.2018 வெற்றி வாரம் 2328 வர்ணம் பச்சை

மகரம் வெற்றி இலக்கங்கள் 33 42 50 55

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 66, 48, 844/=

2018.07.13 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3055 திகதி:2018.07.11 புதன்கிழமை ஊதா

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 01 28 45 63 X

போனஸ் இலக்கம் 22

அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 32,189,435/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 308
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.07.11

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 81,872,570/-

வெற்றி இலக்கங்கள் 15 27 52 74 ஆங்கில எழுத்து Y

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேசசபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்
**ஜெயச்சந்திரன்**
அவர்களின் அன்புத்தந்தை



### சண்முகம் இராசதுரை

அவர்களின் மறைவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நல்லூர் பிரதேசசபை, நலன்புரிச்சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்திய சாலையில் கடமையாற்றும்
**திரு.செ.சிவயோகராசா** அவர்களின் அருமை மைந்தன்



**செல்வன் அமரர்**
### சிவயோகராசா பவிஷன்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,**
**கைதடி.**

(CS/00525)(10)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை குணரத்தினம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி)*



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குணரத்தினம் நேற்று (11.07.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான இளையாம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருள்மொழி மற்றும் ஐங்கரன், அமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனியாவின் அன்பு மாமனாரும் சாதுரியன், வானிலா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ச.வே.பஞ்சாட்சரம், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், சிற்சபேசன் மற்றும் பரமசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2018) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசமருத்துவமனை அருகில்,**
**வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில்
$4\frac{1}{2}$ பரப்புக் காணியில் உள்ள
மாடி வீடு விற்பனைக்குண்டு.

**077 187 7754**

## வேலை வாய்ப்பு

Ancheneye Construction
N.D.T (Civil) / equal with minimum
5 years Experience immediately wanted

**Location - Jaffna**
தொடர்புகளுக்கு 077 5454 137, 026 454 9104

## பெயர் மாற்றம்

கரந்தன் மேற்கு நீர்வேலி எனும் விலாசத்தில் வசிக்கும் **விசுவாசம் இராசபவனம்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **ஞானசோதி மேரிநிர்மலா** என மாற்றம் செய்வதுடன் எனது சகல ஆவணங்களிலும் ஞானசோதி மேரிநிர்மலா என கையொப்பம் இடுவேன் எனவும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(cs 18163) (13.17) **ஞானசோதி மேரிநிர்மலா**

## பூசகர் தேவை

**மகா கணபதி ஆலயம், எட்மண்டன், கனடா**

மேற்கண்ட ஆலய குருக்களுடன் சேர்ந்து பூசை செய்ய, ஸ்மார்த்த சம்பிரதாயத்தில் தகுதி பெற்றவரும், இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள காமிகம் மற்றும் காரண ஆகம முறையில் தேர்ச்சி பெற்ற ஒரு பூசகரின் சேவை தேவைப்படுகின்றது.

தகுதியுள்ளவர்கள் தங்களைப் பற்றிய விவரங்களுடன், அனுபவங்களையும் கொண்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் albertamgsa@gmail.com இற்கு அல்லது தபால் மூலம் **MGSA, P.O.Box 62035, Yellowbird PO,Edmonton AB T6J 4VO. Canada** என்ற விலாசத்துக்கு **ஜூலை 31, 2018** இற்கு முன் கிடைக்கும்படி அனுப்புமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**Board of Trustees,**
Maha Ganapathy Society of Alberta,
Edmonton, Canada,
www.mahaganapathytemple.com

(IN/6024)(11)


ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்



021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இருள் நீங்கி இன்பம் பெறுவோம்

கே.எஸ்.சிவஞானராஜா



எனக்குப் பிடிக்காத விடயங்களுள் பணமும் மதமும் இருமுகமாகத் தோற்றம் தருகின்றன. இதனை நான் தான் கண்டறிந்து சொன்னேன் என்று யாரும் தற்பெருமிதம் கொள்ளத் தேவையில்லை.

> வாழ்வின் ஆதாரமாக பணமும், அமைதியான வாழ்வியலை நம்பிக்கையூடு நெறிப்படுத்தும் சாதனமாக மதமும் மக்களை ஆட்சி செய்து வருகிறது. மாறாக உழைப்பு என்கிற தன்னிறைவு ஆட்சி செய்கிறதா என்று நோக்கின் அதற்கு இல்லை என்றே பதில் வழங்கப்படும்.

**அளவோடு இருத்தல் நன்று**

உண்மையில் நிலையில்லாத வாழ்வியல் பயணத்தில் இவை குறித்து அனைவருமே அறிந்துகொண்டுள்ளோம். இவை இரண்டும் நம்பிக்கையையும் அதே போன்று அவநம்பிக்கையையும் தந்து மக்களை ஆட்சி புரிகின்றன. ஒரு வகையில் இந்தக் கூற்றுக்கள் சங்கடம் தருகின்ற போதும், இன்னொரு பார்வையின் காட்சிப் புலத்தில் இவை முற்று முழுதாகச் சரியானவை என்று சொல்லவும் முடிகிறது.

ஆம், நாம் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களின் வழியே பணம்,மதம் ஆகிய இவை இரண்டும் மக்களை வழிப்படுத்தவல்ல சாதனங்களாக விளங்குகின்றன. ஆனாலும் பண மூலங்கள் அளவின் மிகுதியால் ஒற்றுமையையும் நிம்மதியையும் சீர்குலைத்தும் விடு கின்றன. பொதுவாகவே, உலக வாழ்வில் எதுவாகினும் அளவாகவே இருந்து விட்டால் கவலை கொள்ளத் தேவையில்லை.

**சாதனைக்குரிய விடயம்**

இதனை ஒரு பெரியவரே அனுபவத்தின் சான்றாக வெளிப்படுத்தியுள்ளார். ஜப்பானை பூர்வீகமாகக் கொண்ட 82 வயதான 'மசாபூசி நாகசாகி' என்பவர் தனித்து ஒரு சிறுதீவில் 29 வருடங்கள் வாழ்ந்துள்ளார். அந்தத் தீவில் எந்தவொரு மனிதனுமே இல்லாதபோதும் அவர் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்துள்ளார். இந்த விடயம் குறித்து நோக்குதற்குரிய சாதனைக்குரிய செயல். இந்தப் பயணம் குறித்து தெரிவிக்கும் போது, "சொந்த பந்தம் என்று எவரும் இல்லாத சுதந்திரமான சுபீட்சமான சொர்க்கபூமி" என்கிறார் நாகசாகி.

**அரசியலில் மதச் சார்பு தேவையில்லை**

இந்த நிலையிலே இலங்கையர்களைப் பொறுத்த வரையிலே வாழ்வின் ஆதாரமாக பணமும், அமைதியான வாழ்வியலை நம்பிக்கையூடு நெறிப்படுத்தும் சாதனமாக மதமும் மக்களை ஆட்சி செய்து வருகிறது. மாறாக உழைப்பு என்கிற



தன்னிறைவு ஆட்சி செய்கிறதா என்று நோக்கின் அதற்கு இல்லை என்றே பதில் வழங்கப்படும். ஒவ்வொரு அரசும் ஆட்சி பீடத்தை கைப்பற்றியதும் பொறுப்புணர்ந்து செயற்படுவதாக தெரியவில்லை. அடுத்த ஆட்சிக் காலம் பற்றிய சிந்தனையோடும், தேர்தல் பற்றிய பேச்சுக்களோடும் காலத்தை கடத்துகின்றன. ஜனநாயக உரித்துடைய மக்களின் உரிமைகள் தொடர்பில் கரிசனை கொண்டு ஒருபோதும் செயலாற்றவில்லை. குறிப்பாக ஒவ்வொரு குடும்பமும் சந்ததி சந்ததியாகச்சுயமாக வாழக்கூடிய உழைப்பை உருவாக்குவது தொடர்பில் எந்தவொரு தொழில் முனைப்பையும் முன்வைக்கவில்லை. மாறாக, "பணத்தை எப்படிச்சம்பாதிக்கலாம்..?, எப்படி மாடிகளை வாங்கிவிடலாம்..?, எதைச் செய்தால் மக்களை ஏமாற்றலாம், மக்கள் எந்தெந்த விடயங்களில் பலவீனமாக இருக்கிறார்கள், எதையெதைச் செய்தால் மக்களைத் தன்வயப்படுத்தலாம்" என்றே சிந்தனை கொள்கின்றனர்.

**ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்**

இவ்வாறு மக்களை அடிமை நிலையில் வைத்திருப்பதற்கு பண மூலங்களை முதலாளிகளிடமும் முதலைகளிடமும் கைமாற்றம் செய்து விடுகின்றனர். அவர்களின் செயல் நடத்தை ஊடே சமூக வெளியில் நாகரீகத்தையும்,போதையையும், போகத்தையும் இலகுவாக பரப்பி விடுகின்றனர். இத்தகு கைங்கரியங்களே தற்போதும் இடம்பெற்று வருகின்றன. இனிமேலும் இவை நடக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தச் செயல் நிலைகளில் இருந்து மீண்டுகொள்ள நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்னுமொரு விடயம் யாதெனில், எந்தவொரு சமயத்தையும் யாராலுமே அழிக்க முடியாது. போட்டா போட்டியாக ஒரு காலத்தில் திருவிழாக்கள் நடைபெற்றன. ஆனால் இப்போது அவ்வாறு நடப்பது அருகிவிட்டது. ஆனாலும் இலங்கையின் அரசியல் வரலாற்றிலும் சரி, சமூக சம்பிரதாயங்களிலும் சரி 'மதம்' என்ற சாதனம் நூதன மாக்கப்பட்டுள்ளது.

இருக்கின்ற கோவில்களின் எண்ணிக்கை போதாதென்று புதிதாக ஆயிரம் விகாரைகளை அரசு அமைக்கப் போவதாக கூறி அரசியலில் மதப் புரட்சியை ஏற்படுத்த நினைக்கின்றனர். அதில் இடம்பெறுகின்ற குழப்பங்களை மூலதனமாக்கி அரசியல் இலாபத்தை தேடிக் கொள்ள முனைகின்றனர். இதுவோர் தந்திரமான காய் நகர்த்தல். அரசியலில் மதம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து செயலாற்றும் எந்த அரசாயினும் அதன்வழியே தோல்வியையே கண்டு கொள்ளும். இனிவரும் காலங்களில் இவற்றை நன்கு புலனாளுமை செய்யலாம். உண்மையில் மதச்சார்பற்று இயங்குநிலை பெறும் அரசு தான் ஒரு நாட்டிலே நீடித்த ஆயுளைப் பெறும்.

மயக்கம் தெளிந்து மாசற்ற உண்மையை உணர்ந்து கொள்வோம். அறியாமையை அகற்றி நற் காரியங்கள் ஆற்றுவோம்.

**"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"**







நாளை


**13.07.2018**

வெள்ளிக்கிழமை

ஆனி 29

திதி: அமாவாசை மு.ப. 09.26 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மு.இ. 09.13 வரை
சுபநேரம்: 05.59 – 07.29 வரை
ராகுகாலம்: 10.29 – 11.59 வரை

# ஆக்கமும் அழித்தலும்



கமலா தான் பாடசாலை கொண்டு செல்லும் உபகரணப் பெட்டியைத் திறந்து அதனுள் புதியதான ஒரு பென்சிலையும், அழிறப்பரையும் வைத்து மூடினாள். மறுநாள் பாடசாலை கொண்டு செல்வதற்கான முன் ஆயத்தம் இது. தனியே விடப்பட்ட பென்சிலும் அழிறப்பரும் சிறிது வேளை மௌனத்தின் பின் பேசத் தொடங்கின.

அழிறப்பர்: (பென்சிலைப் பார்த்து) எப்படி இருக்கிறாய்?

பென்சில் : (முகத்தைத்திருப்பிக்கொண்டு) நீ என்னுடன் பேசாதே!

அழிறப்பர் : ஏன் என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?

பென்சில் : பின்னே, நீ எனக்குச் செய்யும் வேலைக்கு, உன்னைக் கட்டிக்கொஞ்சவா முடியும்?

அழிறப்பர் : ஏன் என்னை உனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்?

பென்சில் : (கோபத்துடன்) நீ தானே நான் எழுதுபவற்றை எல்லாம் அழித்து விடுகிறாயே! உனது நெஞ்சில் இரக்கமே இல்லையா?

அழிறப்பர் : இதென்ன இது? நான் நீ எழுதும் பொழுது ஏற்படும் தவறுகளைத் தானே அழிக்கிறேன்.

பென்சில் : அழிப்பது மட்டுமா உன் வேலை. ஆக்கும் செயல் எதுவும் செய்ய மாட்டாயா?

அழிறப்பர் : ஆம். அழிப்பது மட்டுமே என் வேலை.

பென்சில் : (ஏளனமாக) இதுவும் ஒரு வேலையா?

அழிறப்பர் : எழுதி ஆக்குவது உன்வேலை. அதில் உள்ள தவறுகளை அழித்து விடுவது என் வேலை. பின்னர் அழித்த இடத்தில் திருத்தமாக எழுதி அதனை நன்கு உருவாக்குவது உனது வேலை. எமது இரண்டு வேலைகளும் பயன் மிக்கனவே.

பென்சில் : என் எழுதும் வேலை எவ்வளவு கடினமானது. நினைத்ததை எல்லாம் எழுதி விட முடியாது. நன்கு சிந்தித்தே எழுதவேண்டும். உனது வேலை அப்படியா? பார்த்த உடனேயே முன்பின் யோசியாது அழித்து விடுவாய்.


அழிறப்பர் : இல்லை, நீ சொல்வது தவறு. நானும் எதுசரி, எது பிழை என்று நன்கு அறிந்த பின்தான் பிழையை மட்டும் அழித்து விடுகிறேன். சரி பிழை கண்டு பிடிக்கவும் நான் சிந்திக்க வேண்டுமல்லவா? எழுத்துக்கள் உறுப்பமையாவிட்டாலும் அழிக்கிறேன்.
சொற்கள் தவறானாலும் அழிக்கிறேன்.
விடைகள் தவறானாலும் அழிக்கிறேன். நான் அழித்தவற்றை நீ சீராக எழுதிப் பூர்த்தி செய்கிறாய். நான் தவறுகளை அழித்தால்தான். நீ எழுதியவற்றைப் பலரும் பாராட்டுகிறார்கள். உணர்ந்து கொள் நண்பனே!

பென்சில் : (சிறிது நேரம் சிந்தித்த பின்) நண்பனே! நீ சொல்வது சரிதான். இனி நான் உன்னை வெறுக்க மாட்டேன். எந்த வேலையையும் நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. எல்லா வேலைகளுமே முக்கியானவையே.

அழிறப்பர் : இனி நாம் ஒற்றுமையோடு வேலை செய்வோம்.




# புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்




# மகத்தான மூன்றுகள்

1. மதிக்க வேண்டியவை- மூத்தோர், மார்க்கம், சட்டம்
2. நோக்க வேண்டியவை- நேர்மை, தூய்மை, கடின உழைப்பு
3. போற்ற வேண்டியவை, அறிவு, அழகு, அன்பு
4. பேண வேண்டியவை-திருப்தி, தைரியம், மகிழ்ச்சி
5. தவிர்க்க வேண்டியவை- புகைத்தல், சூதாடல், மதுவருந்தல்
6. அடக்க வேண்டியவை- நா, கோபம், சோதனை
7. பாதுகாக்க வேண்டியவை- வாக்குறுதி, நட்பு, அன்பு
8. அஞ்ச வேண்டியவை- களவு, கொலை, பொய்
9. ஒழிக்க வேண்டியவை- பொறாமை, அநீதி, வாக்குமீறல்
10. எதிர்கொள்ள வேண்டியவை- கவலை, பயம், சாவு
11. கவனிக்க வேண்டியவை- பேச்சு, செயல், எண்ணம்
12. போரிட வேண்டியவை- தேசவிடுதலை, உரிமைபெறல், கண்ணியம் காக்க.



# சுலோன் டூப்ளோயன் சுருக்கெழுத்து முறை

சுலோன் டூப்ளோயன் (solan duployan) சுருக்கெழுத்து முறை கேத்திர கணிதத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட உயிர் எழுத்துக்களைச் சேர்த்து எழுதக் கூடிய ஒரு முறையாகும். ஜே.எம்.சுலோன் என்பவரால் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த முறை அபிடூப்ளோயி என்பவராலேயே அத்திவாரமிடப்பட்டது. வெவ்வேறு சுருக்கெழுத்து முறைய்யைக் கண்டு பிடிப்பவர் அல்லது அபிவிருத்தி செய்பவர் தமது முறையே சிறந்தது அல்லது இலகுவானது எனச் சொல்வது இயற்கை.

ஏழு வெவ்வேறு சுருக்கெழுத்து முறைகளைக் கற்று, அவற்றில் பாண்டித்தியம் பெற்றவரும். இலண்டனில் உள்ள றோயல் நோர்மல் கல்லூரியில் கடமையாற்றியவருமான டபிள்யூ ஜே. மெரிடன் என்பவர் தமது சுருக்கெழுத்துத் தொடர்பான ஆய்வறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார். "எனது 15 வருட ஆய்வின் பின்னர் சுலோன் டூப்ளோயன் முறை ஒன்றே சுருக்கெழுத்து முறைக்குரிய குணாதிசயங்களை உள்ளடக்கியுள்ளது என்ற முடிவுக்கு வந்துள்ளேன்".

செயல் முறையில் இந்தமுறை கூடுதலான சாதனைகளைப் புரிந்துள்ளது. 15, 16 வயதுடையவர்கள் பலர் இந்த முறையைப் பயின்று நீதிமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் சுருக்கெழுத்தாளர்களாகக் கடமையாற்றியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜேம்ஸ் டன்கன் என்பவராவார். இந்த முறையைப் பயின்றவர்கள் பலர். நிமிடத்துக்கு 230 தொடக்கம் 309 சொற்கள் வரையிலான வேகத்தில் செயற்படும் திறமைக்குச் சான்றிதழ் பெற்றுள்ளனர். பாடசாலை மாணவர்கள் பலர் நிமிடத்துக்கு 100 சொற்கள் வேகத்திலும், மாலை நேர வகுப்பு மாணவர்கள் பலர் நிமிடத்துக்கு 200 சொற்கள் என்ற வேகத்திலும், சான்றுபெற்றுள்ளனர். 1913 ஆம் ஆண்டில் பன்னாட்டு ரீதியில் நடைபெற்ற சுருக்கெழுத்துப் போட்டியில் முதலிடம் பெற்று சாதனை படைத்த பெருமை யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் முத்தையா (தமிழ் தட்டச்சின் தந்தை) அடிகளாவார்.



# கோப்பி குடிக்கும் பழக்கம்

கோப்பிப்பானம் அறிமுகமான கதை மிகவும் சுவையானது. அராபிய நாட்டில் கால்தி என்ற ஆட்டிடையன் ஒரு விசித்திரமான காட்சி ஒன்றைக் கண்டான். அவனுடைய ஆடுகள் ஒரு வெழுமையான செடியின் இலைகளை மென்று தின்றதும் துள்ளியோடின. வயதான ஆடுகளும் கூட அதனைத் தின்றதும் துள்ளிக் குதித்தன. அந்தச் செடியில் அப்படி என்ன இருக்கிறது என்பதைச் சோதனை செய்யும் நோக்குடன் அவன் அந்த மரத்தின் சிவப்புப் பழங்களைப் பறித்துத் தின்றான். மறுகணமே அவனுடலில் இனம்தெரியாத தெம்பும் உற்சாகமும் வந்து புகுந்ததை உணர்ந்தான். அவன் இதுபற்றி 'அபோர்ட்' என்ற குருவிடம் கூற, அவர் அந்தச் சிவப்பு பழத்தின் விதைகளைப் பொடி செய்து நீருடன் கலந்து பலருக்கு அருந்தக் கொடுத்தார். அதன்பின்னர் அறிமுகமான விந்தையான இந்த விதையே கோப்பிக்கொட்டையாகும். இது உண்மைச் சம்பவமா இல்லையா என்பது தெரியாது. ஆனால் பண்டைக்காலத்திலிருந்தே அரேபியர்கள் கோப்பி குடித்து வந்தார்கள் எனத் தெரிகிறது. இங்கிலாந்தில் கோப்பி குடிக்கும் பழக்கம் 19ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது. ஒரு கோப்பை கோப்பியில் 120மில்லிக்கிராம் காஃபின் என்ற உடல் நலத்துக்கு தீங்கு தரும் பொருளடங்கியுள்ளது.

# மயிலுக்குப் போர்வை அளித்த வள்ளல்



முன்னைய காலத்தில் தென்னிந்தியாவின் பல குறுநிலங்களையும், மலைப் பிரதேசங்களையும் ஆட்சி செய்தவர்கள் குறுநில மன்னர்கள் எனப்பட்டார்கள். இந்தக் குறுநில மன்னர்கள் வீரத்தில் மட்டுமன்றி கொடை அளிப்பதிலும் சிறந்து விளங்கினர். அவர்களுள் கடையேழு வள்ளல்கள் சிறப்புப் பொருத்தியவர்கள்.

பாரி,காரி, ஆய், பேகன், அதியமான், நள்ளி, ஓரி ஆகியோர் அவர்களாவர். இவர்களின் வள்ளன்மை காலம் கடந்தும் இன்றும் பேசப்படுகிறது.

கடை ஏழு வள்ளல்களில் ஒருவன் பேகன். பழனி என்னும் பொதினி மலைக்கு தலைவனாக விளங்கியவன் இவன். வீரத்திலும் சிறந்து விளங்கியவன். தன் உள்ளத்தில் இரக்க குணம் படைத்தவன். கொடையளிப்பதில் மேன்மைபெற்றவன். இவன் ஒரு முறை தனது நகரத்தை தனது தேரிலேறி வலம்வந்து கொண்டிருந்தான். அப்போது அவன் ஒரு சோலைப்பகுதிக்கூடாக வந்துகொண்டிருந்தபோது இடி இடித்து மின்னல் மின்னி கருமேகங்கள் சூழ்ந்தன. அப்போது இந்தக் காட்சியை அங்கிருந்த ஆண்மயில் ஒன்றும் கண்ணுற்றது. உடனே மகிழ்ச்சியினால்தன் அழகிய தோகையை விரித்து ஆடத் தொடங்கியது. முதலில் அதனது ஆட்டத்தை ரசித்த பேகன் மறு நிமிடமே அது மயிலின் ஆட்டம் அல்ல.

மழை வரப்போகும் அறிகுறிகள் தென்படுவதால் அந்த மயில் குளிரினால் நடுங்கிக் கொண்டிருப்பதாக உணர்ந்தான். அவன் மயிலின் மீது இரக்கப்பட்டு அது குளிரில் படும் துன்பத்தைப் போக்க எண்ணினான். உடனே அவன் தன் உடலின் மேற்போர்வையாக அணிந்திருந்த பொன்னாடைய்ய எடுத்துக் கொண்டு தன் தேரிலிருந்து இறங்கி மயிலருகே சென்றான். மயிலும் அமைதியாக நின்ற நிடத்திலேயே நின்றது. அப்போது போர்வையை எடுத்து மயிலின் மேல் நன்றாகப் போர்த்தி விட்டுச் சென்றான். இந்தச் சம்பவம் பேகனது கொடைச் சிறப்புக்கு பெரும் எடுததுக்காட்டாக அமைந்தது.

## அபிவிருத்திச்...

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகாக அரச தலைவரால் உருவாக்கப்பட்டுள்ள செயலணியில் பங்கேற்க்கப்போவதில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். அரசியல் தீர்வின் பின்னரே அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து அந்தக் கடிதம் ஊடகங்களுக்கு முதலமைச்சர் பணியகத்தால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பணியகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தச் செயலணியில், என்னையும் எமது தலைமைச் செயலரையுந் தவிர வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேறெவரும் அதில் இல்லை. செயலணியின் செயலர் (சிவஞானசோதி) வடமாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் கொழும்பு அரசின் அலுவலர்.

### நன்றி தெரிவிக்கின்றேன்

செயலணியின் வடக்கு - கிழக்குப் பற்றிய முன்னேற்றச் செயற்பாடுகள் நாட்டின் ஐக்கியத்தையும் ஒன்றிணைவையும் ஏற்படுத்தி சமமான சமூகப் பொருளாதார வளர்ச்சியையும் வருமான வளர்ச்சியையும் ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் மீளாய்வு உள்ளடங்கிய பலவிதப் பணிகள் குறித்த செயலணிக்கு அடையாளப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் முன்னேற்றப் பணிகள் அனைத்தையும் நடத்துவிக்கும், ஒருங்கிணைக்கும், மேற்பார்வை பார்க்கும் பணி அரச தலைவர் செயலணியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

என்னையும் எமது தலைமைச் செயலரையும் இந்தச் செயலணியினுள் உள்நுழைத்தமைக்காக நான் உங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கொழும்பு அரசின் பல அமைச்சர்களும் அவர்களின் அமைச்சுச் செயலர்களும் இந்தச் செயலணியில் சேர்க்கப்பட்டிருப்பினும் எமது வடமாகாண அமைச்சர்கள் இதில் விடுபட்டுள்ளார்கள். எமது அமைச்சர்களின் மற்றைய செயலர்களும் விடுபட்டுள்ளார்கள். உங்கள் தேர்வில் இது ஒரு பெரிய தவறாக எனக்குப்படுகின்றது.

### முதலில் அரசியல் தீர்வு

வடக்கு - கிழக்கின் பொருளாதாரவிருத்தி நாட்டின் ஐக்கியத்தை உறுதிசெய்யும் என்ற உங்கள் எதிர்பார்ப்பு இடந்தவறியதாகவே எனக்குப் படுகின்றது. அரசியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்கள் மீது பொருளாதார அபிவிருத்திகளைத் திணிப்பதன் மூலம் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது. எமது வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் தீர்வானது முதலில் ஏற்படுத்தப்பட்ட பின்னரே அபிவிருத்திப் பணிகள் செயற்படுத்தப்படவேண்டும். தென்னாபிரிக்காவில் அரசியல் தீர்வு பெற்ற பின்னரே உண்மைக்கும் சமரசத்துக்குமான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

தெற்கானது வடக்கு - கிழக்குக்கு இவ்வாறான அபிவிருத்திப் பணிகளைச் செய்திருப்பதாக ஜெனிவாவிலோ வேறெங்குமோ உலகசமுதாயத்துக்கு நாம் எடுத்துக் காட்டினாலும் போர் முடிந்து ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படை அரசியல்ப் பிரச்சினைகளைத் தொடர்ந்து வந்துள்ள கொழும்பு அரசுகள் தீர்க்கவில்லை என்ற விடயத்தை நாம் மூடி மறைக்க முடியாதிருக்கும்.

### நீங்கள் செய்வது பிராயச்சித்தமே

உங்களால் இதுவரை தரப்பட்டுள்ள பொருளாதார நன்மைகள் தொடர்ந்து வந்த கொழும்பு அரசுகளால் எமது மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட பொறுப்பற்ற சிதைவுகளுக்கும் பெரும் அழிவுகளுக்குஞ் செய்யப்படும் பிராயச்சித்தமே. மேற்படிஅழிவுகளை நீங்கள் ஏற்படுத்தியமைக்குக் காரணம், தொடர்ந்து வந்த அரசுகள் புத்தர் காலத்துக்கு முன்பிருந்து அடையாளப்படுத்தக் கூடிய இந்த நாட்டின் ஒருபகுதியின் பெரும்பான்மையினராய் வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காமையே. வடக்கு - கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளையும் உரித்துக்களையும் ஏற்றுக் கொள்ளாமையே போருக்குக் காரணமாக இருந்தன.

எனவேதான் பொருளாதார அபிவிருத்தியால் இன ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தலாம் என்று நீங்கள் நினைப்பதின் தாற்பரியம் என்னவென்றால், எமது மக்கள் தமது அரசியல் உரித்துக்களையும் மனித உரிமைகளையும் நீங்கள் தரும் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு கைவிட்டுவிடுவார்கள் என்று நீங்கள் எண்ணுவதே.

### வேடிக்கையாக இருக்கின்றது

மேற்படி செயலணியின் அமைப்புருவாக்கம் வேடிக்கை பொருந்தியதாக இருக்கின்றது. கிட்டத்தட்ட முழுமையாக கொழும்பு அரசின் அணியினரை மட்டுமே உள்ளடக்கியுள்ள இந்தச் செயலணியால் வடக்கு - கிழக்கில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தலாம் என்று நினைக்கின்றீர்கள். அதுவும் அரச அமைச்சர்கள், அவர்களின் செயலர்கள், படையினர், ஆளுநர்கள் சேர்ந்து இவ்வாறான சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்று நினைப்பது வேடிக்கைமிக்கது.

தடவைக்குத் தடவை நான் உங்களுக்கும் தொடர்ந்து வந்த அரசுகளுக்கும் கூறிவந்த ஒரு விடயந்தான் அபிவிருத்தியை கொழும்பு அரசானது மாகாணத்தில் பலவந்தமாக உட்புகுத்தக் கூடாதென்பதை வடக்கு - கிழக்கு மாகாண மக்களே தமக்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுக்கக்கூடியவர்கள். தமது தேவைகளை அடையாளப்படுத்தக் கூடியவர்கள். தற்போது நிதியானது கொழும்பின் கையில். செயற்றிட்டங்களை வகுப்பது கொழும்பு அரசு. நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கொழும்பு அரசின் அலுவலர்கள் வசம். ஆனால் எமது மாகாண அலுவலர்களே தமக்கு ஆணையிட்டவாறு அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான ஒருதலைப்பட்சமான செயல்கள் மூலம் நீங்கள் எதிர்பார்ப்பது சமாதானம், அமைதி, ஐக்கியம் மேலும் ஒன்றிணைவது.

### குடியேற்றங்கள்

இவ்வாறான பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை நீங்கள் மீளாய்வு செய்யும் அதே நேரம் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இனப்பரம்பலை மாற்றும் விதத்தில் குடியேற்றங்கள் அங்கு தற்போது நடைபெற்றுவருவது யாவரும் அறிந்ததே. மற்றைய மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் பேணப்படவேண்டிய காடுகளின் விகிதாசாரம் அங்கு பேணப்படாமல் எமது மக்களின் காணிகள் வனத் திணைக்களத்தினால் வடக்கு - கிழக்கில் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல் வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருளாராய்ச்சி திணைக்களம் மற்றும் பல கொழும்பு அரசின் திணைக்களங்கள் படையினருடன் சேர்ந்து எமது மாகாணங்களில் வசிக்கும் மக்களின் பெருவாரியான காணிகளைக் கையகப்படுத்தி வருகின்றன.

அரசானது வடக்கு மாகாண முன்னேற்றத் திட்டங்களை மீளாய்வு செய்யவேண்டும் என்றால் வடக்குமாகாண முதலமைச்சரும் தலைமைச் செயலரும் மேற்படி செயலணி நடவடிக்கைகளில் பங்கேற்கவேண்டும் என்ற அவசியமில்லை. கொழும்பு அரசின் அமைச்சர்கள் அவர்தம் செயலர்கள், படையினர் எல்லோரும் அந்தந்த மாவட்டச் செயலர்களுடன் சேர்ந்து வேண்டிய தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். தற்போது எமது மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் செயற்பாடுகள் யாவும் மேலிருந்து கீழ் நோக்கி ஒருதலைப்பட்சமாக இயற்றப்படும் செயல்களே.

### இணையத் தேவையில்லை

மேற்படி செயலணி தனது வேலையைச் செவ்வனே செய்து கொண்டு போகட்டும். அதன் முடிவில் செயலணி தனது அறிக்கையை குறிப்பிட்ட காலத்தில் எமக்கு அனுப்பட்டும். எனது அமைச்சர்களுடன் அதைவைத்து நாம் அதன் தாற்பரியங்களையும் பெறுபேறுகளையும் ஆராய்ந்து பார்க்கின்றோம். ஆனால் இவ்வாறான மாட்சிமை பொருந்திய அமைச்சர்கள், ஆளுநர்கள், அமைச்சுச் செயலர்கள், படையினரை உள்ளடக்கிய ஒரு உயர் மட்டச் செயலணியில் நானும் ஒரு பொருட்டாக இணைந்து கொள்வதை தேவையற்றதொன்றாகவே கருதுகின்றேன்.

வடக்கு - கிழக்குக்கான முன்னேற்ற நடவடிக்கைகள் யாவும் உள்ளூர் மக்களாலும் அவர்தம் பிரதிநிதிகளாலும், மாகாண சகல மட்ட அலுவலர்களாலுமே நடத்தப்படவேண்டும் என்பதே எனது கருத்து.

கொழும்பு அரசு அதற்கான நிதியையும் அறிவுரைகளையும் அனுசரணைகளையும் வழங்கவேண்டும். அதிகாரப் பகிர்வென்பது இதையே! இல்லையேல் தற்போது காண்பது போல் அபிவிருத்தியும் அதிகாரப்பகிர்வும் ஹாஸ்யப் பொருள்கள் ஆகிவிடுவன.

எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், அண்மையில் கூறியவாறு இந்த ஆண்டிறுதிக்குள் எமது அரசியல் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்படவேண்டும். அதன் பின்னரே அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அரசியல் பிரச்சினைகளை அரச தலைவரான நீங்கள் விரைவில் தீர்த்துவைத்த பின் நாம் சம தகுதியுடையவர்களாக உட்கார்ந்து இந்த நாட்டைக் கட்டிஎழுப்ப இடமளிப்பீர்கள் என்று நம்புகின்றேன் - என்றுள்ளது. (5)

## தனிக்கட்சி...

வெளியாகியுள்ளமை தொடர்பிலும் கேள்வி எழுப்பினார். என்னிடம் பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்கு நான் பதில் வழங்கியிருந்தேன். என்னை, எனது கட்சி நியமிக்காவிடின் (முதலமைச்சர் வேட்பாளர்) வீட்டுக்குச் செல்வேன், அல்லது இன்னொரு கட்சியுடன் இணையலாம். இல்லாவிடின் ஒரு கட்சியை ஆரம்பிக்க முடியும் என்று பத்திரிகையாளர்களுக்கு கூறியிருந்தேன். அவர்கள் நான் கூறிய முதலிரு விடயங்களையும் விட்டு, மூன்றாவதாகக் கூறிய விடயத்தை மட்டும் பெரிதாக்கிவிட்டார்கள். தனிக் கட்சி ஆரம்பிப்பது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவருக்கு தெரிவித்துள்ளேன்' என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கைதடியிலுள்ள அவரது செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர், சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது.

### அரசியல் தீர்வு

70 ஆண்டுகளாகப் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகத்தைக் கட்டுப்படுத்தி அவர்களைத் தமது அதிகாரத்துக்குள் அடக்கி வைத்திருக்கின்றார். அவ்வாறான நிலையே தற்போதும் தொடர்கின்றது. ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் இங்கு நிலை கொண்டிருக்கின்றார்கள். பல விதங்களிலும் கொழும்பு அரசு எம்மை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு அரசியல் ரீதியான விடயங்களைத் தீர்ப்பது கடினம்.

இராணுவத்தின் கட்டுப்பாடு, அரசின் கட்டுப்பாடு, வெளியில் இருந்து வருபவர்கள் எம்மைப் பல விதத்திலும் கட்டுப்படுத்துகின்றார்கள். சட்டங்களும் எமக்கு எதிராக உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் எவ்வாறான அரசமைப்பை உருவாக்கித் தருவார்கள் என்றும் சந்தேகம் உள்ளது. அரசமைப்பை விரைவில் உருவாக்கி, அதனை இரு இனத்தவர்களும் ஏற்றுக்கொண்டு, முன்னோக்கி நகர்ந்தால் மாத்திரமே நாட்டின் அபிவிருத்தியை உறுதிப்படுத்த முடியும் என்று கனேடியத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டினேன்.

### ஓ.எம்.பி.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்ட பணியகம் தொடர்பிலும் தூதுவர் வினவியிருந்தார். அந்தப் பணியகத்தின் தலைவர் அவரது மனச்சாட்சியின்படி செயற்பட அனுமதி இருக்கா என்பது எனக்குத் தெரியவில்லை. காலம் சென்ற பின்னரே. அந்தப் பணியகத்தின் ஊடாக மக்கள் பெற்றுக் கொண்ட நியாயத்தின் வெற்றி தோல்விகளைக் கூற முடியும்.

### சட்டம் - ஒழுங்கு

வடக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு மீறப்படுவது தொடர்பிலும் கனேடியத் தூதுவர் கேள்வி எழுப்பினார். பத்திரிகைகளில் இது தொடர்பில் செய்தி வெளியாகின்றது. பொலிஸார் தமது புள்ளி விவரங்கள் ஊடாக அதனை இல்லை என்கின்றார்கள். இருப்பினும் சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அதனை மறுக்க முடியாது. கனேடியத் தூதுவரும் இதை ஏற்றுக் கொண்டார். இதேபோன்று தென்பகுதியில் சம்பவங்கள் நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார் - என்றார். (5,106)

## கட்சிக்....

ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் வழக்குத் தீர்ப்பு வெளியாகியவுடன்வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம்உங்கள் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் விவரத்தை தருமாறு கோரிக்கை விடுத்து தொலைநகல் ஊடாகவும் நேரடியாகவும் கடிதம் அனுப்பி இருந்தேன். அதற்கு அவர் எனக்குப் பதில் கடிதமும் அனுப்பினர். அவ்வாறான நிலையில் வடக்கு மாகாண சபையின் அமர்வில் நான் கடிதம் எதுவும் அனுப்பவில்லை எனக் கூறியிருப்பது ஏன் என்று தெரியாது. அவருடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அவருக்கும் கட்சியினருக்கும் இருக்கும் முரண்பாடுகளுக்கும் அவர் ஏற்படுத்தும் குழப்பகரமான செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பேற்க முடியாது.

வடக்கு மாகாண சபையில் அமைச்சர்களை நியமிக்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. வடக்கு மாகாண முதலமைச்சரின் பரிந்துரைக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரமே எனக்கு உள்ளது. அவ்வாறான நிலையில் அவருடைய பிழைகளுக்கு நான் பொறுப்பேற்க முடியாது - என்றார்.

வடக்கு மாகாண சபையில் நேற்றுமுன்தினம் நடந்த அமர்வில், ஆளுநர், உங்களின் (முதலமைச்சர்) அமைச்சரவையில் உள்ளவர்களின் விவரங்களைத் தெரிவியுங்கள் என்று கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார் என்று ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் தெரிவித்திருந்த போது, வடக்கு மாகாண முதலமைச்சர் அவ்வாறானதொரு கடிதம் தனக்குக் கிடைக்கவில்லை என்று பதில் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,8)

## மகேஸுக்கு...

சேனநாயக்கவுக்கு ஓராண்டுச் சேவை நீடிப்பு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்டுள்ளது.

மகேஸ் சேனநாயக்க 2017ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் நாள் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் நாளுடன் ஓய்வுபெறவிருந்த நிலையிலேயே, 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19ஆம் நாள் வரையில் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (5)

**காணி தேவை**

பூம்புகார், கிழக்கு அரியாலை, கோப்பாய், பளை மற்றும் யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் காணி தேவை. தரகர் தேவையில்லை.

**தொடர்பு - 077 397 3166**

**வேலையாள் தேவை**

நல்லூர் பகுதியில் வீடு மற்றும் வளவு துப்புரவு செய்ய வேலையாள் தேவை.

**தொடர்பு - 077 397 3166**

(CS 18178/15/17)

## மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி கந்தையா



கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டியை வசிப்பிடமாகவும், அம்பலவர்ணர் வீதி, சோமராந்தோட்டம் உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி கந்தையா நேற்று (11.07.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்புமகனும் ஆசைப்பிள்ளையின் அன்புக்கணவரும் சற்குணசாந்தி, சந்திரசாந்தி, சந்திரகுமார் (வெற்றிலை வியாபாரம், மருதனார்மடம்), ஆனந்தகுமார் (ஆசிரியர், யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), இந்திரசாந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 868 0748
077 976 0683

தகவல் :
குடும்பத்தினர்.

# அதிகரித்து வரும் வாழ்விடத் தேவையும் நீண்டகால விளைவுகளும்

ஆழ்வார்



நாட்டில் அதிகரித்துவரும் மக்கள் தொகை காரணமாக அவர்களது வதிவிடங்களுக்கான தேவையும் உலகம் முழுவதும் அதிகரித்தவண்ணமுள்ளது. வடபகுதியும் இதற்கு விதிவிலக்கல்ல. வரையறுக்கப்பட்டதான நிலப்பகுதி (விடுவிக்கப்படாத பிரதேசங்களும் உள்ளடங்கலாக) மற்றும் நகர்ப்புறங்களை அண்மித்து வசிப்பிடங்களை விரும்பும் மனோபாவம் போன்ற காரணிகளால் காணிகள் மற்றும் மனைகளின் பெறுமதிகள் சடுதியாக உயர்வடைந்து செல்கின்றன.

**வாழ்விடத் தேவையும் கேள்வியும்**

தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றுவதற்கு மக்கள் நகர்ப்புறங்களை நாடுகின்ற காரணத்தால் நகர்ப்பகுதிகளை அண்டியுள்ள காணிகள் மற்றும் வீடுகளை பெற்றுக்கொள்வதென்பது மிகவும் சிரமான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் ஏனைய வர்த்தக நோக்கினை மையப்படுத்திய நிறுவனங்களின் படையெடுப்பால் நகர்ப்பகுதிகளில் குடியிருப்புத் தேவை கருதிய நிலையான சொத்துக்களைப் பெறுவதென்பது இன்றைய காலப்பகுதியில் சாதாரண விடயமொன்றல்ல. இவ்வாறான நிலமைகளால் நிலையான சொத்துக்களைத் தேடுவோர் நகர்ப்பகுதிகளுக்கு அடுத்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளையே இலக்கு வைத்து நகர்கின்றனர்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில், இந்த நிலை மிகவேகமாக அதிகரித்து வருகின்றது. யாழ்ப்பாண நகர், நல்லூர் மற்றும் யாழ் மாநகரப் பிரதேசம் ஆகியவற்றுக்கு அடுத்த நிலைகளில் உள்ள பிரதேசங்களை தமது குடியிருப்புத் தேவைகளுக்காக நாடும் மக்களால் அவ்விடங்களுக்கான கேள்வியும், பெறுமதியும் அதிகரித்து வருவதை அவதானிக்கவும் உணர்ந்துகொள்ளவும் முடிகின்றது. குறிப்பாக, 'திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், இருபாலை, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதியை அண்மித்த பகுதிகள், இராஜ வீதி மற்றும் நகரை அண்டிய வேறுசில பகுதிகளை' இங்கு குறிப்பிட முடியும்.

**புதிய தொழில்முனைவும் பொருளாதார உறுதித் தன்மையும்**

இதன் சாதகமான அம்சங்களை நோக்கும் போது 'றியல் எஸ்டேட்' தொழில் துறையினருக்கு மேற்படி நிலைமைகள் சாதகமான அம்சமாக அமைந்துள்ளன. பிரதானமாக, 'காணிகளைக் கொள்வனவு செய்து அதன் பெறுமதி கூட்டப்பட்ட வகையில் (பல பகுதிகளாக பிரித்து சில உட்கட்டுமான வேலைகளுடன்) மீளவும் விற்பனை செய்தல், காணிகளை கொள்வனவு செய்து வாடிக்கையாளர் விருப்புக்கு ஏற்றவாறு மனைகளை அமைத்து விற்பனை செய்தல் மற்றும் வதிவிடங்களை கட்டுமானம் செய்து வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்குதல்' போன்ற மூன்று முதன்மைத் தொழில் நிலைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நீண்டகாலம் தரிசு நிலங்களாக காணப்பட்ட பல்வேறு காணிகள்கூட இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன. இங்கு, 'இட அமைவு, அவை கொண்டுள்ள இயற்றை வளங்கள் மற்றும் சுற்றயல் குடியிருப்பாளர்கள்' போன்ற பல்வேறு புறச்சூழல் காரணிகள் அவற்றின் பெறுமதியைத் தீர்மானிக்கின்றன. இது வோர் வரவேற்கத்தக்க நிலை. பல தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்ற அதே வேளை, எமது பொருளாதாரத்தையும் ஓரளவுக்கு எமது பிரதேசத்துக்குள் தக்கவைத்துக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

**நிலையான சொத்து**

நிலையான சொத்துக்கள் தொடர்பான தேவை அதிகரித்துச் செல்கின்றது. அந்தவகையிலே ஓர் காணியைக் குறுங்கால அல்லது நீண்டகால திட்டத்துடன் கொள்வனவு செய்தல் என்பது தற்காலத்தில் சிறந்த முதலீடாக அமைகிறது. எனினும் அரச கொள்கைகள் மற்றும் பாதகமான நிலமைகள் அனைத்துத் துறை சார்ந்த தொழில் முறைகளிலும் செல்வாக்குச் செலுத்தும்போது, எந்தவொரு தொழில் நடவடிக்கை தொடர்பான எதிர்வுகூறல்களும் மாறுபடுகின்றன. இது இயல்பான விடயமாக அமைந்துள்ளது. எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துமாயின் முதலீட்டுக்கான பலாபலன்களைப் பெறுவதில் மிகச் சிக்கலான நிலை தோன்றுவதுடன், சில வேளைகளில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்த விலையை விடவும் குறைந்த பெறுமதிக்கு கைமாற்றவேண்டிய அபாயநிலைகளும் தோன்றுவதை மறுப்பதிற்கில்லை. தற்போது இவ்வாறான நிலமைகளை வடபுலத்தில் அதிகம் அவதானம் கொள்ளக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும் தனியார் வதிவிடங்களுக்குரிய (வீடுகள்) கேள்வி அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக குடாநாட்டில் மட்டுமன்றி வடபுலத்தின் ஏனைய பகுதிகளிலும் அதிகளவான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதை அண்மைக்காலங்களில் பரந்த அளவில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. வீடுகள் மற்றும் மனைகள் மட்டுமன்றி வணிக நோக்கம் கொண்ட கட்டடங்களும் (மனைகளுடன் இணைந்ததாகவும் மற்றும் தனியாகவும்) அமைக்கப்பட்டு வருகின்றன. புலம்பெயர்ந்தோர் மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து வடமாகாணத்துக்கு வருகைதரும் சுற்றுலாவிகள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினரையும் இலக்காகக் கொண்டு இவ்வாறான முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனூடே கணிசமான பொருளாதார மேம்பாடு ஏற்பட்டுள்ளது.

**பாதகமான விளைவுகள்**

மேற்கூறப்பட்ட பல சாதகமான அம்சங்கள் காணப்படுகின்ற போதும், பாதகமான விடயங்கள் தொடர்பிலும் அவதானம் கொள்ள வேண்டும். குறிப்பாக மனிதனது மிக முக்கிய தேவைப்பாடாக விளங்குகின்ற நீர்வளப் பற்றாக்குறை நீண்ட காலத்தில் ஏற்படக்கூடிய அபாயநிலையை முதன்மை விளைவாக எடுத்து நோக்க வேண்டியுள்ளது. குறைந்துவருகின்ற நிலத்தடி நீர்வளம் மேலும் அதிகரிப்பதுடன் யாழ்ப்பாணம் வறட்சியான பூமியாக காலவோட்டத்தில் மாறுகின்ற பாதகமான நிலை தொடர்பில் நாம் அதீத கரிசனை கொள்ள வேண்டும். புதிதாக ஓர் கட்டடம் அமைக்கப்படும்போது, குடியிருப்பாளர்கள் மற்றும் கட்டுமானத் துறையினர் அக்காணியிலுள்ள அநேகமான பயன்தரு மரங்களை கண்மூடித்தனமாக அழிக்கின்றனர். அதற்கு மாற்றீடாக அக்காணியிலுள்ள வாய்ப்பான இடங்களில் வேறு மரக்கன்றுகளை நாட்டி வளர்க்க ஒருபோதும் முன்வருவதில்லை. தவிரவும் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைக் குளிரூட்டும் நோக்கில் வளிச்சீராக்கிகள் போன்ற சூழலுக்கு முற்றிலும் வேண்டத்தகாத செயற்கை மின்சாதனங்களைப் பொருத்தி அதை பயன்கொள்கின்றனர்.

உண்மையில் இவை வெளியேற்றுகின்ற வெப்பத்துடன் கூடிய காற்று சுற்றாடலிலுள்ள ஏனைய பல பயன்தரு மரங்கள், செடி கொடிகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் அழித்துவிடுகின்றது. எமது சூழலுக்கு ஏற்புடைய இசைவான கட்டுமான முறையைத் தவிர்த்து நாகரிக மோகத்தில் மூழ்கி, பல்வேறு மேற்கத்தேய கட்டுமான வடிவமைப்புக்களை கண்டுபிடித்து அவற்றை எமது பிரதேசத்தில் உட்புகுத்துகிறோம். அவற்றின் நீண்டகால விளைவுகள் தொடர்பில் மிகக்குறைந்த விழிப்பு ணர்வோடு செயலாற்றுகின்றோம். "சிறுகக் கட்டி பெருக வாழ்" என்ற முதுமொழிக்கு முற்றிலும் மாறாக தற்போது "பெருகக் கட்டி குறைந்து போகும்" அபாயகரமான நிலையை கண்டடைந்துள்ளோம். எம்மிடமுள்ள செல்வம், ஆயுள், அமைதியுடன் எமது சந்ததியும் 'குறைந்து போகின்ற' செயல் வெளியையே மேற்கூறிய விடயங்கள் கட்டியங்கூறி நிற்கின்றன.

**உணவுத் தேவையில் தன்னிறைவற்ற தன்மை**

மேலுமோர் குறிப்பிடத்தக்க விளைவாக எமது பிரதேசத்திலுள்ள தோட்டப்பயிர்ச்செய்கைக் காணிகள் மற்றும் துரவுகள் கூட இல்லாமல் செய்யப்பட்டு குடியிருப்புத் தேவைக்குரிய கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இதனால் மரக்கறிப்பயிர்ச்செய்கை மற்றும் தானியச்செய்கையின் வீதம் குறைவடைந்து வருகிறது. தோட்டத் தொழிலில் ஈடுபடும் தொழிற்படையும் மிகவும் அருகி வருகின்றது. பணப்பயிர்களில் ஒன்றான புகையிலைச் செய்கையை மேற்கொள்வதிலேயே அதிகளவு ஆர்வத்தைக் காட்டிவருகின்றனர். இவ்வாறு மரக்கறிச் செய்கையின் உற்பத்தி வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால் எதிர்காலத்தில் குடாநாட்டின் மரக்கறித் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத இக்கட்டு நிலை தோன்றும். அவற்றுக்காக இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை எதிர்நோக்கி பயணம் கொள்கிறோம். இவ்வாறான தோட்டப்பயிர்ச்செய்கை நிலப்பகுதிகளை, விற்பனை செய்வதற்கு பல்வேறு காரணிகளை நில உரிமையாளர்கள் கொண்டுள்ளனர். பிரதானமாக கடன்தொல்லை மற்றும் போதிய தொழிலாளர் வளமின்மை போன்றவற்றை குறிப்பிட முடியும்.

**நீர்ப்பற்றாக்குறை**

அதிகரித்த நீர் பயன்பாடு மற்றும் சரியான நீர் முகாமைத்துவம் இல்லாமை போன்ற பல காரணிகளால், நிலத்தடி நீரின் அளவு மிக வேகமாகக் குறைந்து செல்கின்றது. அத்தோடு தேவையுடனும், அவசியமற்றும் தோண்டப்படும் ஆள் துளைக் கிணறுகள் காரணமாகவும் இந்த நிலை மிக மோசமாகும் ஏதுநிலைகளே அதிகம் காணப்படுகின்றன. அனைத்துக்கும் மேலாக கடந்த சில வருடங்களாக போதிய மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாமையும் நிலத்தடி நீரின் நீண்டகால இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. தற்போதைய இளம் சந்ததியும் சமூக அக்கறை கருதி பயன்தரு மரங்களை நாட்டி வளத்தெடுக்கத் தவறி வருகின்றமையும் வருந்தத்தக்க பிறிதோர் காரணியாக அமைந்தள்ளது. மரங்களை வெட்டுவதிலுள்ள ஆர்வம் அவற்றை மீள் உருவாக்கம் செய்வதில் காணப்படவில்லை. இவ்வாறு மரக்கன்றுகளை நாட்டுவதுடன் இயற்கைக்கு தீங்கற்ற செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இது காலத்தின் அவசிய தேவையாக முன்மொழியப்படுகிறது.

**எதிர்கால நலன்கருதி செயலாற்றுவோம்**

எவ்வாறாயினும் அதிகரித்துவரும் சனத்தொகைப் பரம்பலுக்கேற்ப பல்வேறு தேவைப்பாடுகள் உருவாகின்றமையை மறுப்பதிற்கில்லை. எனினும், அவர்களுக்கான இல்லிடத் தேவையைப் பூர்த்திசெய்யும்போது எமது எதிர்காலச் சந்ததியின் நலன்கருதி செயலாற்ற வேண்டும். பல்வேறு அவசியமான நிலமைகளைக் கருத்திற்கொண்டு இயற்கையோடு கூடியவரையில் இசைவாக்கம் உடைய கட்டுமானங்கள் மற்றும் செயற்பாடுகளை திட்டமிட வேண்டும். இதனூடே வளமான எதிர்காலத்துக்கான அத்திபாரத்தை இட்டவர்களாவோம். இல்லாதுபோனால், மாபெரும் தவறிழைத்த பெரும் குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாக நாம் மாற்றம் பெறுவோம்.




# உடல் எடையைக் குறைக்க சீரகத் தண்ணீர்...



தினமும் தண்ணீருடன் சிறிது சீரகத்தைப் போட்டு நன்கு கொதிக்க வைத்து 'சீரகக் குடிநீர்' தயார் செய்துவைத்துக்கொள்ளவும். இதை, நாள்முழுவதும், அவ்வப்போதுபருகி வர, எந்தவித அஜீரணக் கோளாறுகளும் வராது. நீர்மூலம் பரவும் நோய்களைத் தடுக்கலாம். பசிருசியைத் தூண்டும்தன்மையும் இந்தச் சீரக நீருக்கு உண்டு.

- சிறிது சீரகத்தை மென்று தின்று ஒரு குவளை குளிர்ந்த நீரைக் குடித்தால் தலைச்சுற்று குணமாகும்.
- மோருடன் சீரகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்துப் பருகினால் வாயுத் தொல்ல நீங்கும்.
- சீரகத்தை இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறில் கலந்து ஒருநாள் ஊறவைத்துக் கொள்ளவும். இதை, தினம் இருவேளை வீதம் மூன்று நாள்கள் சாப்பிட்டு வர, பித்தம் மொத்தமாகக் குணமாகும்.
- சுக்கு, சீரகம், மிளகு, திப்பிலி ஆகியவற்றைப் பொடித் தேனில் கலந்து சாப்பிட்டால் எல்லா உடல் உள்உறுப்புகளையும் சீராக இயங்கச் செய்வதோடு, கோளாறு ஏற்படாது தடுக்கும். எனவே, வாரம் ஒருமுற தடுப்பு முறையாகக் கூட (Prophylactive) இதைச் சாப்பிடலாம்.
- உடலுக்கு குளிர்ச்சியும், தேகத்தைப் பளபளப்பாக வைக்கும் ஆற்றலும் சீரகத்திற்கு உண்டு. எனவே, தினம் உணவில் சீரகத்தை ஏதாவது ஒரு வழியில் சேர்த்துக் கொள்வோம்.
- திராட்சைப் பழச்சாறுடன், சிறிது சீரகத்தைப் பொடித்திட்டு, பருகினால், ஆரம்பநிலை குருதி அழுத்த நோய் குணமாகும். மத்தியதர குருதி அழுத்த நோய் இருப்பவர்களுக்கு, மேலும் குருதி அழுத்தம் அதிகரிக்காது தடுக்கும்.
- சிறிது சீரகம், நல்லமிளகு பொடித்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, அந்த எண்ணெயத் தலையில் தேய்த்துக் குளித்தால், கண் எரிச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும்.
- அகத்திக்கீரையுடன், சீரகம், சின்னவெங்காயம் சேர்த்து கஷாயம் செய்து அத்துடன் கருப்பட்டி பொடித்திட்டு சாப்பிட்டால், மன அழுத்தம் மாறும். ஆரம்பநில மனநோய் குணமாகும்.
- சீரகம், சுக்கு, மிளகு, தனியா, சித்தரத்தை இவ்வைந்தையும் சேர்த்துத் தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு சிட்டிகை வீதம், தினம் இரண்டுவேளையாக சாப்பிட்டால், உடல் அசதி நீங்கி, புத்துணர்ச்சி ஏற்படும்.
- சீரகத்தை லேசாக வறுத்து, அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
- சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொருமல் வற்றி, நலம் பயக்கும்.
- சீரகத்துடன், மூன்று பற்கள் பூண்டு வைத்து மைய்ய அரைத்து, எலுமிச்சை சாறில் கலந்து குடித்தால், குடல் கோளாறுகள் குணமாகும்.
- ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதி போக்கு நிற்கும்.
- பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப் படுதல் நோய்க்கு, சிறிது சீரகத்துடன் சின்ன வெங்காயம் வைத்து மைய்ய அரைத்து, பசும்பாலில் கலந்து குடித்து வர, நல்ல பலன் கிடக்கும்.
- சிறிது சீரகத்துடன், கீழாநெல்லி வைத்து அரைத்து, எலுமிச்சை சாறில் சேர்தது்ப் பருகி வர, கல்லீரல் கோளாறு குணமாகும்.
- சீரகத்தை தேயிலைத் தூளுடன் சேர்தது கஷாயம் செய்து குடித்தால் சீதபேதி குணமாகும்.
- கொஞ்சம் சீரகமும், திப்பிலியும் சேர்த்துப் பொடித் தேனில் குழைத்து சாப்பிட்டால், தொடர் விக்கல் விலகும்.
- மஞ்சள் வாழைப் பழத்துடன், சிறிது சீரகம் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 500 | 500 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 500 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 350 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 300 | 300 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 200 | 300 | 500 | 300 |
| வாளை | 150 | 300 | 400 | 200 |

# பெற்றோர் குழந்தைகளிடம் மனம்விட்டுப் பேச வேண்டும்




தற்கால குழந்தைகள் அதிக அறிவாற்றலுடன் திகழ்கின்றனர். அவர்களுக்கு பாலுறவு, மாதவிடாய், மனநிலை, மது, போதை உள்ளிட்டவை குறித்து தெளிவுபடுத்துவது அவசியம். ஒருவேளை நீங்கள் இதுகுறித்து குழந்தைகளுடன் பேசாவிட்டாலும், அவர்கள் இணையம் வாயிலாக அறிந்து கொள்ளத்தான் போகிறார்கள்.

உங்கள் குழந்தைகளின் வயதுக்கு ஏற்ப, பால்நிலை, மாதவிடாய், உடல் மீதான ஈர்ப்பு, நல்ல தொடுதல், கெட்ட தொடுதல் குறித்து கொஞ்சம், கொஞ்சமாக பேச ஆரம்பிக்க வேண்டும். இது குழந்தைகள் உடனான நட்புறவிற்கு மிகுந்த உதவியாக இருக்கும். இதன்மூலம் குழந்தைகளுக்கு உங்கள் மீது நம்பிக்கை பிறந்து, எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை உருவாகும். வயதிற்கேற்ப பால்நிலைக் கல்வி அளிக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒரே தடவையில் கூற வேண்டாம். ஒவ்வொரு விஷயமாக கூறும் போது, அவர்கள் மெல்ல சிந்தித்து புரிந்து கொள்வார்கள். பருவமடைதலின் போது ஏற்படும் மாற்றத்தை, குழந்தைகளுக்கு தெளிவாக புரிய வைக்க வேண்டும். உடல் வளர்ச்சியின் ஒரு பகுதியே என்றும், இது ஒரு சராசரி நிகழ்வே என்றும் தெளிவாக விளக்க வேண்டும். ஆல்கஹால், புகைப்பிடித்தல் ஆகியவற்றில் இருந்து குழந்தைகளை எவ்வளவு மறைத்து வைத்தாலும், ஒரு கட்டத்தில் தானாகவே அறிந்து கொள்வார்கள். இதனை தவறாக புரிந்து கொண்டு, தீய பழக்கங்கள் ஏற்படாமல் இருக்க, நண்பரைப் போல அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இவற்றையெல்லாம் கட்டிளமைப் பருவத்தில் எடுத்துரைப்பது சிறந்தது.

உடல் சுரப்பிகளின் தூண்டுதலால், ஆர்வ மிகுதியால் எல்லாவற்றையும் முயற்சித்து பார்க்க தோன்றும். இதுபோன்ற சமயங்களில் தீய பழக்கங்களால் ஏற்படும் உடல் பாதிப்புகள் குறித்து விளக்க வேண்டும். இதுதொடர்பாக விழிப்புணர்வு செய்திகள், காணொலிகள் உள்ளிட்டவற்றை குழந்தைகளுக்கு காண்பித்து, அறிவுரை வழங்க வேண்டும்.

வாழ்க்கையில் தோன்றும் ஏற்ற, இறக்கங்கள் மற்றும் வெற்றி, தோல்விகள் ஆகியவற்றை பெற்றோர்களின் வளர்ப்பின் படியே, குழந்தைகள் கையாள்வார்கள். அதாவது, பள்ளி தேர்வில் குறைந்த மதிப்பெண்கள், நிராகரிப்பதால் ஏற்படும் மனச்சிதைவு உள்ளிட்டவை இதில் அடங்கும்.

தோல்வி என்பது, நீங்கள் சரியாகச் செயல்படவில்லை என்பதைக் குறிக்காது. இது ஒரு அனுபவம். சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, தேவையை நோக்கி நடைபோட வேண்டும் என்று புரிய வைக்க வேண்டும். தோல்வியடையும் சமயங்களில் குழந்தைகளைத் திட்டாமல், அடிக்காமல் சரியான உதாரணங்களுடன் நம்பிக்கை ஊட்ட வேண்டும். ■



இது புதுசு

பெண்களுக்கான காதணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

## இந்திய...

இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாளையே சந்திக்கவுள்ளார். கூட்டமைப்புடனான சந்திப்பை முடித்துக் கொண்டு அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் உள்ளிட்டோரைச் சனிக்கிழமை சந்திக்கவுள்ளார். பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்தி தொடர்பிலும் இந்தச் சந்திப்பிலும் பேச்சு நடத்தப்படவுள்ளது. (5,31)

## புலிகளின்...

மண்டபத்துக்கு அருகில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடயங்கள் சில பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் நிலத்துக்குள் புலிகளின் தடயங்கள் புதைக்கப்பட்டிருப்பதை அவதானித்த பிரதேசவாசிகள் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். பொலிஸார் நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வரிச் சீருடை, இடுப்புப் பட்டி, ஆயுதுங்கள் வைத்திருக்குப் பை, காவல்த்துறை என்று அடையாளப்படுத்தப்பட்ட தகடு என்பன பொலிஸாரால் அங்கிருந்து மீட்க்கப்பட்டுள்ளன. (5,ரி3,152)

## கோட்டைக்குள்...

னேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, கோட்டைக்குள் இராணுவம் முகாம் அமைப்பதற்கு தாம் ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் குரே நேற்றுக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கோட்டையில் இராணுவம் முகாம் அமைப்பது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் கோட்டையை இராணுவத்துக்குக் கொடுப்பது என்று சட்டமாக வரவில்லை. பலராலும் பேசப்படுகின்றது. இதனை ஆரம்பித்து வைத்தவர் வடக்கு மாகாண ஆளுநர். கோட்டையை இராணுவத்துக்கு கொடுக்கவேண்டுமாயின் யாழ்ப்பாணம் மாநகர சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

வடக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறுவார்களாயின், கோட்டைக்குள் தற்காலிக முகாம் அமைப்பதற்கு அவர்களுக்கு அனுமதிக்க முடியும். நிரந்தர முகாம் அமைக்க அனுமதிக்க முடியாது. கோட்டை தொல்பொருள் சின்னம் என்பதால், அங்கு இராணுவத்தினரை முகாம் அமைக்க அனுமதிப்பதிலும் பிரச்சினையுள்ளது.

கோட்டைக்குள் வடக்கு மாகாண சுற்றுலா மையம் அமைக்க நாம் கோரியபோது தொல்பொருள் திணைக்களம் அனுமதி வழங்கவில்லை. இராணுவத்தினர் முகாம் அமைப்பதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பது புரியவில்லை - என்றார். (5,8,106)

# ஐந்து வீரர்களின் தகுதி நீக்க விவகாரத்தில் தலையிட மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடியது மகாஜனா

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஐந்து வீரர்கள் மேன்முறையீட்டுக் குழுவால் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து, இந்த விவகாரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

தொடரின் மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நடைபெற்றது. இதில் கலந்துகொள்ளச் சென்ற தெல்லிப்பழை மகாஜனயக் கல்லூரியின் வீரர் மேன்முறையீட்டுக் குழுவால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். "குறித்த மாணவன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகள் தோன்றி இரண்டு தடவைகளும் சித்திபெறாது விட்டவர். இதனால் அவரைப் பாடசாலை மாணவனாகக் கருத முடியாது. ஆகவே அவர் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது" என்று காரணம் தெரிவிக்கப்பட்டது. எனினும் அந்த மாணவன் "வினாத்தாளை மீளத் திருத்தும் நடவடிக்கைக்காக விண்ணப்பித்துள்ளார். எனவே அதில் அவர் சித்தி அடைந்தால் அவர் தனது உயர்தரக் கல்வியைத் தொடர முடியும். ஆக, அவரின் பாடசாலை வாழ்க்கை முடிவுக்கு வரவில்லை. எனின், அவர் பாடசாலை மாணவன்தான்." என்பது பாடசாலையின் விவாதம். அத்துடன் அந்த மாணவனின் பெயர் இடம்பெற்ற காரணத்தால் பாடசாலையில் அஞ்சலோட்ட அணியையே தகுதி நீக்கம் செய்தது மிகப்பெரும் தவறு. ஏனெனில், தடகள அணியில் ஆறு வீரர்கள் உள்ளனர். சர்ச்சைக்குரிய மாணவனை விடுத்து ஏனைய நால்வரைக் களமிறக்க முடியும் என்றும் வாதிடுகிறதுமகாஜனா இந்த விவகாரம் தொடரின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் பூதாரமாகியது. இதையடுத்து தமக்கு நீதிவேண்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடியது மகாஜனா. மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் அவ்வாறானதொரு முறைப்பாடு கிடைத்தமையை உதயனுக்கு உறுதிப்படுத்தினர். (ம-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

### திருமகள் ச.ச.நி. கரபபந்தாட்டம்

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் தனது 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில்இன்றுவியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### யங்கம்பன்ஸின் கால்பந்தாட்டம்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமொன்று இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதன்படி இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## 100 மீற்றர் ஓட்டத்தில் சுண்டுக்குளிக்கு தங்கப்பதக்கம்




யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவு 100 மீற்றர் ஓட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணிக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் நேற்றுமுன்தினம் வரை இந்தத் தொடர் நடைபெற்றது.

20 வயதுப்பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.மேரிதர்சிகா 13.50 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும் தனதாக்கினார். மன்னார் கௌரியம்பாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எஸ். பிரியதர்சினி 13.80 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப்பதக்கத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.அபினயா வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினார். (ம-23)




யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் எஸ்.மீதுன்ராஜ் தெரிவானர். (23)

## 16 வயதுப்பிரிவு உயரம் பாய்தலில் விபுலானந்தாக் கல்லூரி வென்றது தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவு உயரம் பாய்தலில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தத் தொடர் முடிவுக்கு வந்தது. 16 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வி.ராகுல் 1.68 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ச்சான்றிதழுடன் தங்கப்பதக்கம் வென்றார். முல்லைத்தீவு விஸ்வமடு மகா வித்தியாலயத்தின் ரி.ஜெனிஸ்ரன் 1.68 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கம் வென்றார். தீவகம்கல்வி வலயத்தைப்பிரதிநிதித்துவம் செய்த சென். அன்ரனிஸ் கல்லூரியின் ஆர். வினோஜன்1.66 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப்பதக்கம் வென்றார். (ம-23)



## ஈட்டி எறிதல் போட்டியில் விக்னேஸ்வரா அசத்தல்




யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 18 வயதுப் பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் யாழ்ப்பாணம் வாதரவத்தை விக்னேஸ்வராக் கல்லூரிக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. வாதரவத்தை விக்னேஸ்வராக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கஜானி 32:00 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கத்தையும், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த வி.சௌகர்யா 3.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கத்தையும், பாசையூர் சென். அன்ரனிஸ் ரோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆன்.பியூலா 29.82 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# இறுதிக்குள் பிரான்ஸ்

## வெளியேறினாலும் பெல்ஜியம் வியக்கவைக்கும் ஆட்டம்





காலப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ். நேற்றுமுன் தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பெல்ஜியத்தைத் தோற்கடித்தே பிரான்ஸ் இறுதிக்குத் தகுதி பெற்றது.

இரண்டும் சம பலமான அணிகள். இரண்டும் இந்த உலகக் கிண்ணத் தொடரில் எந்தத் தோல்வியையும் காணாமல் தொடர்ந்து வெற்றிநடை போட்டுவரும் அணிகள். இதனால் இந்த ஆட்டம் பெரும் எதிர்பார்ப்புக்கு உரியதொன்றாக மாறியிருந்தது. ஆட்டம் ஆரம்பித்த மறுகணமே இரு அணிகளும் மின்னல் வேகத்தில் செயற்பட ஆரம்பித்தன. பெல்ஜிய வீரர்கள் எவரிலும் பிரான்ஸின் சிறப்புக் கவனம் இருக்கவில்லை. எனினும் பிரான்ஸ் வீரர்களான மப்பே மற்றும் கிரீஸ்மன் இருவரிலும் பெல்ஜிய வீரர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்தினர். அவர்களைக் கட்டுப்படுத்துவதில் தமது கவனத்தைச் செலுத்தியதால் ஓரிரு வாய்ப்புக்களை பெல்ஜியம் தவறவிட்டது உண்மைதான். பிரான்ஸின் நட்சத்திர வீரர் உம்ரிரி ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் கோல் கம்பங்களை மிகவும் நெருக்கமாகச் சென்றார். எனினும் அவரின் அந்த முயற்சி கோலாக மாற்றம்பெறவில்லை. இரண்டு அணிகளாலும் கோல் எதுவும் பதிவுசெய்யப்படாததை அடுத்து முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியிலும் இரண்டு அணிகளதும் சிறப்பான போராட்டம் தொடர்ந்தது. ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் வீரர் உம்ரிரி மூலை உதையொன்றை தலையால் அடித்து பிரான்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார். இதன் பின்னர் பெல்ஜியத்தின் ஆட்டம் நம்ப முடியாத அளவுக்கு துடிப்புப் பெற்றது. அடிக்கொரு தடவை பிரான்ஸின் கோல்ப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்ட போதிலும் கோலெதுவும் பதிவாகவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ்.

**பெல்ஜியத்தின் பெறுபேறு**

இந்த அரையிறுதி ஆட்டத்தில் பெல்ஜியம் ஆரம்பம் முதல் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய போதிலும் அந்த அணி தோல்வியடைந்தமை துரதிஸ்டமே. மொத்தம் 9 தடவைகள் பிரான்ஸின் கோல் பரப்பை பெல்ஜியம் ஆக்கிரமித்தது. அவற்றில் 3 தடவைகள் பொக்ஸ் பகுதிக்குள் வைத்து உதைகளை மேற்கொண்டிருந்தது. ஆட்டத்தின் 64 வீதமான நேரங்களில் பந்தைத் தனது கட்டுப்பாட்டில் (பந்துடைமை) வைத்திருந்தது பெல்ஜியம். மொத்தம் 594 பந்துப்பரிமாற்றங்களை பெல்ஜியம் மேற்கொண்டிருந்தது இவ்வாறாக அனைத்து வகையிலும் பிரான்ஸுக்கு ஈடுகொடுத்து விளையாடிய பெல்ஜியம் மூலையுதையொன்றால் தனது வாய்ப்பைத் தவறவிட்டமை வருத்தமே. (ம)

## கோலைக் கொண்டாடினார் பிரான்ஸ் அதிபர் மக்ரோன்



கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன் தினம் நள்ளிரவு நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் கோலைப் பதிவுசெய்தவுடன் அதைக் கொண்டாடினார் பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன். ஆட்டத்தின் ஆரம்பம் முதல் பெல்ஜியம் வெளிப்படுத்திய அதிரடியைக் கண்டு பிரான்ஸின் ரசிகர்கள் வாயடைத்துப் போய் நின்றனர். பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோனும் விதிவிலக்கில்லை. இந்த நிலையில் ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் உம்ரிரி பதிவுசெய்த கோலை அடுத்து பிரான்ஸின் ரசிகர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். பிரான்ஸ் அதிபர் மக்ரோனும் ஆட்டத்தைக் காண்பதற்காக ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். அவரும் உம்ரிரி பதிவுசெய்த கோலை நன்றாகவே கொண்டாடித் தீர்த்தார்..

## கார்மேல்போய்ஸ் மகுடம்

யாழ்ப்பாணம், ஜ_லை 12

கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கிண்ணம் வென்றது கார்மேல் போய்ஸ்.

இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கார்மேல் போய்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மோகன்ராஜ் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கார்மேல்போய்ஸ் அணியின் சார்பில் சுதர்ஜன் 2 இலக்குகளையும், அலன், அஜன், சுரேந்திரன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி 6.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் செல்ரன் 26 ஓட்டங்களையும், தீபன் 15 ஓட்டங்களையும், விதுசன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இணுவில் கலையொளி அணியின் சார்பில் சிறி, மோகன்ராஜ் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் கார்மேல் போய்ஸ் அணியின் செல்ரன், சிறந்த பந்து வீச்சாளராக கார்மேல் போய்ஸ் அணியின் சுதர்ஜன் தொடராட்ட நாயகனாக இணுவில் கலையொளி அணியின் கோகுலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-23)



# இலங்கை, தெ.ஆபிரிக்கா டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பந்தைச் சேதப்படுத்திய குற்றத்துக்காக பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தண்டனைக்கு உள்ளாகி ஓர் ஆட்டத்தில் தடைபெற்ற அணித் தலைவர் சந்திமல் இன்று மீண்டும் அணியுடன் இணைகிறார். அத்துடன் ஏனைய வீரர்கள் தத்தமது காயங்களில் இருந்து மீண்டு மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளனர். இதனால் இலங்கை அணி இன்று பலமுடன் உள்ளதாகவே கருதப்படுகிறது.

சுழல்பந்து வீச்சாளர் கேரத் இலங்கை அணியின் பெரும்பல மாகவே கருதப்படுகிறார்.

தென்னாபிரிக்க அணியைப் பொறுத்த வரையில் பிளாசிஸின் தலைமையின் கீழ் அந்த அணி இன்று களமிறங்குகிறது. காயத்தில் இருந்து விடுபட்டு களம்திரும்பியுள்ள ஸ்ரெய்ன் தென்னாபிரிக்காவுக்கு இமாலயப் பலம். அவரை விட அம்லா, பவுமா, குயின்டன் என்று துடுப்பாட்ட வரிசை பலமாகவே யுள்ளது. நெக்டி, ரபாடா, மகாராஜ் என்று பந்துவீச்சு வரிசையிலும் தென்னாபிரிக்க அணி மிளர்கிறது. ஆடுகளப் புரிதலும், அதன் மீதான அனுபவமும் இல்லாதமை தென்னாபிரிக்காவுக்குப் பாதகமாக அமைய வாய்ப்புண்டு.

(ம)


ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.





A/L கருத்தரங்கு
ஊடகவியல் A/L 2018
என்.கஜிதரன்
17,18,19 ஆம் திகதிகளில்.
நேரம்: 2.00P.M
பொருளியற் கல்லூரி, யாழ்.நகர்
தொடர்புகளுக்கு:- 077 395 6158 075 916 0431
(சி-3985)



"பிஸ்னஸ் அமோகமா நடக்குறதால கை நிறைய இலாபம் கிடைக்குதா?"
"கையில இருக்கிற காச ஏன் கையிலயே வைச்சிருக்கீங்க?"
கையில் இருக்கும் பணத்திற்கு
அதி விசேட சேமிப்பு வட்டியை பெறுங்கள்
8.75%
"கார், காணி வித்த காசு கையிலயா?"
தற்போதே உங்கள் பணத்தை செலான் மணி மார்க்கட் சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்து, 8.75% (வ.வ) எனும் விசேட உயர் வட்டியை பெறுங்கள். தினசரி வட்டி கணக்கிடப்படுவதுடன், விரும்பிய போது பணத்தை வைப்புச் செய்வதுடன், மீளப் பெறவும் முடியும்.
SEYLAN 30
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ரு. 1,000,000 அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு 8.75% | ரு. 500,000 - ரு. 999,999 7%
மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அழையுங்கள்: 011 200 88 88 | பிரவேசியுங்கள்: www.seylan.lk
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி



வாழ்முற்றம்
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
076 443 8620





உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை
14-7-2018 முதல் தினமும்





- பனைசார் உற்பத்திப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- இயற்கை விவசாய மரக்கறிகள்
- இயற்கை விவசாய இடுபொருட்கள்
- வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள்
- இயற்கை உரங்கள்
- கைவினைப் பொருட்கள்
- மட்பாண்டம்
- பாதணிகள்
- உலர் உணவுப் பொருட்கள்
- கடல் உணவுப் பொருட்கள்
- இரசாயன மற்ற ஆரோக்கிய பானங்கள்
- ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
- சித்திரங்கள்
- பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)

உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்திரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.